www.tamilarangam.net

# இசை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# முற்ற வெளியும் நெருஞ்சி முள்ளும்.

மேகம் கறுப்பானதாக...
எலும்புக்கூடாய்
ஹெலிகளும்
சவமெழுப்பும் இரைச்சலும்...
ராஜ்ஜிய சேனையின்
தலைவருக்கு
வானத்தில் அணிவகுப்பும்
வேட்டுக்களும்.

முற்ற வெளியில்
நெருஞ்சி முள்களுக்கு மேலே
நான்
நேர்த்திக் கடனாளியாய்....
செத்துப் போவது உறுதி.
மனம் போட்ட கணக்கில்
பெண்சாதி- பிள்ளைகுட்டி
வாரிசுச் சொத்து
இத்யாதி...

மேலே பொம்பர்,
கீழே நெருஞ்சி
அறுந்து விழுந்து துடித்து
கோழியாய்
உயிரைக் கூவியநான்.

பனம் பழங்கள்
பனையே இல்லாத இடத்தில்
விழுந்து வெடித்தன.
உயிர் குடித்தன.

கதறிக் கதறிச் சாகினம்;
ஓடிப்போனவை
அகழியிலை விழுகினம்
சாகினம் சிலர்
அரைவாசியாய் ஓடுகினம்.

கையை அகல விரித்து
நெருஞ்சி முள் நிறைந்த
கால்களைத் தூக்கி
பரத நாட்டியமாய்
நடக்கின்றேன்.

"முள்" கொஞ்சம் கொஞ்சமாய்
உள்ளங்கால்...
சதை என்று
நாளமும் இதயமும்
வேதனைப்பட நடக்கின்றேன்.

இன்னும் செல்ல
நானும் சாகலாம்
உயிர் போனால்.....
சந்தோஷிக்கலாம்.
எங்களுக் கெல்லாம்
வேதனை இரண்டு,
ஒன்று நெருஞ்சி முள்...?
.?....? .....?.....?

- இளைய அப்துல்லாஹ் -

www.tamilarangam.net

# ஓசை

காலாண்டிதழ்

1994
தை - பங்குனி

ஓசை - 5
ஒலி - 1

இதழ் 15

ஆசிரியர் குழு

தொடர்புகளுக்கு .

"Oosai"
C.L.A.L.P.
B.P : 701 - 09
75425 Paris Cedex
France.

P'RAYA
87 RUE DE COLOMBES
92600 ASNIERES SUR -
EINE ; FRANCE

## இந்த இதழில்...

**பிள்ளைகளின் எதிர்காலம்**
- மாவை. நித்தி

**சுவடுகளுடன்.....**
- ஓசை

**என்னுடன் இரவைக்கழித்த நிலவு**
- முகமட் அபார்

**ஓசைக்கு...**
- வாசகர்

**எந்த தமிழ் உயர்ந்த தமிழ்**
- பேராசிரியர். சக்திப்புயல்

**தமிழ் அழகியல்**
- து. குலசிங்கம்

**பொய்மான் வேட்டை**
- செல்வமதீந்திரன்

**புதிய குருஷேத்திரம்**
- வி. மைக்கல் கொலின்

**தஸ்லிமா நஸ்ரீன்**
- அசோகன்

**அவுஸ்ரேலியாவில் ஈழத்தமிழர்..**
- லெ. முருகபூபதி

**சந்தி**
- இளவாலை விஜயேந்திரன்

**அகதி**
- குப்பிளான் ஜெகன்

**சிறுகதை**
- ப. வி. ஸ்ரீரங்கன்

**அந்தக் காட்டுப்பூமரம்**
- சோலைக்கிளி

**காசிஆனந்தன் கதைகள்**
- சி. சிவசேகரம்

**குட்டிக்கதை இலக்கியம் பற்றி..**
- சி. ஜகேந்திரன்

**பொப்பி மலரும்....**
- இளைய அப்துல்லாஹ்

**பாரிஸில் எகிப்தோமானியா**
- ந. அன்பழகன்

இதழ்
தொகுப்பும் வடிவமைப்பும்
- புவனன் -

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



ஓசையும் ஐந்தாவது வருடத்திற்கு நகர்ந்திருக்கிறது.
சிற்றிதழ் ஒன்று - அதுவும் புகலிடத்தில் - ஐந்தாண்டு காலம் என்பது மிகப்பெரிய காலம்தான்.
ஆனால் இந்த ஐந்தாண்டு காலத்திற்குள் "ஓசை" எதைச்சாதித்திருக்கிறது என்ற கேள்வி எழும்போது , சற்று சங்கடமாகவே இருக்கிறது.
"ஓசை" ஓர் தரமான இதழ் என்ற நற்சான்றிதழ் பலமட்டத்திலும் வழங்கப்பட்டிருப்பது என்னவோ உண்மைதான். இதற்கு "ஓசை" எழுத்தாளர்களே பொறுப்பு. "ஓசை"யின் நன்றிக்குப் பாத்திரமானவர்கள்.

தவிர புகலிடச்சஞ்சிகை என்ற வகையில் "ஓசை" என்ன அடையாளத்தைப் பதித்திருக்கிறது ?
ஈழத்தமிழர்கள் புலம்பெயர்ந்ததால், தமிழ்இலக்கியம், புகலிடஇலக்கியம் என்றொரு புதியபரிமாணத்தை எட்டியிருக்கிறது என்று பெருமைப்பட்டுக்கொள்ளும் நாம், புகலிட இலக்கியம் என்றால் என்ன ? இந்த இலக்கியம் எந்த வகையில் வேறுபட்டு நிற்கிறது போன்ற கேள்விகளைக் கேட்கத் தவறிவிடுகிறோம்.

- இதுவரை எத்தனை வேற்றுமொழிப் படைப்புகளை தமிழ்ப்படுத்தியிருக்கிறோம் ?
- எத்தனை எழுத்தாளர்களைத் தமிழுக்கு அறிமுகப்படுத்தியிருக்கிறோம் ?
- எவ்வளவு அறிவியற் தகவல்களை தமிழுக்குக் கடத்தியிருக்கிறோம் ?
- ..........

சரி, இவற்றைச் செய்வதற்குரிய முன்னெடுப்புகளாவது ?
O

"எட்டுத்திக்கும் செல்வீர் கலைச்செல்வம் கொணர்வீர் "
புளித்துப்போன வாக்கியம் தான். இருப்பினும்,

உலகத்தெருக்களெல்லாம் அகதிகளாகச் சிதறி ஓடிய ஈழத்தமிழர், தம் சமூகத்திற்கு ஈனப்பெயரை ஏற்படுத்திக்கொடுத்தனர் என்பதோடு, தம் மொழிக்கும் சமூகத்திற்கும் நல்லபல பணிகளையும் ஆற்றினர் என்றும் வரலாறு பதிவு செய்து கொள்ளட்டும்.
எழுத்தாளர்கள், வாசகர்கள், கற்றறிந்தோர் அனைவரையும் கைகோர்க்க அழைக்கிறது ஓசை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பிள்ளைகளின் எதிர்காலம்

## அவுஸ்திரேலியாவில் பாதிப்பை ஏற்படுத்திய கருத்தரங்கு.

- மாவை. நித்தியானந்தன் -

மக்கள் ஒன்றுகூடித் தம்மைப் பாதிக்கும் ஒரு விஷயத்தைப் பற்றி அக்கறையாகவும் விரிவாகவும் ஆய்வு செய்தல் எமது சமூகத்திலே அதிகம் நிகழும் ஒன்றல்ல. இத்தகைய ஒரு நிகழ்வு அவுஸ்திரேலியாவில் அண்மையில் நடந்தது.

"எமது பாரம்பரியச் சூழலுக்கு வெளியே வளரும் எங்கள் பிள்ளைகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள்" என்ற தலைப்பிலான கருத்தரங்கொன்று அவுஸ்திரேலியாவின் விக்டோரியா மாநிலத்திலுள்ள மொனாஷ் பல்கலைக் கழகத்தில் ஜனவரி 2 ம் திகதி நடைபெற்றது. காலை 9. 30 மணியிலிருந்து மாலை 7 மணி வரை ஐந்து பகுதிகளாக நடைபெற்ற இக் கருத்தரங்கிலே இளைய தலைமுறையினரும், முதிய தலைமுறையினருமாகப் பெருந் தொகையானோர் கலந்து கொண்டு தம்மை உடனடியாகப் பாதிக்கும் பல பிரச்சினைகளைப் பற்றி ஒழுங்கான ஒரு ஆய்வினை மேற்கொண்டனர். இக் கருத்தரங்கை மெல்பன் கலை வட்டம் ஒழுங்கு செய்திருந்தது.

அவுஸ்திரேலியாவில் நூற்றுக்கு மேற்பட்ட இனத்தவர்கள் வாழ்ந்த போதிலும், ஆங்கிலேய செல்வாக்கே வலுவானதாயும், மேலோங்கியதாயும் இருக்கிறது. அதேவேளை பல்கலாச்சார வளர்ச்சி, அரசாங்கத்தின் பிரகடனப் படுத்தப்பட்ட கொள்கை இச்சூழ் நிலையில், தமிழ்ச் சமூகத்தின் இளைய தலைமுறையினர் தமது கலாச்சாரமென எதைக் கருதுகின்றனர்? தமிழ்க் கலாச்சாரமென எதனை நினைக்கின்றனர் ? அது தமக்குப் பெருமை தரும் ஒன்றென எண்ணுகின்றனரா? அல்லது தேவையற்றதென நினைக்கின்றனரா? தமிழைக் கற்றல்வேண்டுமெனக் கருதுகின்றனரா? தமது அடையாளமென எவற்றை நினைக்கின்றனர்? இவை போன்ற பல கேள்விகளை இளையோர் நோக்கிலிருந்து ஆராய்ந்து இளம் தலைமுறையைச் சேர்ந்த மூவர் கட்டுரைகள் படித்தனர். தொடர்ந்து முதிய தலைமுறையினரின் பல விதமான கேள்விக ளுக்கும் தமது நோக்கில் விடை கூறினர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இளையோர் கண்ணோட்டத்தில் தமிழ்க் கலாச்சாரத்தை முற்றாக நிராகரிக்காத போக்கும், தமக்கென ஒரு அடையாளம் தேவையென்ற கருத்தும் பொதுவாக வெளிப்பட்டன. அதே வேளை, பல பெற்றோர்களின் எதிர்பார்ப்புகளில் காணப்படும் நியாயமற்ற தன்மை சுட்டிக் காட்டப்பட்டதோடு, அவை எல்லாவற்றையும் நிறைவு செய்ய இளையோர் தயாராக இல்லை என்பதும் வெளிப்பட்டது. இரு கலாச்சாரச் சூழலில் வாழ்வது சாத்தியமென்றும், ஒருவர் ஒரே நேரத்தில் ஒரு தமிழனாகவும் ஒரு அவுஸ்திரேலியனாகவும் வாழலாம் என்றும் கருத்துக்கள் முன் வைக்கப்பட்டன.

இதனைத் தொடர்ந்து, புலம் பெயர்ந்தவர்களான கிரேக்க, இத்தாலிய, கம்போடிய சமூகங்களைச் சேர்ந்த மூவர் தமது சமூகங்களின் புகலிட அநுபவங்களை எடுத்துச் சொன்னார்கள். பல சந்ததிகளாகக் கிரேக்கர்களும், இத்தாலியர்களும் அவுஸ்திரேலியாவில் வாழ்கின்றனர். சொந்தக் கலாச்சாரத்தையும், அடையாளத்தையும் முற்றாகத் துறந்து, பெரும்பான்மையினருடன் முழுமையாகச் சங்கமமாக முயற்சிப்பது பெரும் இழப்பை ஏற்படுத்துவதாகும் என்பது இப் பேச்சாளர்கள் வலியுறுத்திய விடயங்களில் ஒன்று.

மூன்றாவது அமர்வு, பெற்றோருக்கும் பிள்ளைகளுக்கும் இடையிலான உறவினை ஆராய்ந்தது. பெற்றோருக்கும் பிள்ளைகளுக்குமிடையே தோன்றும் முரண்பாடுகள் பல குடும்பங்களில் அமைதியின்மையையும், சீர் குலைவையும் ஏற்படுத்தி வருகின்றன. இந்த முரண்பாடுகளுக்கான காரணிகள் என்ன, இப் பிரச்சினையை எவ்வாறு எதிர்கொள்வது என்பன பற்றிய கலந்துரையாடல்கள் நடைபெற்றன. சிறு வயதிலிருந்தே ஒரு புரிந்துணர்வினைக் கட்டியெழுப்ப வேண்டிய தேவையும், பெற்றோர் "ஜனநாயக " முறைகளைப் பேண வேண்டிய தேவையும் வலியுறுத்தப்பட்டன. பெற்றோர் பலர் நடந்து கொள்ளும் முறையின் நியாயம் பற்றி, அவர்களின் தளத்திலிருந்து நோக்கப்பட்டது.

தொடர்ந்து தனித்துவம், கலாச்சாரம், மொழி ஆகியன பற்றிக் கட்டுரைகள் படிக்கப்பட்டன. இங்கே இரு மொழி பேசி இரு கலாச்சாரங்களை ஓர் நேரத்தில் பேணி வாழ்வது பற்றி மீண்டும் ஆராயப்பட்டது. பல் கலாச்சாரச் சூழலில் தனது தேசிய அடையாளத்தை நிறுவ முற்பட்டுக் கொண்டிருக்கும் இந்த நாட்டில், நாம் எமது அடையாளத்தையும், மொழி, பண்பாட்டையும் பேணுதலின் பொருத்தப்பாடும், அவசியமும் விவாதிக்கப்பட்டன. எமது பழமை தரும் உளப்பெருமையும் குறிப்பிடப்பட்டது. தமிழை எமது பிள்ளைகள் கற்க வேண்டிய தேவையும், கற்பித்தலில் உள்ள பிரச்சினைகளும், இதில் பெற்றோரின் பங்கும் ஆராயப்பட்டன. மூன்று நான்கு மொழிகளை ஒரு பிள்ளை கற்றுக் கொள்வதும் நன்மையே அன்றி, அப் பிள்ளைக்குக் கெடுதல் எதுவும் இல்லையென வலியுறுத்தப்பட்டது.

ஐந்தாவது அமர்வில் சபையோர் அவதானிப்புகளும் தொகுப்புரையும் இடம்பெற்றன. கருத்தரங்கம் முழுவதிலும் கேள்விகளாகவும், அபிப்பிராயங்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

களாகவும் சபையோரின் உற்சாகம் குன்றாத பங்களிப்பு தொடர்ச்சியாக இடம்பெற்றமை குறிப்பிட்டுச் சொல்லப்பட வேண்டியது.

இக் கருத்தரங்கம் அவுஸ்திரேலியாவில் வாழும் தமிழர்களிடையே இந்தப் பிரச்சினைகளின் மீதான அக்கறையை ஏற்படுத்துவதில் பெரிய அளவிலான பங்களிப்பைச் செய்துள்ளது. சமூக மட்டத்தில் இவை தொடர்ந்து விவாதிக்கப் படுவதை வெளிப்படையாகவே காணக்கூடியதாகவும் உள்ளது. தனிப்பட்டவர் களின் சந்திப்புக்களிலும், குடும்பங்களுக்கு உள்ளேயும் இந்த விஷயங்கள் இன்று அலசப்படுகின்றன. இக் கருத்தரங்கம் எடுத்துக் கொண்ட விஷயங்க ளைத் தனித்தனியே பிரித்து மேலும் ஆழமாக ஆராயும் நோக்கோடு, தொடர் கருத்தரங்குகளை நடாத்தவும் மெல்பன் கலை வட்டம் ஆலோசித்து வருகின் றது. ○

ஜனவரி 13:

## பாரிஸ் - ஈழநாடு பத்திரிகைக் காரியாலயம் சில அநாமதேய நபர்களால் தீவைத்துக் கொளுத்தப்பட்டது.

தீ வைப்பு, ஆட்கடத்தல், தெருச்சண்டித்தனம், கருத் துச்சுதந்திரத்தின் மீதான வன்முறை என்பன இந்த நாடுக ளிலும் தொடர்வது மேலும் அபாயகரமான துர்க்குறி.

பலவீனமான சமுதாயத்தில் தெருச்சண்டியர்கள் முளை விடுவதும் சண்டித்தனங்கள் தலைவிரித்தாடுவதும் இயல் பான ஒன்றே.
"எரிகிற வீட்டில் பிடுங்குவது வரையில் லாபம்" என்ற போக்கிற் செயற்படும் அனைத்துப் புத்திமான்களும் இச் சம்பவங்களுக்குப் பொறுப்பேற்க வேண்டும்.

இன்னும், அராஜகம் வந்து வீட்டுக்கதவைத் தட்டும் வரை "பிரச்சினை எனக்கில்லையே" என்று கண்களை மூடிக்கொண்டிருப்பது அறிவீனம் என்பதை அறிவுறுத்தவிரும் புவதோடு, சம்பவங்களுக்கு "ஓசை" தனது கண்டனங்க ளையும் தெரிவித்துக் கொள்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



## இழப்புக்கள் அர்த்தமற்றவையாகிப் போய்விடக்கூடாது.

- சுவடுகள்

நோர்வேயிலிருந்து வெளிவரும் மாதஇதழான சுவடுகள் ஐந்தாண்டுகளுக்கும் மேலாக தொடராக வெளிவந்து கொண்டிருக்கிறது.

அதிகமான அரசியற்பக்கங்களுடன், கூடியளவு புதிய இலக்கியச்செய்திகள், படைப்புக்களை தாங்கி வரும் சுவடுகள் இதழினை ஓசை வாசகர்களுக்கும் அறிமுகப்படுத்தும் நோக்கோடும், ஐரோப்பியச்சூழலில் சிற்றிதழ் ஒன்று எதிர்கொள்ளும் நெருக்கடிகள் அதன்பின்னால் இருக்கக் கூடிய கடினஉழைப்பு என்பவற்றை வெளிக்கொணரும் நோக்கோடும், நேர்காணலுக்காக அணுகிய போது மிகவும் மகிழ்வுடன் சம்மதித்தனர்.
ஆனால் நேரில் சென்று சந்திக்க முடியாத நெருக்கடி நிலையில், கடிதமூலம் பெறப்பட்ட "நேர்காணலை"யே உங்களுக்குத்தருகிறோம்.

- ஓசை -

"SUVADUGAL"
Herslebs Gate 43,
0578 Oslo,
**Norway**

## சுவடுகளுடன் ஓர் காணல்

**சுவடுகள் வெளியிட வேண்டும் என்ற எண்ணம் ஏன் உருவானது ?** 1985 ற்குப்பின்தான் அதிகளவில் ஈழத்தமிழர் நோர்வேக்கு வந்தனர். இவ்வாறு வந்த சிலரது அகதி விண்ணப்பங்கள் அரசால் நிராகரிக்கப்பட்டபோது, அவர்களுக்கு ஒஸ்லோவில் உள்ள தேவாலயம் ஒன்று புகலிடம் வழங்கி, அவர்களது பாதுகாப்பை உறுதி செய்தது. இத்தேவாலயத்தின் பிரதம குருவின் தூண்டுதலால் தமிழர்களது நலன்களுக்காக உருவாக்கப்பட்ட அமைப்பான தமிழ் நோர்வே இணைவுகூடத்தின் பல செயற்பாடுகளில் ஒன்றாக, நோர்வேத் தமிழர்களுக்கான ஒரு தமிழ்ச் சஞ்சிகை ஆரம்பிக்கவேண்டும் என்ற ஆர்வத்தால், சுவடுகள் வெளியீடு(-1988 புரட்டாதியில்) தொடங்கியது. இதற்கு நேரடித் தூண்டுதலாக அமைந்தது, ஹாரைட் என்ற பகுதியில் தங்கியிருந்த தமிழகதிகளது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வெளியீடான "கலைமஞ்சரி" என லாம்.

**சஞ்சிகை வெளியிடுவதில் எதிர் கொள்ளும் சிக்கல்கள்...**

ஈழத்தில் ஒரு சஞ்சிகை வெளியி டுவதில் ஏற்படக்கூடிய சிக்கல்கள் (படைப்புகள், பொருளாதாரம்) அனைத்தும் இங்குள்ளன. அவற்றை விட மோசமான நேரத் தின் பற்றாக்குறை நெருக்கடியை ஏற்படுத்துகிறது. அழும் குழந்தை யைக் கைமாறக்கூட ஆள்க் கிடை யாத தேசங்களில் இந்தத் "தேவை யில்லாத" வேலைகளில் எத்தனை பேரை "மினைக்கெடுத்த" முடியும்? இங்கு நவீன சாதனங்களின்(உயர் தர அச்சு, கணனித் தொழில் நுட் பம்) உதவி இருந்த போதும் இவற் றிற்குத் தேவையான பணத்தை வாரி வழங்கும் நிலை சுவடுகளுக்கு இல்லை என்பது துரதிஷ்டவசமா னது.

**ஐரோப்பிய (புலம்பெயர்ந்த?) சூழலில் தமிழ் படைப்பாளிகள் பற்றி சிறிது கூறுங்களேன் ?**

இன்று புலம்பெயர்ந்தோர் இலக்கி யம் என்ற ஓர் சொல் பொதுவாக பாவனைக்கு வருமளவுக்கு ஐரோப் பியத்(மற்றும் வட அமெரிக்க, அவுஸ்த்திரேலிய) தமிழ் எழுத்தா ளர்களால் சாதிக்க முடிந்திருக்கி றது. ஆனால் நாம் எம்மனைவ ரையும் சுய விசாரணைக்கு உட்ப டுத்தி ஆகவேண்டும். எமது எழுத் துகளில் எத்தனை தரமாக உள் ளன? எத்தனை எழுத்துகளைப் பிறமொழிகளில் மொழிபெயர்த் தால் அவர்களால் ரசிக்க முடியும் என்பது போன்ற கேள்விகளை, ஐரோப்பியத் (புலம்பெயர்ந்த) தமிழ் எழுத்தாளர்கள் தம்மையே கேட்க வேண்டும். குறிப்பிட்டுச் சொல்லும் படியான படைப்புகள் எண்ணிக் கையில் சிலவே வந்துள்ளன இதற்கு முக்கிய காரணங்களாக நல்ல படைப்புகள் வாசிக்கக் கிடைக்காமை, சரியான விமர்சனங் கள் வராமை, எல்லாவற்றிற்கும் மேலாக இங்குள்ள சூழலில் பக்கங் களை இட்டு நிரப்ப வேண்டிய தேவை பல பத்திரிகைகளுக்கு (சில வேளைகளில் சஞ்சிகைகளுக்கும் தான்) இருப்பதால் இலுப்பைப்பூக் களே சர்க்கரைகள் எனப் படைப் பாளிகள் மயங்கும் நிலை உள்ளமை என்பனவற்றை கூறலாம். நல்ல படைப்பாளிகளையும், சிந்தனை யாளர்களையும் இந்தச் சூழல் விரைவில் தரும் என்பதற்கான நம் பிக்கைக் கீற்றுகளும் இல்லாம லில்லை.

**'வாழ்வியல் முரண்பாடுகளே படைப்புக்களாகின்றன" என் றொரு கருத்தும் உண்டு. அந்த வகையிற் பார்த்தால் புலம்பெ யர்ந்த படைப்பாளிகள், புலம் பெயர் சூழலுக்குரிய படைப்புக் களையே கொண்டுவரவேண்டும். ஆனால், பெரும்பாலான படைப் பாளிகள் கருவைத்தேடி இங்கி ருந்து இலங்கைக்கு ஓடும் நிலை யினையே காண்கிறோம். ஏன் ?**

புலம்பெயர் சூழல் என்பது உண் மையானதுதான் ; ஆனால் இயல் பானதல்ல. திணிக்கப்பட்டது. எனவே படைப்பாளியின் உணர்வு கள் முற்றாகத் தாய்நாட்டிலிருந்து விடுபடாத சூழலே உள்ளது. இந் நிலையில் அங்கிருந்தே கருவைத் தேடும் நிலை இருக்கும். புலம்பெ யர் சூழலை உள்வாங்கி அதிலிருந்து உருவான நல்ல படைப்புகள் மிக அரிதாகவே உள்ளன என்பது புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தில் ஒரு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவனிக்கப்படவேண்டிய அம்சம். இவ்வாறான ஒருசில (நல்ல) படைப்புகள் பரவலாக வாசிக்கப் பட்டு அவற்றின் தரம் விமர்சனத் துக்கு உள்ளாக்கப்படுகையில் ஏனைய படைப்பாளிகளுக்கு அப் படைப்புகள் உந்துசக்தியாக இருக் கும். மேலும் பல நல்ல படைப்பு கள் இங்குள்ள சூழலைப் பின்ன ணியாக் கொண்டு புலம்பெயர்ந் தோர் இலக்கியத்திற்கு அணிசேர்க் கும்.

**கிடைக்கும் ஆக்கங்களை சுவ டுகள் எவ்வாறு தர நிர்ணயம் செய்கிறது..?**

சுவடுகள் மாத இதழாக இருப்ப தால் முக்கியமாக சமகால நிகழ்வு கள் பற்றிய படைப்புக்களே முக்கிய கவனத்துக்கு உரியன. இப்போதும் சுவடுகளையே தமது செய்தி மூல மாகக் கொண்டுள்ள குறிப்பிட்ட தொகை வாசகர்கள் நோர்வேயில் உள்ளனர். இவர்களது கவனத்துக் குரிய படைப்புகளை தருவது எமது கடமையே.

மறு புறத்தில், குறித்த ஓர் இதழை எடுப்பின், அந்த இதழில் பலதரப்பு வாசகர்களது ரசனையைக் கவனத் திற் கொண்டு, ஒரு "சமநிலை" இருக்குமாறு படைப்புகளைத் தொகுப்பது வழக்கம். இவற்றோடு படைப்புகள் இயலுமானவரை மனித நேயத்தையும், தாய்நாட்டின் மீதான நேசத்தையும் வலியுறுத்து வதாகவும், வாசகனைச் சிறிதள விலாவது தரமுயர்த்தக் கூடியதா கவும் அமைய வேண்டும் என்பது சுவடுகளின் விருப்பம். படைப்பு களுக்குத் தட்டுப்பாடு நிலவும் சூழ லில் எமது எதிர்பார்ப்புகளை முற் றிலும் பூர்த்தி செய்யும் படைப்புகள் -மாதாந்தம் -கிடைக்கும் என்று எதிர் பார்ப்பது கடினம்.

இந்தநிலையில் சுவடுகளுக்குச் சில எழுத்தாளர்கள் தமது சிரமங்களுக் கிடையில் தொடர்ந்து எழுதி வரு கின்றனர். இவர்களுக்கு எமது நன்றி எப்போதும் உரியது.

**ஒவ்வோரு சஞ்சிகைகளும், பத் திரிகைகளும், ஒவ்வோரு 'தர' வாசகர்களை இலக்கு வைத்தே செயற்படுகின்றன. சுவடுகளின் வாசக இலக்கு எது ?**

சுவடுகளின் பாதிக்கும் அதிக தொகையான வாசகர்கள் ஐரோப் பிய சூழலைப் பின்னணியாகக் கொண்டவர்கள். கணிசமான தொகையினர் ஈழத்தமிழர்கள். பிரதேச ரீதியிலான இவ் வேறு பாடே வாசகர்களது தன்மை வேறுபாடுகளை உணர்த்தக்கூடியது என நம்புகிறோம்.

அடிப்படையில் தாம் வாழும் சூழல் பற்றி மாத்திரமன்றித், தாயகம் பற் றியும் நியாயபூர்வமான அக்கறை வாசகர்களிடத்து ஏற்பட வேண்டும் என்பது சுவடுகளது விருப்பு. எனவே, பொழுது போக்கிற்காக மாத்திரம் சஞ்சிகை படிக்காத, சிந் தனையை வளர்க்க விரும்பும் வாசகர்களே எமது இலக்கு என லாமோ தெரியாது. ஆனால் அடிப் படையில் சகல தரப்பினரையும் சென்றடைவதன் அவசியத்தைச் சுவடுகள் ஆரம்ப காலம் முதலே உணர்ந்தது, அதற்கேற்பவே செயற் பட்டு வருகிறது. குறிப்பிட்ட தரப்பு வாசகனை நிராகரிப்பது எமக்கு உடன்பாடற்ற ஒன்று. சுவடுகள் ஈழத்தின் உயிர்த்துடிப்பை இங்கும், இங்குள்ள சூழலையும் வாழ்வையும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்துக்கும் பரிமாறும் ஒரு போக்கைப் பிரதானமாகக் கொண்டிருப்பதால், அதற்கேற்பப் பலதரப்பு (பல்வேறு ரசனை மட்ட) வாசகர்களையும் அணுகும் விதத்தில் சுவடுகளைத் தயாரிக்கிறோம்.

**இதுவரை ஐம்பது இதழ்களுக்கு மேல் வெளியிட்டிருக்கிறீர்கள். வாசகப் பரப்பில் ஏதாவது விரிவு...?**

ஐரோப்பிய நாடுகளில் (ஒப்பீட்டளவில்) மிகக் குறைவாக தமிழர்கள் (5800) வாழும் நாடுகளில் நோர்வேயும் ஒன்று. பரப்பில் நோர்வே மிகப் பெரியதாக இருப்பதால் நேரடித் தொடர்புகள் மூலம் வாசகர்களை சந்திப்பது சிரமம். இதனால் நோர்வேக்குள் குறிப்பிட்டளவுக்கு மேல் வாசகர்களை விரிவாக்கல் சிரமம். ஆனால் நோர்வேயின் சகல பகுதிகளிலும் சுவடுகள் வாசிக்கப்படுகிறது.

ஏனைய ஐரோப்பிய நாடுகளைப் பொறுத்தவரை பலருக்கு சுவடுகளுக்கான சந்தா செலுத்துவது - சுவடுகளின் "உயர்விலை" காரணமாகச் சிரமமானது. நோர்வே செலவு நிறைந்த நாடாக இருப்பதால் இதழ் தயாரிப்புச் செலவும், தபாற் செலவும் அதிகம். எனினும் கணிசமான தொகையினர் சந்தா செலுத்திச் சுவடுகளை படிக்கின்றனர். இது உற்சாகம் தரக்கூடிய ஒன்று.

ஈழத்தில் இருந்து தொடர்ச்சியாகப் பலர் சுவடுகளை தாம் படித்ததாகவும், தாமும் சுவடுகளைப்பெற விரும்புவதாகவும் எழுதுகின்றனர். இது சுவடுகள் அங்கு பரவலாக வாசிக்கப் படுவதைச் சுட்டிக் காட்டுகிறது. அங்கு செல்லும் பிரதிகள் ஒவ்வொன்றும் ஒன்றுக்கு மேற்பட்டோரால் படிக்கப்படுவதால் கணிசமான வாசகர்களை சுவடுகள் ஈழத்தில் பெற்றிருக்கிறது எனத் துணிந்து கூறலாம்.



ஐரோப்பாவில் புற்றீசலாகப் படையெடுக்கும்தென்னிந்திய சினிமாக் குப்பைகளால் வாசிக்கும் நேரம் பாழடிக்கப்படுவதுடன், அங்கிருந்து மலிவு விலையில் குவியும் மூன்றாந்தரச் சஞ்சிகைகளுடன், அதிக விலைக்கே விற்க நிர்பந்திக்கப்பட்ட சுவடுகளோ ஏனைய ஐரோப்பிய சிறு சஞ்சிகைகளோ நேரடிப் போட்டியிட முடியாது என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**"ஆக்கங்களிலோ, சஞ்சிகைக ளிலோ ஒருவரது கருத்து எவ்வாறுள்ளது என்பதுதான் முக்கியம். அழகியல் பற்றி அலட்டிக் கொள்வது விண்விரையம்" என்று சில "புத்திஜீவி"கள் கருதுகின்றார்களே! இந்தக்கருத்துப்பற்றி..**

படைப்பிலக்கியம் பற்றி மட்டுமல்ல, சஞ்சிகைகளின் வடிவமைப்புப்(Lay out) பற்றியும் ஒவ்வொருவரது கருத்தும் ரசனையும் வேறுபட்டவை. வாசகனை வென்றெடுக்க நாம் சொல்லும் கருத்து மட்டுமல்ல, அதை வழங்கும் வடிவத்திலும் நாம் கவனமெடுக்க வேண்டும். வணிக சஞ்சிகைகள் இதில் எடுக்கும் கவனத்தில் பாதிகூடப் பெரும்பாலான சிறுசஞ்சிகைகள் எடுப்பதில்லை. சஞ்சிகை வடிவமைப்பே ஒரு தனிக் கலையாக, துறையாக, தொழிலாக வளர்ந்துள்ள மேலை நாடுகளில் வசிக்கும் நாம் அவர்களிடமிருந்து இத்துறை தொடர்பாகக் கற்றுக் கொள்ள நிறைய உண்டு. சஞ்சிகை வடிவமைப்பு எம்மிடையே வளராத கலையாகவே உள்ளது. தமிழ் நாட்டிலிருந்து சிலகாலம் முன் வெளிவந்த "அஃ" இதழ் தவிர்த்துப் பார்த்தால், சஞ்சிகை வடிவமைப்பில் சோதனை செய்த தமிழ் இதழ்கள் இல்லையென்றே கூறலாம்.

வாசகன் ஒருவனை, ஒரு படைப்பை வாசிக்கத் தூண்டுவது, அந்தக் குறிப்பிட்ட படைப்பு கூறும் விடயம் மட்டுமல்ல, அது அளிக்கப்படும் விதமும் தான் என்பது ஓர் தெளிவான உண்மை. ஒரே படைப்பை வெவ்வேறு வடிவங்களில் பிரசுரித்தால் அழகான விதத்தில் படைக்கப்பட்டதையே வாசகன் முதலில் தெரிவான். இதுவே சஞ்சிகையின் வடிவமைப்பின் அடிப்படை. பக்கங்களை அடைசலாக நிரப்பிய சஞ்சிகைகளை வாசகன் இலகுவில் நிராகரித்துவிடுவான். இதனால் அந்தக் குறிப்பிட்ட சஞ்சிகை சொல்லவரும் விடயம், வாசகனின் கவனத்திலிருந்து இலகுவில் விடுபட்டுப் போய் விடலாம். அந்தநிலையில் படைப்பின் பிரசுரமே ஏறத்தாழப் பயனற்றுப் போய்விடும்.

நீங்கள் குறிப்பிடும் "புத்திஜீவி"களது கருத்து யதார்த்தத்தில் சாதாரண வாசகனது இயல்பை நிராகரிக்கும் போக்கேயன்றி வேறல்ல.

**கருத்துச் சொல்லவே தயங்குகிற அல்லது கருத்து சொல்ல தெரியாத இன்றைய ஈழப் போராட்டம் தொடர்பாக...**

இலகுவில் சுருக்கமாக பதில் சொல்லிவிட முடியாத இக்கேள்விக்குச் சுவடுகள் பல இதழிலிருந்து பதில் தர வேண்டும். எனினும் இங்கு சுருக்கமாக...

புலம் பெயர்ந்தோரில் ஒரு குறித்த தொகையினரைலப் புலம் பெயரவைத்ததே இன்றைய போராட்டம் தான் என்ற துர்ப்பாக்கிய நிலையை முதலில் நாமனைவரும் ஏற்றுக்கொண்டேயாக வேண்டும். பல ஐரோப்பியச் சஞ்சிகைகளின் வெளியீடுகூட இவ்வகையானதே.

ஒரு விலங்கைக் கழற்றி இன்னொரு விலங்கு மாட்டுவதற்கான போராட்டமாக விடுதலைப் போர் அமைந்துவிடக்கூடாது என்பதே எமது அக்கறை. இதனாலேயே அடிப்படை மனித உரிமைகளை மீறும் செயல்களையும், மாற்றுக்கருத்துக் கொண்டோரை சிறையில



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டைக்கும் கொடுமைகளையும், சகல இன மக்களுக்கு எதிரான அநியாயங்களையும் தொடர்ச்சியாக கண்டித்து வருகிறோம். துரதிஷ்ட வசமாக எமது தெளிவான நிலைப் பாட்டைத் திரித்து, நாம் தமிழ் மக் களது விடுதலைக்கு எதிரானவர் கள் என்ற பிரச்சாரத்தைச் சிலர் மேற்கொண்டு வருகின்றனர். எமது நிலைப்பாடு தமிழ் மக்களது விடு தலை, ஏனைய இனங்களை பாதிப் பதாக இருக்கக்கூடாது என்பதை யும் உள்ளடக்கியது.

வரலாற்றில், குறிப்பாகக் கடந்த பத்தாண்டுகளுக்குள் தமிழீழ மக் கள் இழந்தவைகள் அதிகம். இந்த இழப்புகள் அர்த்தமற்றவையாகப் போய்விடக்கூடாது. இன்றும் எதி ரியின் துப்பாக்கி வாயில் பல்லாயி ரம் தமிழீழ இளைஞர்கள், சிறார் கள் தமது உயிரை வெறுத்துப் போராடத் துணிவதைக் காண்கி றோம். இந்தப் போராளிகளது தன் னலமற்ற, மதிப்பிற்குரிய அர்ப்ப ணிப்புகள் வெறும் அதிகாரக் கைமாற்றத்திற்காகப் பலியாகி விடக்கூடாது. அந்தத் துப்பாக்கிகள் மூளையற்ற துப்பாக்கிகளாக ஆகி விடக் கூடாது என்ற ஏக்கம் எம் முடையது.

தமிழ் மக்களது சுயநிர்ணய உரி மையைச் சிங்கள அரசு அங்கீகரிக் கப் போவதில்லை. அவ்வாறு அங் கீகரித்து, வடக்கு கிழக்கை நிரந்த ரமாக (எதுவித நிபந்தனைகளும் இன்றி) இணைத்து, முஸ்லிம் மக் கள் செறிவான பிரதேசங்களில் அவர்களது சுய அதிகாரத்திற்கான பிரிவுகளை உள்ளடக்கிய ஒரு தீர்வை வழங்க சிங்கள அரசு தயா ரானால், அது தமிழ், முஸ்லீம் மக் களை திருப்தி செய்யக்கூடியது. முஸ்லிம், மலையக மக்கள் தமது உரிமைகளையும் மனித கௌரவத் தையும் பாதுகாக்க அவர்களுக்கும் சுயநிர்ணய உரிமை வழங்கப்பட வேண்டும் என்று எழுந்துவரும் கோரிக்கையில் நியாயத்தன்மை இருப்பதை மறுக்க முடியாது.

வடக்கு கிழக்கு மக்களது அபிலா ஷைகளைப் பூர்த்தி செய்ய அரசு தயாராக இல்லாவிடில், தொடர்ச் சியாகப் போராடும் நிலைக்கு தமிழ், முஸ்லிம் மக்கள் தள்ளப்பட் டுவிடுவர். மறுபுறத்தில் மலையக மக்களது சகல உரிமைகளும் எவ் வித நிபந்தனையுமற்று வழங்கப் பட்டு, அவர்களது வாழ்க்கைத்தரம் மேம்படுத்தப்படாவிடில் அங்கும் இந்நிலை தோன்ற நாளாகாது. மலையக மக்களது உரிமைகள் தேர் தற் கூட்டங்களுக்கான பேரமாகக் குறுகிப் போனது துரதிர்ஷ்ட வச மானது. இலங்கையில் சகல இனங் களும் மதங்களும் சமமாக மதிக்கப் படும் நிலை எற்படும்வரை தமீழத் துக்கான போராட்டமோ இன் னொரு ஆயுத எழுச்சியோ தவிர்க்க முடியாமல் இருந்து கொண்டே இருக்கும்.

இலங்கையின் இன்றைய துர்ப்பாக் கிய நிலைக்குப் பல தரப்பினரும் பொறுப்பேற்க வேண்டும். இன் றுள்ள நிலைமைகள் சீரடைவது, சகல தரப்பினரும் தம்மைத் தாமே செய்துகொள்ளும் 'அக்கினிப் பிர வேசத்'தில் தான் தங்கியிருக்கிறது. வரலாற்றின் பாதையில் மக்களே வெல்வர் என்பதைத் தமீழமும் ஏனைய ஒடுக்கப்பட்ட இன மக்க ளது விடுதலையும் நிரூபிக்கும்.

**புகலிடம் கோரிய நாடுகளில்,**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**ஒவ்வொருவரதும் இருத்தல்களே கேள்விக்குரியான நிலையில், ஈழப்போராட்டம் தொடர்பாக, இங்கு நீண்டகாலத்திட்டங்கள் வகுத்துக்கொள்வது பயன் தருமா?**

எமது போராட்டத்தின் ஒரு பக்க விளைவாகவே இதனைப் பார்க்க முடியும். மாற்றுக் கருத்தைக் கொண்டிருத்தலே கொலைக் குற்றமாக கருதப்படக்கூடிய ஈழச் சூழலில், மாற்றுக் கருத்தை யாரும் வெளிப்படையாகப் பேச விவாதிக்க அனுமதிக்கப்படுவார்கள் என யாரும் எண்ணினால் அது சுத்த முட்டாள்தனம்.

எனவே, இன்றைய (தமிழீழத்தின் அவல) நிலைக்கு மாற்றீடாகஎதை யாவது சிந்திப்பவர்கள் வேறு நாடுகளில் தான் (உயிருடன்) இருக்க முடியும் என்பது கொடிய யதார்த்தம். இந்தப் பின்னணியிலேயே ஈழப்போராட்டம் தொடர்பாகச் சிந்திக்க முற்படுபவர்களைப் பார்க்க வேண்டும். தமது சகல நலன்களையும் இழக்கத் தயாராகித் தமது தாயகத்தினதும், சகல தரப்பு மக்களதும் உண்மையான விடுதலைக்காகத் தம்மை அர்பணிக்கத் தயாராக இருந்த எத்தனையாயிரம் பேரை அராஜக வெறியுடன் இயக்கங்கள் தின்று பசியாறியிருக்கின்றன. இவற்றில் இருந்து தப்பியவர்கள் தாம் சரியென நம்பும் கொள்கைக்காக உழைப்பதை, திட்டமிடுவதை எவ்வாறாக தவறாக கொள்ள முடியும்?

இன்னும் சரியாக சொல்லப்போனால், ஒரு புயலைப்போல் மாற்றங்கள் எப்போதும் வரலாம். அப்போது இன்னொரு அரசியற் தலைமையின் தேவைகூட ஏற்படலாம். அத் தேவையைப் பூர்த்தி செய்யும் தகவும் திறனும் இப்போதுள்ள எவருக்கும் இல்லாது போகலாம். அப்படியான நிலையைக்கூடக் கணக்கில் எடுத்தே செயற்பட வேண்டும்.

இவை எல்லாவற்றுக்கும் முன்நிபந்தனையாக இருக்க வேண்டியது, தாயகத்தில் சிறிய அளவிலாவது இயங்கக்கூடிய சக்திகள் இருப்பது தான். அதற்கான சூழல் இலங்கையில் உள்ளதா என்பதை அங்கிருப்பவர்கள்தான் கூறமுடியும்.

> கடந்த பத்ததாண்டுகளுக்குள் தமிழீழமக்கள் இழந்தவைகள் அதிகம்.
> இந்த இழப்புக்கள் அர்த்தமற்றவையாகிப் போய்விடக்கூடாது.

**சுவடுகள் தன்மீதான விமர்சனங்களை எவ்வாறு எதிர்கொள்கிறது?**

நேரடியாகச் சந்திக்கும் வாசகர்களது அபிப்பிராயம்தான் சுவடுகளில் அதிகம் தாக்கம் ஏற்படுத்தக்கூடியது. பெரும்பாலான (முக்கியமாகத் தொலைதூர) வாசகர்கள் இடையிடையே மட்டுமே விமர்சனக் குறிப்புகளை எழுதுவர். எனினும் ஈழத்தில் இருந்து மிகவும் காரசாரமான விமர்சனங்களும் வருவதுண்டு. இவை யாவற்றையும் நிதானமாகக் கேட்டுத் தன்னை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருத்திக் கொள்வதில் சுவடுகள் தொடர்ந்து ஈடுபட்டு வருகிறது. அண்மைக் காலங்களில் சுவடுகளில் ஏற்பட்டு வரும் மாற்றங்கள் விமர்சனங்களின் அடிப்படையில் ஏற்பட்டவை.

இதைவிடச் சில பத்திரிகைகள், முகவரியற்ற கடிதம் போல, புலம் பெயர்ந்தோர் இலக்கியத்தை பற்றி எழுதுகின்றன. இந்த அபிப்பிராயங்களில்/ விமர்சனங்களில் தாம் குறிப்பிடும் குறைகள் எந்தப் பத்திரிகை/ சஞ்சிகையில் வந்தது என்பதைக் கூட இவர்கள்(வேண்டுமென்றே?) குறிப்பிடாது விடுவதால், இவ்வகை விமர்சனங்களைக் கவனத்தில் எடுப்பது, சுவடுகளுக்கு மட்டுமல்ல, எந்த ஐரோப்பிய சஞ்சிகைக்குமே சிரமமானது.

**ஐரோப்பிய சிற்றிதழ்கள் இணைந்து ஓர் பொதுப்பத்திரிகை நடாத்துவது தொடர்பாக நீண்டகாலமாகப்பேச்சு அடிபடுகிறது. இத்திட்டம் பற்றி சுவடுகள் என்ன அபிப்பிராயம் கொள்கிறது ?**

பரஸ்பர நம்பிக்கைகள், நடைமுறைச்சாத்தியங்கள் என்பன இவ்வாறான முயற்சிகளுக்கு அடிப்படையில் உள்ளன. ஏற்கனவே எடுக்கப்பட்ட சில முயற்சிகள் தோல்வியடைந்தமைக்கு இக்காரணங்கள் பிரதானமாக இருந்தன. சிறுபத்திரிகைகளில் உள்ளவர்கள் மாத்திரமே ஒரு நியாயபூர்வமான நடுநிலையான பத்திரிகையை வெளியிடமுடியும். இன்னும், ஒரு நடுநிலைப்பத்திரிகைக்கான இடைவெளி புலம் சூழலில் உள்ளது. ஏற்கனவே உள்ள பத்திரிகைகள் பணம்சம்பாதிப்பதில் செலுத்தும் கவனத்திற்கு ஏற்றளவு வாசகனைத் தரம் உயர்த்துவதில் ஈடுபடுவதில்லை. இது ஒரு துர்அதிஷ்டம். சஞ்சிகை வெளியீடு அர்ப்பணிப்பு நிறைந்த, பொருளாதார இழப்பை ஏற்படுத்தக்கூடியதாக இருக்கையில், பத்திரிகை வெளியீடு ஒரு வியாபாரமாக மாறிவிட்டதைப் புலம் பெயர் சூழலில் காணமுடிகிறது. அரசினதோ, இயக்கங்களதோ செய்தி அறிக்கைகளை மறுபிரசுரம் செய்வது அல்லது ஏனைய செய்தி ஸ்தாபனங்களின் செய்திகளை மறுவடிவாக்குவது பத்திரிகைத்துறையல்ல. புலம் பெயர் சூழலில் அனேக பத்திரிகைகள் இதைமட்டுமே செய்து பத்திரிகை என்ற பெயரில் வெளிவருகின்றன. வர்த்தகரீதியில் இவை வெற்றியீட்டலாம் -அடுத்த சந்ததிக்குச் சொல்ல இந்தப்பத்திரிகைகளிடம் எதுவுமில்லை. ஒரு நல்ல பத்திரிகைக்கான இடைவெளி எப்போதாவது சிறுபத்திரிகைக்காரர்களால் மட்டுமே நிரப்பப்படலாம்.





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

**இறுதியாக, ஓசை பற்றி சுவடுக ளின் அபிப்பிராயம் என்ன?**

பல சஞ்சிகைகள் பரபரப்பான அறிவித்தல்களோடு வெளிவந்து காணாமல் போய்விட்ட சூழலில், நிதானமாகவும் சமரசம் கொள்ளா மலும் தன்னைக் காப்பாற்றிக்கொ ண்டுள்ள ஓர் இதழாக ஓசையைக் காண முடிகிறது.

மறுபிரசுரப் படைப்புகளால் நிரம் பாமல் தரமான படைப்புகளுக்குக் களம் தருவதில் ஓசையின் பங்கு குறிப்பிட வேண்டியது. இலக்கியரீ தியில் தரம் பேணும் ஓசை ஈழத்து அரசியல் நிகழ்வுகளை இலக்கிய வடிவத்தில் பிரதிபலிக்கும் களமாக அமைதல் பொருத்தமாக இருக்கக் கூடும். ஈழத்திலிருந்து போர்க்கா லச் சூழலை கொண்டு படைக்கப் பட்ட உன்னதமான இலக்கியங்கள் அதிகமாக வரவில்லை என்றே கூறவேண்டும். இதற்கு ஒரு கள மாக ஓசை அமையலாம் என்பது எமது அபிப்பிராயம்

நன்றி.

சுவடுகளுக்காக

- விஜயேந்திரன் -

---

தமிழர் நலன்புரிச் சங்கத்தின்

# வேண்டுகோள்

மாற்றத்தைத் தேடி நிற்கும் நம் தேசத்தின் அன்றாட நிகழ்வுகள் மனதை உருக்குவன.

பசி... பட்டினி.... சாவுடன் போராடிக்கொண்டும், கல்வி, சுகாதார வசதிகளற்றும் இருண்ட வாழ்வைச் சுமக்கும் ஆதரவற்ற குழந்தைக ளின் எண்ணிக்கை நாளுக்குநாள் அதிகமாகிக்கொண்டிருக்கின்றன.

இக்குழந்தைகளின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு, எமது கார்ஜ் தமிழர் நலன்புரிச்சங்கம், இலங்கையிலுள்ள பல அமைப்புகளினூ டாக உதவிவருகிறது. குறிப்பாக, அன்பு இல்லம், இராமகிருஷ்ணன் மிஷன், சண்முகா மகளிர் இல்லம், இந்து இளைஞர் பேரவை (அவுஸ்திரேலியா மாணவர் நிதியம் ஊடாக), யேசு இல்லம் போன்ற அமைப்புகளுக்கு இதுவரை 48, 900 பிராங்குகள் நிதியினை வழங்கியி ருக்கிறோம்.

இந்நிதியானது, பிரான்ஸில் வாழும் தமிழ் நெஞ்சங்களின் கருணை யினால் கிடைக்கப்பெற்றவை என்பதை அறியத்தருவதோடு, அவ்வுள் ளங்களுக்கு குழந்தைகள் சார்பில் நன்றியையும் தெரிவித்துக்கொள்கி றோம்.

மேலும் பல அமைப்புக்கள் உதவிகோரி எம்முடன் தொடர்பு கொண்டுள்ளன. இவர்களது கோரிக்கையை நிறைவேற்ற விரும்பி யும், முடியாமலும் தத்தளிக்கிறோம்.

எனவே உதவ விரும்பும் உள்ளங்கள் எம்முடன் தொடர்பு கொள் ளும் வண்ணம் அன்புடன் வேண்டுகின்றோம்.

தொடர்புகளுக்கு : கார்ஜி தமிழர் நலன்புரிச் சங்கம்

11, PLACE ROGER SALENGRO, 95140 - GARGES LES GONESE,

TEL. 39 86 51 93



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# என்னுடன் இரவைக் கழித்த நிலவு

- முகமட் அபார்

நிலவு,
ஓடி வந்து
என் கட்டிலில்
குப்புறப்படுத்தது.

அதன் ஆடைகள்
கிழிந்து, கிழிந்து இருந்தன.
உள்ளங்கி மட்டும்
மானத்தை மறைத்துக் கொண்டது.

என் கட்டில் முழுக்க
வாந்தி எடுத்தது.
ஒவ்வொரு வாந்திக்குள்ளும்
வானத்து நட்சத்திரங்கள்
மின்னி, மின்னி மறைந்தன.

நிலவு,
கட்டிலில் உருண்டு , புரண்டு படுத்தது.
காலையும் அடிக்கடி
உயர்த்தி அடித்தது.

நான் அதன்
தலை மாட்டில் குந்தி
அதற்காக கண்ணீர் வடித்தேன்.
நிலவும்,
கண்ணீர் வடிய , வடிய,
வறுமையின் வாடை
வானத்தில் அடித்ததால்
பக்கத்து நட்சத்திரங்களை
பிடித்து விழுங்கியதாகவும்
வானத்து சூரியன்
காலால் உதைத்து
பூமிக்கு தள்ளி விட்டதாகவும்
அழுதழுது , அதன் சங்கதியை சொன்னது.

பெரும் சத்தத்துடன்
என் தெரு நாய்கள் குரைத்தன
நிலவும் - நானும் ஒன்றாக உறங்கி
அந்த இரவை கழித்துக் கொண்டோம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஆசிரியர்,
ஒசை.
அன்புடையீர்,

மழை விட்டாலும் தூவானம் விடாதமாதிரிப் பாரிஸ் இலக்கியச் சந்திப்புப் பற்றிய அரற்றல்கள் தொடருகின்றன. தனது கடிதத்திற் திரு. சபாலிங்கம் குறிப்பிட்ட கருத்துக்கள் அவருக்கும் உடன்பாடானவை என நான் கருத விரும்பவில்லை.

"குழிபறிப்பு", "தான் சொன்னாற் காவியமென்னும் குட்டிக் கைலாசபதிகள் சிவத்தம்பிகள் ", "கண்ணுக்குத் தெரியாத செயற்குழு" என்பன போன்ற சொற்றொடர்களிற் தொக்கி நிற்கும் குற்றச்சாட்டுக்கள் "நீர் எப்போது உம் மனைவியை அடிப்பதை நிறுத்தினீர்?" என்ற கேள்வி போன்று பதிலை எதிர்பாராமலேயே தீர்ப்பு வழங்கிவிடுகின்றன.

கோழைத்தனமாகப் பெயர் குறிப்பிடாமல் முன் வைக்கப்படும் இவ்வாறான குற்றச்சாட்டுக்கள் குற்றத்தையும் குற்றஞ்சாட்டப்பட்டவரையும் பற்றி வாசகர் களது கற்பனையைக் கிளறி விடுகின்றன. இந்து நேசன், சினிமா நேசன் போன்ற முன்னாள் சினிமா மஞ்சள் பத்திரிகைகட்கு இருந்த தைரியம் கூட இந்த விதமான "கிசுகிசு" பேர்வழிகட்கு இல்லை.

பாரிஸ் இலக்கியச் சந்திப்பும் ஒல்லாந்துச் சந்திப்பும் அவற்றின் பலவேறு குறைபாடுகள் மத்தியிலும் மிகுந்த சிரத்தையுடனும் பொறுப்புடனும் நடத்தப் பட்டவை. இலக்கியச் சந்திப்பை ஒரு ஐரோப்பிய நிகழ்ச்சியாக விரித்துப் பரந்தளவில் ஆர்வத்தைத் தூண்டியதில் அவற்றின் பங்கு பெரியது. விவாதங் களில் வெளிவெளியாகவும் கடுமையாகவும் பேசி நேரடியாகக் குற்றச்சாட்டுக் களையும் மாற்றுக் கருத்துக்களையும் சிலர் முன்வைத்த விதம் பற்றி என்ன ஆட்சேபனை இருப்பினும் அவர்களது செயல்கள் மறைமுகமான குத்தற் பேச்சுக்களைவிட மதிப்புக்குரியன.

மொட்டைக் கடிதங்களின் பாணியிற் 'கிசுகிசு' செய்திகளை வெளியிடுவது ஒரு நல்ல பத்திரிகைக்கு அவசியமில்லை. ஆற்றாமை தொனிக்கும் கோழைத்தன மான குற்றச்சாட்டுக்களைச் சேகரித்து ஒசைக்கு அனுப்பிய நண்பர் அவ்வா றான விஷயங்களின் தரமும் தகுதியும் பற்றிச் சற்றே சிந்தித்திருக்கலாம். அவர் தவறியிருப்பினும் ஒசை ஆசிரியராவது சிறிது கவனித்திருக்கலாம். ஒசை கலங்கலான சொற்களின் மூலம் மறைந்திருந்து தாக்கும் கோழைகளின் புகலிடமாகி விடுவது நல்லதல்ல.

**- சிவசேகரம், லண்டன்.**

ஒசை இதழ் 14 கிடைத்தது. நன்றி.
இதழில் எழுத்துப்பிழைகள் அதிகம். எனது கவிதையிலும் பலஇடங்களில்.
.. பயணத்தை நிறுத்திவிட்டு ரசிக்கவேண்டியது என்பதற்கு பதிலாக ரசிக்க வேண்டியுள்ளது என பிரசுரித்திருக்கிறீர்கள்.
அதே போன்று ;
கையால் பிடித்து, பிடித்து, விட்டபடி என்பதற்குப் பதிலாக
கையில் பிடித்து பிடித்து விட்டபடி என்று பிரசுரமாகி இருக்கிறது.
சிலநேரம் நானும் கைப்பிரதியில் தவறுதலாக எழுதியிருக்கலாம் !
வரும் 94ல் ஒசை புதுமெருகுடன் வர வாழ்த்துக்கள் .

**- சோலைக்கிளி, கல்முனை.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

...ஐரோப்பிய புகலிடச்சஞ்சிகைகள் பலவற்றிலிருந்து ஓசை வித்தியாசமாகவுள்ளது. இங்கு சிலபல சஞ்சிகைகள் கட்டுரைத்தொகுப்புபோன்று வெளிவருகின்றன ! இவற்றிலிருந்து வேறுபட்டு புகலிடப்படைப்புக்கள் பலவற்றைத் தாங்கி -பத்திரிகைக்குரிய சில மரபுகளுடன் வெளிவருவதனால் ஓசை சிறப்பாகவுள்ளது. வாழ்த்துக்கள்.

**- சிறீரங்கன், ஜேர்மனி.**

...இதழ் சிறப்பாக இருந்தது. எஸ். பொ. வின் செவ்வி, அன்பழகனின் கட்டுரை, அனைத்தும் நன்றாக இருந்தன.

**- ப. தி. அரசு, சென்னை.**

... ஓசை 14 கண்டது முதல் மகிழ்ச்சி. புலம் பெயர் வாழ் நம்மவரிடையே பரவிவரும் இலக்கியமுன்னோடி நிகழ்வுகள் பலவற்றை அறிந்தும் வாசித்துமிருக்கிறேன்.
பல புலம் பெயர் சஞ்சிகைகளோடு எனக்கு ஆழமான தொடர்புமுண்டு.
ஓசை நேர்த்தியாக உள்ளது. ஆக்கத்தேர்வு அவதானிப்புடன் நடத்தப்பட்டிருக்கிறது. அழகான அமைப்புடன் கணணியின் பதிவு இன்னும் சந்தோசத்தைத்தருகின்றது.
எமது மூத்தஎழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்களுடனான செவ்வி பல விடயங்களை எமக்கு உணர்த்தியிருந்தது. ஈழக்கூத்தனின் "மீளு ..அமீளு.." அருமை. எங்கள்தேசத்தின் சில இரக்கமற்றவர்களையும், நெறிபிறழ்ந்த தண்டிப்புக்களையும் மீண்டும் நினைவூட்டி கண்ணீரை வரவழைத்த ஒரு பாசகாவியம்.
JURASSIC PARK விடயம் பல புலம்பெயர் சஞ்சிகைகளிலும் பேசப்பட்டவிடயம். ஈழத்தமிழர் இராச்சியங்கள் பற்றிய தேடலும் ஆய்வும், மிகவும்பொறுப்பானது ஏன் கடமையானதும் கூட. திரு. அன்பழகன் கருத்து முன்வைத்தளவாவது எமது பேராசிரியர்கள் கண்திறந்தால் சரி.
திரு. ஆதவனின் சிறந்த சிறுகதை "வரம்"
"பாரிஸில் நாங்கள்" என்பதான பெட்டிச்செய்தி உண்மையில் எம் ஈழத்தமிழர் செல்லும் இடமெல்லாம் என்று எண்ணத்தோன்றுகிறது.
கவிதைகள் தரமானவை. வழமைபோல சோலைக்கிளி தன்கைவரிசையைக் காட்டியிருக்கிறார். வர வர சோலைக்கிளியின் மாற்றமான குறியீடுகளுக்காய் உவமைதேடுதல்...
முடிவில் "சரிநிகர்" கூறியது போல உவமானங்களின் முடிவில் சோலைக்கிளி என்னசெய்யப்போகிறார் என்று கேட்கத்தூண்டுகிறது.
ஆனால் கவிதைகள் வித்தியாசமானவை. ரசிக்கத்தக்கவை.
இறுதியாக, ஆசிரியர் தலையங்கம் கூறியது போல "ஸ்தாபனரீதியாகவோ தனிப்பட்ட ரீதியாகவோ சமூகங்களுக்கிடையிலான புரிந்துணர்வை வளர்த்துக் கொள்வது இன்றைய நிலையில் மிக மிக அவசியமானது" அதுவும் இலங்கைக்கு மிகமிக தேவையானதும் கட்டாயமானதும்.

**- இளைய அப்துல்லாஹ், அக்குறணை**

...இலங்கையை விட்டு நாம் நாடுகடந்தது வேதனையளிக்கின்றதெனினும் ஒரு சில விடயங்களில் மகிழ்ச்சியைக் கொடுக்கிறது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓசையின் அமைப்பு, பிரமிக்கத்தக்கதாக அமைந்துள்ளது. விடயங்கள் யாவும் பொருள் பூத்தவையாக உள்ளன. பன்முக விடயங்களைத் தாங்கி கச்சிதமான அட்டையுடனும், அமைப்புடனும் இதனைப் பார்க்கும் போது வெளிநாட்டில் இருப்பது ஓரளவு நன்மை போலத்தான் தெரிகிறது.
புலம் பெயர்ந்த பல்வேறு எழுத்தாளப் பெருமக்கள் ஐரோப்பாவில் இருந்து காத்திரமான பங்களிப்புச் செய்வதைப் பத்திரிகை, சஞ்சிகை வாயிலாக அறிகிறோம்.

தயவுகூர்ந்து இவர்கள் வெளியிடும் சஞ்சிகைகளின், நூல்களின் பிரதிகள் ஒவ்வொன்றையாவது எமது தகவல் நடுவத்துக்கு அனுப்பி வைக்கும்படி தங்கள் சஞ்சிகையினூடாக வேண்டுகிறோம்.

இலங்கையின் புகழ்பூத்த எழுத்தாளர், கவிஞர் க.கி. சரவணமுத்துவின் மகள் பெரும் சிரமங்களின் மத்தியில் இரு தரமான நூல்களை வெளியிட்டுள்ளார். அவரது நூல்கள் பின்வருவனவாகும்.
கவிச்சுவடு (கவிதைத் தொகுதி)
கிராமக் கவிதை வளரும் சிந்தனைக் கட்டுரைகளும்.
இவை தற்பொழுது அவரது மகளிடம் அவுஸ்திரேலியாவில் உண்டு.
இவர்களைப் போன்றோருக்கு உதவி ஊக்குவிக்க வேண்டியது எமது கடமைகளுள் ஒன்று.

DR. V. E. PACKIYANATHAN
64, EN ORE ROAD,
NEW TOWN,
N S W 2042, AUSTRALIA.

உங்கள் அன்புள்ளவன்
வே. இ. பாக்கியநாதன்
கௌரவ செயலாளர்/நூலகர்
சிட்னி தமிழ் தகவல் நடுவம்.

.......பிரஞ்சுக் கதைகளை வாசிப்பதில் மிகுந்த ஆர்வமுடையவன் நான். ஏதோ விளங்காவிட்டாலும் வாசித்துக் கொண்டு கதையின் சாராம்சம் உணர்ந்து கொள்ள முடியும். அத்துடன் திரு. வாசுதேவன் அவர்களது மொழிபெயர்ப்புக் கதைகளும் வாசித்துள்ளேன். அத்தகைய கதைகளை வாசித்த ஒரு அனுபவத்தினை 'வரம்' என்கின்ற கதையினை வாசித்த போது உணரப் பெற்றேன்.
இதன் உள்ளீட்டுத் தன்மை, தாற்பரியம் சிறிதும் குறையாது பிரெஞ்சு மொழியில் மொழிபெயர்க்க "ஓசை" ஆவன செய்ய வேண்டுமென வேண்டுகிறேன்.

நன்றி ஓசை.
நன்றி ஆதவன்.

- ரவி, பாரிஸ்.

தங்களால் வெளியிடப்படும் ஓசை 14 இல் வெளியான நேர்காணல் பகுதியில் எழுத்தாளர் எஸ். பொன்னுத்துரை அவர்களது கருத்துக்கள் ஒவ்வொரு இலக்கியவாதியின் மனதிலும் நிலைநிறுத்தி வைக்கவேண்டியது அவசியமாகும்.
இன்றைய காலகட்டத்தில் எவ்வித நேர்மையும் அற்று வெறும் சமூக அந்தஸ்த்துக்காக இலக்கியப்படைப்புகளும் சண்டித்தனத்துக்குப் பயந்து உண்மைக்கு மாறாக திரிபு இலக்கியம் வடிப்பவர்களும் வாழும் இன்றைய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காலகட்டத்தில், எஸ்.பொ. போன்றவர்களும் இன்னும் இருக்கிறார்கள் எனும் போது மனதுக்கு சற்று ஆறுதலாக இருக்கிறது. அவருடைய இலக்கிய வடிவங்கள் இன்னும் வரவேண்டும் என்பது எனது அவா.

- அன்ரனி, சார்சேல்.

## ஈழத்தின் வடபகுதியில் தமிழர் ஆட்சியை முதன் முதலில் நிறுவியவன் வெடியரசனே !

1993 ஓசை இதழ்14 இல் ஈழத்துத் தமிழ் இராச்சியங்கள் என்ற கட்டுரையை வாசித்தேன். தமிழர் இராச்சியங்கள் பற்றி முழுமையான ஒரு வரலாற்று நூல் வெளிவரவில்லை என்ற தமிழ்மக்களின் குரலாக கட்டுரை இருந்தது. நன்றி. மேலும் ஈழத்துத் தமிழர் வரலாற்றை அறியும் ஆவல் கொண்டுள்ள எம் போன்ற இளையவர்கட்கு திரு. அன்பழகன் வரிசையிட்டுக் காட்டிய வரலாற்றுப் புத்தகங்களின் பட்டியல் ஒரு பயனுள்ள வழிகாட்டுதலாகும்.
மேலும் யாழ்ப்பாண மன்னர் ஆட்சி அன்னியரால் அகற்றப்பட்ட பின்பு குறுநில அரசுகள் தலையெடுத்ததாகக் குறிப்பிட்டுள்ளார். உண்மைதான். ஆனால் வெடியரசன் என்ற கரையோரத் தலைவன் 17 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் சின்ன மிக்கேல் பிள்ளை மூலம் போர்த்துக்கேயருடன் போரிட்டதாகவும் எழுதியுள்ளார். அது சம்பந்தமாக ஏதோ தவறு நடந்துள்ளதென்று எண்ணுகிறேன்.
ஆனால் அது வரலாற்றுக்குப் புறம்பாக பிழையான தகவலாகும். அதன் உண்மையை தெளிவுபடுத்த வேண்டியது உண்மை வரலாற்றை அறிய விரும்புவோர் ஒவ்வொருவரினதும் கடமையாகும். உலகின் முடுக்குகளெல்லாம் சிதறியுள்ள தமிழ் மக்களால் வாசிக்கப்படும் ஓசையிலுள்ள இக்கட்டுரையில் யாழ்ப்பாண வரலாறு பற்றி தவறான பார்வை ஏற்படச் சாத்தியமுண்டு என்பதாலும் இவ்வாறான தகவல்கள் தவறான வரலாற்றுப் பதிவுக்கு இட்டுச் செல்லும் என்று ஐயுறுவதாலும் இதனை எழுத நேர்ந்துள்ளது.

வெடிஅரசன் என்பது வேடி அரசன் என்ற (கப்பல் அரசன்) சொல்லின் திரிபாகும். இவன் வட இலங்கையிலுள்ள நெடுந்தீவில் கோட்டை அமைத்து கி. பி. 2 ஆம் நூற்றாண்டில் ஆட்சி புரிந்தவன். இதனை டானியல் ஜோன் இலங்கை சரித்திரம் என்ற நூலில் (1930)" நாகர் வழிவந்த வெடியரசன் தனது திறமையினாலும், வீரத்தினாலும், விடாமுயற்சியினாலும் தம்பியர் நால்வர் உதவியுடன் நெடுந்தீவில் இருந்து அரசியற்றினான்" எனக் கூறியுள்ளார்.
மேலும் யாழ்ப்பாண இராச்சிய மன்னர் 5ஆம் செகராச சேகரனால் இயற்றப்பட்ட கண்ணகி வழக்குரை என்ற காவியத்தில் 30 க்கு மேற்பட்ட பாடல்கள் அவனைப் பற்றியும் அவன் மீகாமனுடன் நடத்திய போர்பற்றியும் விபரித்துள்ளார். அதில் ஒருபாடல் வருமாறு.

'மீகாகனீதுரைக்க வெடியரசன் மிக வெருண்டு
நீகாவ லாகிவந்த நீடுகப்பலாயிரமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீகாவ லாக்கிவிட்டுச் செயமுற்று விட்டிலனேன்
பேயாழி யுயிரையுண்ட பெரியோனைப் பிழைத்தேனன்றான்."

ஈழத்திற் பிரபல தமிழ் அறிஞரும், சரித்திர ஆராட்சியாளருமான மட்டக்களப்பு மான்மியத்தின் ஆசிரியருமான F. X. C. நடராசா காரைநகர் மான்மியம் என்ற நூலின் மூலமும் வெடியரசன் செய்திகளை வெளிப்படுத்தியுள்ளார். அத்துடன் திரு. எஸ். சிவப்பிரகாசம் என்பவர் விஷ்ணு புத்திர வெடியரசன் என்ற நூலில் மேலும் உறுதிப்படுத்தக்கூடிய பல தகவல்களைத் தெரிவித்துள்ளார். அப்படியிருக்கும் போது வெடியரசனை வெறும் கரையோரத் தலைவனாகக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டது விளங்கிக் கொள்ளமுடியாததாக இருக்கிறது.

நெடுந்தீவில் இன்றும் இடிபாடுகளுடன் வெடியரசன் கோட்டை காணப்படுகிறது. இதனை EARLY SETTLEMENTS IN JAFFNA என்ற தனது நூலில் கலாநிதி பொன்னம்பலம் ரகுபதி தொல்லியல் சான்றுகளுடன் உறுதிப்படுத்துகிறார். (அதன் பிரதி இத்துடன் இணைத்துள்ளேன்).

ஈழத்தின் வடபகுதியில் அடையாளங் காணக்கூடிய தமிழர் ஆட்சியை முதன்முதலில் நிறுவியவன் வெடியரசன் என்ற செய்தியை தங்கள் அடுத்த ஓசையில் வெளியிடுவீர்களாயின் வரலாற்றை ஒரு வரையறைக்குள் நின்று ஆய்வு செய்வோரை இன்னும் மேலே சென்று பல உண்மைகளை வெளிக்கொணர உதவி செய்ததாக இருக்கும்.

பயனுள்ள கட்டுரைகளை ஓசையுடன் ஒலிக்கின்ற ஓசைக்கு எனது நன்றிகள்.

- **சி. ஆறுமுகம், கனடா**

## அடுத்த இதழில்..

**நிலம் (கவிதை)** - தமயந்தி
**சங்கிலியன் மறுபக்கம்** - எஸ். சபாலிங்கம்
(வரலாறு)

## பாரிஸில் நாங்கள்

மூன்று மாதக் குழந்தை.
தொட்டிலுக்குள், குழந்தையின் காதோரம் றேடியோ.
பிரெஞ்சுவர்த்தகசேவை, விளம்பரங்கள், அறிவிப்புக்களெனத் தன்பாட்டுக்கு சேவை நடாத்திக் கொண்டிருந்தது.
அம்மாவோ அப்பாவோ காது கொடுப்பதாகவும் தெரியவில்லை.
ஆச்சரியத்தோடு விஷயத்தைக் கேட்க,
"பிள்ளை பிரஞ்சுச்சூழலல்ல வளரவேணும், அதுக்காகத்தான்"
என்றார்கள் ஒருமித்த குரலில்.

- சௌமி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

- பேராசிரியர். சக்திப்புயல் -

# எந்த தமிழ் உயர்ந்த தமிழ்

என் சின்ன மகளுக்கு குறும்பு அதிகம் என்னைப் போலவே. அவள் ஒரு சிறிய தமிழ் நாடகம் எழுதினாள். எங்களுக்குத் தெரிந்த ஒரு இந்திய டாக்டரும், இலங்கை தமிழ்ப் பெண்ணும் தான் அதிலே பாத்திரங்கள். இந்தப் பெண் பாரீசுக்குள்ளே குடியிருக்கிறாள். டாக்டர் ஒரு முப்பது மைலுக்கப்பால் புறநகர்ப் பகுதியிலே இருக்கிறார். இவர்களின் உரையாடல் தொலைபேசியில் நடக்கிறது.

( டாக்டர் வீட்டில் டெலிபோன் மணி அடிக்கிறது )
டாக்டரின் மகள் சில்வி எடுக்கிறாள்.
சில்வி : ஹலோ.
விஜி : ஹலோ டாக்டர் நிக்கறாரா ?
சில்வி : டாக்டர் நிக்கிலே. உட்காந்துக்கிட்டு தான் இருக்கிறார். ஏன் ?
விஜி : நான் டாக்டர் கூட பேசணும்.
சில்வி : இதோ, தர்றேன் , அப்பா போன்.
போனைக் கையில் மூடிக்கொண்டு ஆமா போன் பேசறதுக்கு, நின்னுக் கிட்டு இருந்தா என்ன ? உட்கார்ந்துக்கிட்டு இருந்தா என்ன ? ஏன் நிக்கி றாரா என்று கேட்குது அந்தப் பொண்ணு.
விஜி : ( தன் தங்கையிடம் ) டாக்டர் வீட்டுப் பொண்ணு சரியான வால் போலிருக்கு , அப்பா நிக்கறாரான்னு கேட்கறேன். நிக்கல. உட்கார்ந்திருக் கிறார் ன்னுது.
டாக்டர் : ஹலோ.
விஜி : ஹலோ. வணக்கம் டாக்டர். நான் தான் விஜி பேசறேன்.
டாக்டர் : வணக்கம் மா, சௌக்கியமா ?
விஜி : சௌக்கியம் தான் டாக்டர். ஆனா இன்னைக்கு காலையில என்னால் வெளிக்கிட முடியல்லே.
டாக்டர் : ஐயோ பாவம். அப்படியா? இராத்திரி என்ன சாப்பிட்ட ?
விஜி : சற்று அதிர்ச்சி அடைந்தவளாக . வழக்கம் போல தேங்கா புட்டு சாப்பிட்டேன் டாக்டர்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

டாக்டர் : தேங்காயிலே நிறைய கொழுப்பு இருக்கு. அதனால ஜீரணம் ஆகறது கஷ்டம். கூடியவரைக்கும் இராத்திரியில தேங்காய் சாப்பிடுவதை தவிர்க்கணும். இல்லைன்னா காலையிலை இப்படித்தான் கஷ்டம் வரும்.

விஜி : (பக்கத்தில் இருக்கும் தன் தங்கை மாலதியிடம் போனைக் கையால் மூடிக்கொண்டு பேசுகிறாள் ) என்ன இந்த டாக்டர் என்னென்னவோ கதைக்கிறார். விசாவுக்காக டாக்டர் சர்டிபிகேட் தருவதற்காக இன்னிக்கு வரச்சொன்னார். காலைல வெளிக்கிட முடியல்ல. நான் கொஞ்சம் பிந்தி வருவன்னு சொல்றதுக்காக டெலிபோன் எடுத்தா ஏதேதோ பேசறாரே! என்னால வெளிக்கிட முடியலேன்னா, இராத்திரியிலே தேங்காய் சாப்பிடக்கூடாது என்கிறார்.

(இரண்டு பேரும் சிரிக்கிறார்கள்)

டாக்டர் : என்னம்மா ? பேச்சையே காணோம் ரொம்ப கஷ்டமா இருக்குதா ?

விஜி : சமாளித்துக் கொண்டு ஆமா டாக்டர் இன்னிக்கு காலைல 9 மணிக்கே உங்கள பார்க்க வறேன்னு சொன்னேன். ஆனால் வெல்லென வெளிக்கிட முடியலேன்னு தான் கவலையா இருக்குது.

டாக்டர் : இதுல கவலைப் படறதுக்கு ஒன்றுமில்லேம்மா. எப்படியாவது கஷ்டப்பட்டு வெளிக்கிருந்திடு. எல்லாம் சரியாப் போயிடும்.

விஜி : எப்படி டாக்டர் முடியும் ? இன்னைக்கி ட்ரெயின் எல்லாம் ஸ்டிரைக் ஆயிடுச்சே.

டாக்டர் : பக்கத்தில் நிற்கும் தன் மனைவியிடம் டெலிபோனை மூடிக் கொண்டு பேசுகிறார். ஐயோ பாவம். இந்த இலங்கைத் தமிழர்கள் எப்படியெல்லாம் கஷ்டப்படுகிறார்கள் பார்த்தாயா ? வெளிக்கிருக்க டாய்லெட் வசதி கூட இல்லாம ட்ரெயின்ல தான் ஒவ்வொரு நாளும் காலைக் கடன்களை முடிப்பாங்க போலிருக்கு. பாவம். இன்னிக்கு பாத்து ட்ரெயின் வேற ஸ்டிரைக்காம்.

( போனில் பேசுகிறார் )

ட்ரெயின் ஸ்டிரைக்கெல்லாம் பாத்தா முடியுமா? கடன்களிலே முக்கியமானது காலைக் கடன்னு பெரியவங்க சொல்லுவாங்க எப்படியாவது சமாளிச்சு காலையிலே வெளிக்கிரு ? இல்லேன்னா உடம்பு இன்னும் மோசமா போயிடும்.

விஜி : (போனை மூடிக்கொண்டு மாலதியிடம்)

என்ன இவர் ஓளர்ராரு. காலைலே வெளிக்கிடலேன்னா, என் உடம்பு கெட்டுடும் என்கிறாரு -மீண்டும் போனில் ட்ரெயின் இல்லாத சமயத்திலே காலைலே வெளிக்கிடுவதற்கு எங்க வீட்ல வேற வசதி இல்லே டாக்டர்.

டாக்டர் : (தன் மனைவியிடம்) அப்படியா நான் சொல்லல. அவங்க வீட்ல டாய்லெட் வசதி இல்லையாம். மீண்டும் போனில் , அடடா, இந்த ஒரு நாளைக்கி உங்க பக்கத்து வீட்டிலேயாவது உதவி கேளேன்.

விஜி : பக்கத்திலே இருக்கிறவங்க வெள்ளக்காரங்க டாக்டர். இதுக்கெல்லாம் அவங்க உதவி செய்ய மாட்டாங்க.

டாக்டர் : தன் மனைவியிடம் வெள்ளைக்காரர்கள் தன்னலவாதிகள் என்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

சரியா தான் இருக்குது. சாப்பாடு போட்டா தான் செலவாகும். டாய்லெட் டுக்கு கூடவா செலவாகும்.
டாக்டர் மனைவி : ஏன் அதுக்கும் தான் டாய்லெட் பேப்பர், தண் ணின்னு செலவிருக்குது இல்லையா.
டாக்டர் :(மறுபடியும் போனில்) சரி கவலைப்படாதே விஜி, அங்கே பக்கத் திலே ஏதாவது பார் ரெஸ்டாரண்ட் இருந்தா அங்கே போயி காரியத்தை முடிச்சிக்கோ. ரொம்ப கஷ்டமா இருந்த பர்மாசியிலே போயி "மிக்ரோலாக்ஸ்" ன்னு கேளு. அதைப் பயன்படுத்தினா உடனடியா பலன் கிடைக்கும்.
போன் " கட்" டாகிற சத்தம் . ஹலோ, ஹலோ . ஐயோ பாவம். ரொம்ப அவசரம் போலிருக்கு. அந்தப் பொண்ணுபோனைக் கூட கட் பண்ணிடுச்சி.
விஜி : சே. என்னது. இந்த டாக்டருக்கு பைத்தியம் பிடிச்சிருக்கா. ட்ரெயின் ஸ்டிரைக்கு. வெளிக்கிட முடியலேன்னு போன் பண்ணினா, பாருக்குப் போ, மெடிக்கல் ஷாப்பிற்குப் போ. மருந்து வாங்கு . உடனே சரியாப் போகும் ன்றாரு , சுத்த பைத்தியக்கார டாக்டரா இருப்பாரு போலி ருக்கே.
(நாடகம் முடிகிறது )

இதில் உங்களுக்கு ஏதாவது புரிகிறதா ?
"நிக்கிறான்" என்ற சொல் he is present என்ற பொருளிலே இலங்கையிலும் உட்கார்ந்திருக்காமல் நின்றிருக்கிறான். (he is standing ) என்ற பொருளிலே தமிழகத்திலே பயன்படுத்தப்படுகிறது.
எனவே "டாக்டர் நிக்கிறாரா " என்று இலங்கைத் தமிழ்ப்பெண் கேட்டதன் பொருள் " Is the doctor there ?" என்பதாகும். ஆனால் அதனை இந்தியத் தமிழ்ப்பெண் "Is the doctor standing " என்று புரிந்துகொண்டார்.
இதேபோல "வெளிக்கு" என்ற சொல்லுக்கும் இரண்டு வேறுபட்ட பொருள் கள் உள்ளன. இந்த சொல்லுக்கு உட்புறமாக இருந்து வெளிப்புறமாக நடக்கும் இடப்பெயர்ச்சி என்பதுதான் பொருள். இது எல்லாருக்கும் புரிகிற எளிய சொல் தான். என்றாலும் தமிழகத்தைப் பொறுத்தவரையில் வயிற்றிலே இருக்கிற கழிவுப்பொருளை வெளியாக்குதல் என்கின்ற பொருளிலே வெளிக் கிருத்தல் என்ற சொல் பயன்படுகிறது. இதுவே இலங்கையில் தமிழர்கள் வீட்டுக்குள்ளேயிருந்து வெளியே கிளம்புதல் என்கின்ற பொருளிலே வெளிக் கிடுதல் என்று பயன்படுகிறது.

இதிலே எந்த வழக்கு நல்ல வழக்கு. இரண்டுமே பொருள் சிதைவோ, இலக்கணப்பிழையோ இல்லாத தூய தமிழ் வழக்குகள் தான். ஒரு பகுதி அந்தந்தச் சூழ்நிலைகளுக்குமேற்ப பகுதி, விகுதி இடைநிலைகளோடு இணைந்து வேறு வேறு பொருளில் கையாளப்படுகிறது. இதனால் வழக்கு வேறுபாடுகள் உண்டாகுகின்றன. இதிலே எந்த வழக்கு இயன்றவரையில் பிறமொழிக் கலப்பினைக் குறைத்து அதேசமயம் மிக அதிகமான அளவிலும் , வகையிலுமான அறிவு, உணர்வு மற்றும் பொருள் நுணுக்கங்களை வெளியி டுவதற்கு தன்னை ஆயத்தப்படுத்திக் கொள்கிறதோ, அந்த வழக்கினையே அந்த மொழியின் மையவழக்கம் எனக் கொள்ளலாம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இங்கே வழக்கு என்று சொல்வது மொழிஇயல் வல்லுநர்கள் dialect என்று சொல்லுகிற கிளைமொழி வழக்குகளைத்தான். இதையே இலக்கணங் கள், செந்தமிழ் வழக்கு (pure tamil dialect) கொடுந்தமிழ் வழக்கு (inpure tamil dialect)என்று பிரிக்கும். ஆனால் மொழியியல் ஆய்வின்படி , இன்னும் அதிகப்படியான வழக்குகளை இன்றைக்கு நாம் பார்க்கிறோம். இலக்கிய வழக்கு , எழுத்து வழக்கு, பேச்சு வழக்கு இவையில்லாமல் அந்தந்த மாவட்டங்களுக்குரிய வழக்கு , இன்னும் பிராமணர் தமிழ் வழக்கு, போன்ற சமுதாயப் பிரிவு வழக்குகளும் இருக்கின்றன. தமிழகத்தில் இருக்கின்ற பல மாவட்ட வழக்குகளைப் போலவே இலங்கைத் தமிழ் வழக்கினையும் ஒரு நில அடிப்படையிலான வழக்காகவே கொள்ளவேண்டும். என்றாலும் தமிழ் நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலுள்ள மக்களும் அடிக்கடி தொடர்பு கொண்டு கலந்து பேச வாய்ப்பு இருப்பதால் அவர்களுடைய கிளை மொழிக ளிலே பல பொதுவான அமைப்புகள் இருக்கின்றன. அந்த அமைப்புகளும் சொல்லாட்சியின் சொற்றொடரும் இலங்கைத்தமிழிலே வேறுபட்டிருப்பதைக் காண்கிறோம். இதற்குக்காரணம் இடையிலே இருக்கிற கடலும் அதனால் ஏற்பட்ட தொடர்பின்மையும்தான்.

இந்த வேறுபாட்டினால் இலங்கைத்தமிழ்த்தரம் தாழ்ந்துவிட்டதென்றோ, இந்தியத்தமிழ் தரத்தில் உயர்ந்து விட்டதென்றோ பொருளில்லை. ஏனென் றால் நான் பழந்தமிழ் இலக்கியங்களிலே பல அருமையான தமிழ்ச்சொற்கள் இலங்கைத்தமிழர்களின் பேச்சுவழக்கிலே இருப்பதைக்கண்டு வியந்திருக்கி றேன். ஆவணம், சட்டத்தரணி, நீதியரசர், சோறு, பின்னேரம், கடவுச்சீட்டு, ஏதினி போன்ற இலக்கியச் சொற்களெல்லாம் இலங்கைத்தமிழில் இனிக்கும் சொற்கள்.

அதேநேரம் தமிழகத்தில் முன்னேறிவரும் அறிவியல் வாழ்க்கைக் கேற்ப அறிவியற் சொற்களை புதிதாக உருவாக்கும் சொல்லாக்கமும், புதிய மொழி யியல் மற்றும் இலக்கண ஆய்வுகளும் பல்வேறு துறையிலும், தமிழையும், தமிழ்ப்பண்பாட்டையும் வளர்க்கின்ற தமிழ் ஆராய்ச்சி நிலையங்களும் இலக்கியத்துறையில் புதிய முன்னோட்டங்களும் இலங்கையை மட்டுமல்ல, உலகில் அத்தனை நாடுகளிலும் இருக்கின்ற தமிழர்களையும் வழிநடத்திச்செல் வதை நாம் மறக்கக்கூடாது. அந்த வளர்ச்சியின் வேகத்தில் ஒரு பக்கம் கொஞ்சம் வழிபுரண்டு போவதும் மறுக்கமுடியாதது. உதாரணமாக "இஸ்துக் குனு போறான், ஜல் புடிச்சிக்கிச்சி, கஸ்மாலம், இன்னாமே, டபாய்க்கிறான்" -இதுமாதிரிச்சொற்களாலே சென்னை நகர்ப்புறத்திலே தமிழ் தனி ஒரு பாணியைப்பிடித்துக்கொண்டது நமக்கெல்லாம் வேடிக்கையாக இருந்தாலும், சென்னை வாசிகள் அதைத்தான் தங்கள் திருநகர வாழ்வின் நாகரீக முத்தி ரையாகக் கருதுகிறார்கள். இங்கேயும் அந்தத்தமிழ் மட்டமான தமிழ் என்று சொல்வது சரியான கணிப்பாகாது.

ஒவ்வொரு கிளை மொழி வழக்குக்கும் ஒரு வகையான தனித்தன்மை காட்டுகிற இசை இருப்பதைப்ப பார்க்கலாம். வடக்குத் தமிழகத்திலே பேசப்படுகிற தமிழ் தெலுங்கின் தாக்குதலால் உகரம் கொஞ்சம் நீளமாக



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஊகாரமாக இழுக்கப்படுவதைப்பார்க்கலாம். குற்றியலுகரம் பல நேரங்களில் இங்கே முற்றியலுகரமாக ஒலிக்கும். நாகர்கோயில், கன்னியாகுமரி பகுதிகளில் மலையாள வாடை அடிக்கும். அங்கே மூக்கு ஒலி அதிகமாக இருக்கும். கொங்குநாட்டுத்தமிழ் என்றால் கோவை சரளாவை நினைத்துக்கொள்ளுங் கள். அந்த ராகமே தனிதான். அதுபோல் இலங்கைத்தமிழர்க்கும் தனிராகமு ண்டு. (என்னுடைய சின்னமகள் அதிலே EXPERT. அதனை மிகவும் ரசித்துப் பேசுவாள்.) கிழக்குச்சீமைத்தமிழில் பிரஞ்சுக்காற்றைச் சேர்த்துப்பார்த்தால் அதுதான் புதுச்சேரித்தமிழ். இங்கே வருத்தத்துக்குரிய விஷயமொன்று, சொல்லியே ஆகவேண்டும் .' என் புள்ளைக்குத் தமூல் வராது"என்று பெருமைப்பட்டுக் கொள்ளும் பெற்றோர்கள் இவர்களில் ஏராளமான பேர் உண்டு. ஆனால் fashion இப்போது மாறிவருவது எனக்கு ஒரு ஆறுதலான சேதி. பாரதியாரின் பெரும் படைப்புகளுக்கும், பாரதிதாசனின் வாழ்க்கை முழுவதற்கும் சொந்தமான மண் புதுச்சேரி மண். இதனை அந்த மக்கள் நிச்சயமாக நினைத்துப்பார்க்கவேண்டும்.

## • சாவு •

"ஹலோ தம்பியே! இஞ்ச ஐயா கதைக்கிறன்"

"ஆ.... ஐயாவே, சொல்லுங்கோ. எப்ப வந்தனீங்கள் ?"

"இண்டைக்குக் காலம தான்."

"பாதையள் பிரச்சினையில்லையே?"

"பிரச்சினையளப் பாக்கேலுமே? ஒருமாதிரி வந்து சேந்திட்டன். தம்பி! உடன ஒரு லச்சம் அனுப்பி விடு."

"அம்மா எப்பிடி ஐயா?"

"ஓ.. ஓ அவ சுகமா இருக்கிறா. நீ உடன காசை அனுப்பி விடு."

"மூத்தக்கான்ர குமணனுக்கு இப்ப எப்பிடி ஐயா?"

"ஓ.. அதெல்லாஞ்சுகம். என்ர 'ஐடின்ரி காட்' நம்பர் வைச்சிருக்கிறாய் தானே?"

"கொழும்பில எப்பிடி ஐயா, பிரச்சினையில்லாமல் நிக்கலாமே?"

"அதெல்லாம் பிரச்சினையில்லை. நீ இப்ப காசை அனுப்பி விடு."

"என்ன ஐயா, நீங்கள் உப்பிடி அடிக்கடி வந்து நிண்டு காசெண்டா, நான் என்ன செய்யிறது ?"

"அதெல்லாம் எனக்குத் தெரியாது. போனமுறை மாதிரி ஆரிட்டையன் மாறியெண்டாலும் அனுப்பி விடு."

"ஐயா, இஞ்ச சரியான வட்டி.. "

"நீ இப்ப அனுப்பப் போறியோ இல்லையோ, இது மானப் பிரச்சினை. நீ காசு அனுப்பேல்லையெண்டால் எங்களை உயிரோட பாக்கமாட்டாய்."

"இப்பிடித்தானே ஒவ்வரு முறையும் சொல்லுறியள்."

"என்னடா....."

"..............."

- சௌமி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# தமிழ் அழகியல்

சித்திரம் பேசுதடி என்று முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன் ஒரு திரைப்பட கதாநாயகன் பாடிய போது, சித்திரங்கள் பேசுமா என்று மனதில் எழுந்த கேள்விக்கான விடை, காலங்கள் செல்ல என் உறவுகள் சிற்பங்கள், ஓவியங்களுடன் நெருங்கியபோதுதான் தெளிவானது. கல்லும் கவிபாடும் காகிதங்களும் கன்வஸ்களும் கதை சொல்லும் என்பதைப் புரிந்து கொண்டேன். புரிதல் அரும்பிய காலத்தில் திரு. பாஸ்கரதொண்டமானின் கோவிற் சிற்பங்கள், விக்கிரகங்களின் நளினங்கள் பற்றிய கட்டுரைகள் மனதில் சலனங்களை ஏற்படுத்தியதென்றால், சில்பியின் கோவில் சார்ந்த ஓவியங்கள் என்னை அவற்றுடன் ஈர்த்துக் கொண்டன. வெறும் கோடுகள் தான்-ஆனால் அவற்றின் பருமன்கள், இடைவெளிகள், வளைவுகள் யாவும் ஆயிரமாயிரம் ஆண்டு காலவெளியை எமக்குக் காட்டி மௌனமாய் நிற்கின்றன.

ஓவியங்கள், சிற்பங்களுடனான எமது தொடர்புகள் மிகக் குறைவாகவேயுள்ளன, அவை பற்றிய புரிதலையும் நாம் பெரிது படுத்துவதில்லை. எனவே இக்கலைகள் பற்றிய பார்வை அறிவு மிக குறைவாகவே எம்மிடம் உள்ளது. எமக்கு இவற்றுடனாகிய தொடர்புகள் கோவில்களிலேயே கிடைக்கின்றன. அங்கு இருக்கும் விக்கிரகங்கள் மிகுந்த கலை நேர்த்தியுடன் ஆக்கப்பட்டவை. ஆனால் இவைகளின் மேல் எமக்கு ஏற்படும் பக்தியுணர்வுகள் கலையுணர்வுகளை கீழ் ஆழ்த்திவிடுகின்றன.

எத்துறைகளிலும் ஏற்படும் மாறுதல்கள் சலசலப்பை ஏற்படுத்தும். பின் அவை பரிச்சயம் ஆகியபின் ஓர் புரிதல் தோன்றும். ரவிவர்மாவின் உருண்டு திரண்ட தெய்வ ஓவியங்களையும், தஞ்சாவூர் ஓவி



- முகிலன் -

இலங்கையிலிருந்து..



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஓவியங்களையும் பார்த்து பழகிய கண் களுக்கும் மனதுக்கும் நவீன ஓவியங் களும் சிற்பங்களும ஓர் அதிர்ச் சியை ஏற்படுத்தின. புரியவில்லை மனநோயாளியின் கிறுக்கல் என்ற கூச்சல்கள் எழுந்தன. ஆனால் காலம் தன் போக்கில் மௌனமாய் நகர்ந்து கொண்டிருந்தது. இன்று கூச்சலப்புக்கள் ஓய்ந்து ஓர் மெல் லிய புரிதல் விரிந்து வருகின்றது.

இம்மாறுதல திடீரென ஓர் இர வில் எழுந்தது அல்ல. சிறுசஞ்சி கைகள் இந்த மாறுதல்களுக்குப் பெரிதும் துணை புரிந்தன என் பதை மறுக்க முடியாது. அறுபதுக ளின் கடைசிப்பகுதியில் வெளிவந்த நடை, கசடதபற போன்ற சிறு சஞ் சிகைகள் நவீன ஓவியங்களை வெளியிட்டது மாத்திரமல்ல அவைபற்றிய புரிதல் தரக்கூடிய கட்டுரைகளையும் வெளியிட்டன. இதுவரை, தாம் வெளியிடும் கதைகளுக்கான வரைவுகளை திரைப்பட நடிக, நடிகையரின் பிர திகளாக வெளியிட்டு வந்த வியா பார சஞ்சிகைகள் கூட இன்று தமது வரைவுகளை நவீன ஓவியங் களாக வெளியிடவேண்டி உள் ளன. இந்நிலை நவீன கலைப்ப டைப்புக்கள் மீது வியாபார சஞ்சி கைகளுக்கு ஏற்பட்ட பற்றுதலினா லல்ல. அறுபதுகளில் வியாபார சஞ்சிகையான ஆனந்தவிகடன் என்ன காரணத்துக்காக ஜெயகாந் தனை ஏற்றதோ அதேபோன்று தான் எண்பதுகளின் கடைசியில் காலத்தின் தவிர்க்க முடியாத சூழ லினால் ஆதிமூலத்தை ஏற்றது.

அதன் தொடர்ச்சியாய் வந்து [illegible] தானம். அர்ஸ் என்று விரிந்து இன்று மாரிமுத்துவரை வந்து நிற் கின்றது.

சிறுகதை நாவல் கவிதை இவை பற்றி வெளிவந்த திறனாய்வு நூல் கள் அளவுக்கு ஓவியங்கள் சிற்பங் கள் வெளிவரவில்லை. அண்மைக் காலங்களில் இவை பற்றிய புரிந் துணர்வுகளு[illegible] நூல்கள் வெளிவந்து கொண்டிருக்கின்றன. ஈழத்து படுகொலைகள் பற்றி வெளிவந்த வீரசந்தானத்தின் "மு கில்களின் மீது நெருப்பு" என்ற நவீன ஓவியங்களை கொண்டநூல் தான் தமிழில் வெளிவந்த தனி ஓவியநூல் என நினைக்கிறேன். தமிழ் நாட்டு அரசு வெளியிடும் " நுண்கலை" என்ற சஞ்சிகை இக்க லைகள் பற்றிய புரிதலுக்கு மிகவும் உதவியாய் உள்ளது.

இந்நிலையில்தான் இந்திரனின் "தமிழ் அழகியல்" என்றநூல் வெளிவந்துள்ளது. இந்திரன் ஊர றிந்த கவிஞர். "அறைக்குள் வந்த ஆபிரிக்க வானம்" "காற்றுக்குத் திசையில்லை" போன்ற மொழிபெ யர்ப்பு நூல்களைத் தந்தவர். இந் திய சிற்ப ஓவியங்கள் பற்றிய ஒரு ஆங்கில காலாண்டிதழை வெளி யிட்டு வருபவர்.

இந்நூல் இருபகுதிகளாக வகுக்கப் பட்டுள்ளது. முதற்பகுதி பத்துக் கட்டுரைகளையும் இரண்டாம் பகுதி பன்னிரெண்டு கட்டுரைக ளையும் கொண்டுள்ளது. முற்பகுதி கலைக்கோட்பாடுகளையும் கலை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யின் தன்மைகளையும் விளக்குவனவாகவும் இரண்டாம் பகுதி ஓவியர்கள், சிற்பிகள் அவர்களின் கைவண்ணங்கள் பற்றிய விமர்சனங்களாகவும், பொதுக்கலைகள் சார்ந்தனவாகவும் உள்ளன.

கலை என்றால் என்ன? அது தோன்றியது எப்படி? அதன் தன்மைகள் அவை சொல்வன என்ன என்பவற்றையெல்லாம் மிக விளக்கமாகவும் அதே நேரத்தில் இறுக்கமாகவும் சொல்லிச்செல்லும் ஆசிரியர், கலை எந்த அளவுக்குத் தனிமனித வெளிப்பாடாக இருக்கின்றதோ அதேஅளவுக்கு, அது சமூக பண்பாட்டு விழுமியங்களையும் தாங்கியதாக இருக்கும் எனவும், கலை வெற்றிடத்திலிருந்து பிறக்கமுடியாது என்ற காரணத்தினால், எந்த சமூகத்திலிருந்து பிறக்கின்றதோ அந்தசமூகத்தின் பண்பாட்டுக்கூறுகளை அது கொண்டதாக இருக்குமெனவும் மேலும் கூறுகின்றார். கலையின் தன்மை பற்றிக் கூறும்பொழுது கலை, அழகுக்கு இனியும் சேவை செய்யாது என்று அறிவித்து வெகு நாளாகிவிட்டது. விகாரமாய் இருக்கும் பயங்கர உருவங்களைக்கூட நம் முன்னோர் சிற்பங்களாக வடித்தமையை சுட்டிக் காட்டுகின்றார்.

வண்ணங்கள் பற்றிய பிரச்சனைகள் ஓவியங்கள் பற்றி பேச்சு வரும்போது முக்கிய இடத்தினைப் பெறுகின்றது. ஈழத்துக்கலை இலக்கிய விமர்சனப் பேராசிரியர் ஒருவருடன் ஈழத்து ஓவியங்கள் பற்றிப் பேசும்பொழுது "யாழ்ப்பாணத்துக்கான வண்ணம் என்ன என்பதை தெரிந்து கொள்ளாத இவர்களிடம் என்னவென்று நல்ல ஓவியங்கள் பிறக்கும்" என்கிறார். அவர் கேட்ட கேள்வியை ஈழத்து ஓவியர்கள் பலரிடம் நான் கேட்ட பொழுது ஒருவரும் விளக்கமான பதிலைத்தராது ஏதோ ஏதோ கூறிச்சமாளித்தனர். இதே கேள்வியை தமிழ் நாட்டைச சேர்ந்த ஓவியர் வீரசந்தானத்திடம் கேட்ட பொழுது பிரதேசத்துக்கென ஓர் வண்ணம் உண்டு. எடுத்துக்காட்டாக தமிழ் பிரதேசத்துக்கான வண்ணம் செங்காவி வண்ணம் என்றார். கிராமங்களில் செம் மண்ணிலிருந்து செய்யப்படும் குதிரைகள், வீட்டின் சுவர்களில் தீட்டப்படும் செங்காவி நிறக்கோடுகள், அதேபோல் கோவில் சுவர்களிலும் கீறப்படுவதைக் காணலாம். வீட்டின்முன் போடப்படும் கோலங்களில் இந்த செங்கோட்டு வண்ணம் இடம்பெறுவதையும் சுட்டிக்காட்டி ஆந்திரப்பிரதேசத்துக்கான வண்ணம் நீலமாகும் என்றார்.

**ஒவ்வோரு பிரதேசத்திற்கென்றும் ஒவ்வோரு வண்ணம் உண்டு. தமிழ்ப்பிரதேசத்திற்குரிய வண்ணம் செங்காவி ஆகும்.**



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



அதற்கான காரணம் பெரும்பா லான ஆந்திர மக்கள் நீலவண்ணக் கண்ணனை வழிபடுவதும் காரணம் என்றார். தமிழ் நாட்டில் செங் கோட்டு வண்ணம் எந்தளவுக்கு இடம் பெறுகின்றதோ அதே அள வுக்கு ஆந்திராவில் நீலவண்ணம் இடம்பெறுகின்றது என்றார். இதே வண்ணம் சம்பந்தமான கேள்வியை ஓவியரும் சிற்பியுமான திரு தன பாலிடம் கேட்ட பொழுது அப்படி பிரதேசங்களுக்கென வண்ணங்கள் இல்லையென்றார். உண்மையில் ஒரு பிரதேசத்துக்கென ஒரு வண் ணம் உண்டா என்ற கேள்விக்கு திரு இந்திரன் ஓவியத்தின் எல் லாப் பண்பு கூறுகளைப்போன்று வண்ணங்களும் பிரதேசத்தன்மை கொண்டவைதான் என்கிறார். தொடர்ந்து இங்கு பூகோளரீதியாக ஒரு சமூகத்தைச் சுற்றி இருக்கும் இயற்கை அமைப்புக்களும் கூட அந்த சமூகத்தில் செய்யப்படும் ஓவியத்தின் எண்ணங்களின் மீது தாக்கம் ஏற்படுத்துகின்றன. உதார ணமாக பாலைவனம் நிறைந்த நாடுகளில் பச்சைப்பசேலென்ற வண்ணத்தை அதிகம் விரும்புகின் றார்கள் எங்கு பார்த்தாலும் பனிப் பிரதேசத்தின் சில்லிட்ட வெண்மை அங்கு வெள்ளை நிறத்தை துக்கத் தின் அடையாளமாகச் செய்து விட் டது. தமிழர்களுக்கோ அது அமை திக்கும், துறவுக்குமான அடையாளம் என்று ஒரு நீண்ட விளக்கத்தைத் தருகின்றார்.

நவீன ஓவியத்தில் வெளி என்பது திட நிலையைக்கடந்து திரவ நிலைக்கு வந்துவிட்டது. இதனால் தான் ஒரு சின்ன சதுரத்துக்குள் இருக்கும் ஓவியம்கூட ஒரு பிரபஞ்ச வெளியைப் பிரதிபலிப்பது போன் றது என்கின்றார்.

தமிழ் அழகியல் என்ற கோட் பாட்டை முன்வைக்கும் ஆசிரிய



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருக்கு உள்ளூர ஒருபயமும் எழுகின்றது. தமிழ் என்ற சொல் இங்கு பலரால் பலகாலகட்டங்களில் பல் வேறுவித அர்த்ததளங்களில் சுய லாபங்களுக்காகப் பயன்படுத்தப் பட்டு வந்திருக்கின்றது. தமிழ் மரபுகள் என்று உண்மையில் நமக்குச் சுட்டிக்காட்டப்பட்டவை உண்மையில் தமிழ் மரபுகள் தானா ? எது; தமிழ் பண்பாடு? யார் தமிழன் போன்ற கேள்விகளுக்குப்பதில் காணாமல் தமிழ் அழகியல் ஒன்றை உருவாக்கிட முடியுமா? இப்படிப் பல கேள்விகளும் பதில்களுமாகச் செல்கிறது முதற்பகுதி.

பழங்காலக்கிராமத்து வயதுமுதிர்ந்த பெண்களின் காதில் ஓர் பொன்னூஞ்சல் ஆடுவதை நாம் பார்த்திருக்கின்றோம் அல்லவா ? அதில் இத்தனை கலைவடிவங்கள் சேர்ந்துள்ளன என்பதை நாம் அறிந்திருக்கின்றோமா ? ஏன் இத்தனை சுமையைக்காதில் தொங்கவிட்டுக் காதை அறுத்துக்கொள்கிறார்கள் என்றுதானே அங்கலாய்த்தோம். ஆனால் அவள் அந்தக்காதணியை அணிவதற்கே தன்காதினை எப்படியெல்லாம் தயார் படுத்துகிறாள் என்பதனை விபரிக்கின்றார் ஆசிரியர். எங்கள் கண்ணுக்கு வெறும் பாம்படமாய்த்தெரியும் அந்தக்காதணியில் எத்தனை கலை நேர்த்திகள். குண்டலங்கள், வளையங்கள், முக்கோணத் தொங்கல்கள், சதுரத்தொங்கல்கள். ஆகிய காதணிகளை இந்தியாவின் பல்வேறு சிற்ப ஓவிய பாணிகளிலும் நாம் காணமுடியும். ஆனால் கேத்திரகணித வடிவங்கள் பலவற்றை ஒரு முழுமையான ஒழுங்கமைதி கொண்ட அணிகலனாக அமைந்திருப்பது தமிழ்மக்களின் பாம்படம் ஒன்றுதான் என்பதைப் பெருமையாகக்கூறிக்கொள்கிறார்.

நூலில். ஆதிமூலம், சந்துரு, மூக்கையா போன்றவர்களின் படைப்புக்களை பற்றித் தனித்தனியாக விபரிக்கப்படுகின்றது. . பழைய தமிழ் அச்சுக்கலைவடிவங்கள் பற்றியும் ஒரு கட்டுரை சேர்க்கப்பட்டுள்ளது.

மறைந்து வரும் தோற்பாவைக் கூத்தினைபபற்றியும் கூறவரும் ஆசிரியர் இக்கலையின் வடிவங்கள். அவற்றினை வேறு படுத்திக் காட்டும் வண்ணங்கள் பற்றி விரிவாகவே கூறுகின்றார். தமிழ்க் கிராமக்கலையான புலியாட்டம் பற்றிக் கூறும்பொழுது சிலம்பாட்டத்தின் முதிர்ச்சியடைந்த ஒரு கலைவடிவம் தான் இந்தப்புலியாட்டம் என்கிறார்.

இப்புத்தகத்தினை வாசித்து முடித்தவுடன் சிற்ப ஓவியம் பற்றியும் அவற்றை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும் என்ற ஒரு அவாவும் எழுவது தவிர்க்கமுடியாதது. மிகச்சிக்கலான விடயங்கள் கூட சுலபமாகப் புரிந்து கொள்ளக் கூடியவகையில் அமைந்திருப்பது ஆசிரியரின் மொழிநடைக்கு கிடைத்த வெற்றியாகும். பல ஓவியங்களையும் வெளியிட்டிருப்பது



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பார்வையை பரீட்சயப்படுத்துவதற்கு ஏதுவாக இருக்கின்றது. ஆனால் ஒரு குறையைச் சுட்டிக் காட்ட வேண்டும் அழகியல் பற்றிய ஒரு நூல் அந்த அழகியலை இழந்து நிற்பது வருந்தத்தக்கது. சில பக்கங்களில் எழுத்துக்கள் தேய்ந்து புரிந்து கொள்ள முடியாமல் இருக்கின்றதே இதை வெளியீட்டாளர்கள் கவனத்தில் எடுத்துக் கொள்ள வேண்டாமா? அச்சுக் கலை முன்னேறி இருக்கும் இந்நாளில் ஏன் இந்தத் தவறு?

அட்டைப்படம் நேர்த்தியாய் அமைந்திருக்கின்றது. தமிழ்க் கலாச் சாரப்பரப்பு பல சவால்களை ஏற்று வருகின்ற இவ்வேளையில்இந்த நூலும் ஒரு சவால் தான்.
தமிழ் மேன்மையுறும். அதனால் நாம் பெருமையும் பெறுவோம். நூலாசிரியரான இந்திரனையும் வெளியீட்டாளரான திருநாவுக்கரசுவையும் வாழ்த்துவோம்.

O



# பொய்மான் வேட்டை

பனிமலையில் கால்கள் சறுக்கும்
பாதாளம் பயங்கரம் காட்டிநிற்கும்
கைகள் விறைக்கும் - கடுங்குளிரின் கோரம்
கறுப்பு நிற இதழ்கள் கூட காயம் படும்

உடலொடுங்கிக் கூனும்
ஊனும் உறங்கும்.
மானும் உயிர்கொள்ளும்.
கொடி துயர் நிறைந்த
இலை இழந்த காடுகளுள்
கனவு சுமந்த சொந்தங்களின்
மூச்சை அடக்கிய பயணம்

விளக்குகளுடன் பாரிஸ் ரவரும்
பனிப்பாறையின் முகட்டில்
பார்வைக்குப் படும்
வழிகாட்டி சொல்வான்
பொழுது விடிவதற்குள்
போய்ச்சேரலாமென்பான்
யார் போதாக் காலமோ..

- செல்வமதீந்திரன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புதிய குருஷேத்திரம்

ஒரு இருட்டு அறைக்குள்
என்னை அடைத்து வைத்து
எங்கே உன் ஆயுதம்
என்றார்கள் -
கிழிந்திருந்த என் சட்டைப்பையில்
தொங்கிக் கொண்டிருந்த
என் பேனாவை எடுத்துக் கொடுத்தேன்.
அறைந்தான் ஒருவன் -
இயேசுநாதர் சொன்னது போல்
இடக் கன்னத்தையும் திருப்பிக் காட்ட
எனக்குத் தைரியம் இருக்கவில்லை
காட்டியிருந்தால் நிச்சயம்
அதற்கும் அறை என்பது எனக்குப் புரியும்
ஆனாலும் -
நான் மனதுக்குள் கேட்டுக் கொண்டேன்
"ஏன் எனக்கு அறைந்தாய்...?"
உன் கேள்விகளுக்கு நான்
சரியாகவே பதில் சொல்கையில்
உனக்குத் தேவையான எனது
ஆயுதத்தை உன்னிடம்
ஒப்படைக்கையில்
நிராயுதபாணியான
எனக்கு ஏன் அறைந்தாய்...?
எனக்கான -
தீர்ப்பு -
உன் கரங்களில் தொங்கும்
துப்பாக்கியினால்
எழுதப்பட்டு விட்ட நிலையில்
எங்கோ ஒரு மூலையில்
எனக்கான "டயர்கள்"
அடுக்கப்பட்டுக் கொண்டிருக்கையில்
உன் அறை எனக்கு
வலிக்கவில்லைதான் -
ஆனாலும் உனக்கு ஒன்று சொல்வேன்
"எஸ்லோன் பைப்பினால்" நீ என்
எலும்புகளை முறித்தாலும்
உன் பெல்ட் முனைகள்
என் உடலில் சித்திரங்கள் வரையினும்
உன் கோரப் பற்கள் -
என் நகக் கணுக்களைப்
பிடுங்கினாலும் -
எழுச்சிகளையே எழுதிக்
கொண்டிருக்கும் எனது பேனா
ஓயப் போவதில்லை -
வேறு கரங்களுக்கு
அது இடம் மாறும்.
மீண்டும் உனக்கான போராட்டம்
தொடரும் என்பது
உறுதி!
உறுதி! !
உறுதி! ! !

- வி. மைக்கல்கொலின்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



"எனது வாழ்க்கை
மனித உருவில் இருக்கும்
பேயொன்றால்
எடுத்துக்கொள்ளப்பட்டுவிட்டது.
தேவையான போதெல்லாம்
என்னுடலை
சொந்தமாக்கிக்கொள்கிறான்."

- தஸ்லிமா நஸ்ரீன் -

சல்மான் ருஷ்டியின் "சாத்தானின் வேதங்கள்" என்ற நூல் ஏற்படுத்திய பரபரப்பை, அண்மையில் வெளிவந்த பங்களாதேஷ் எழுத்தாளர் தஸ்லிமா நஸ்ரீனின் Lajja (வெட்கம்) என்ற நாவலும் ஏற்படுத்தியிருக்கிறது. இஸ்லாமிய மதத்தலைவர்கள், இந்நூலை எழுதியமைக்காக தஸ்லிமா நஸ்ரினுக்கு மரணதண்டனை வழங்கவேண்டுமென போர்க்கொடி தூக்கியுள்ளனர். 1992 டிசம்பர் 6 ஆம்திகதி அயோத்தியில், பாபர் மசூதி தகர்க்கப்பட்டதைத் தொடர்ந்து பங்களாதேஸில் இந்துக்களுக்கெதிராக நடைபெற்ற தாக்குதல்களின்போது எழுதப்பட்டதே இந்த நாவல். 69 பக்கங்களைக் கொண்ட இந்த நாவல், இஸ்லாமிய பங்களாதேஸில் பேராசிரியராகக் கடமை புரியும் ஒரு இந்துமதத்தவரின் குடும்பம் எவ்வாறு நீண்டகாலமாக பாகுபாடாக நடத்தப்பட்டது என்பதைச் சித்தரிப்பதோடு அயோத்திப் பிரச்சனையின் பின்னர் நடந்த வன்முறைகளினால் எதிர்கொள்ளும் இன்னல்களையும் விபரித்துச்செல்கிறது. "நான் ஓர் இந்து அல்ல. ஆனால் இந்துக்கள் எவ்வாறு துன்புறுத்தப்பட்டார்கள் என்பதைக் கண்டேன். அயோத்திச் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்துக்கோயில்கள் எரிக்கப்பட்டபோது இந்துக்கள் எவ்வளவு இழிவாக நடத்தப்பட்டார்கள் என்பதை உணர்ந்தேன்" என்று கூறும் தஸ்லிமா நஸ்ரீனின் நாவல், அரசாங்கம் தடைவிதிப்பதற்கு முன்பே 50, 000 பிரதிகள் விற்கப்பட்டுவிட்டன. இவரது முன்னைய 14 நாவல்களும், பத்திரிகைப் பக்கங்களும் முஸ்லீம் பெண்களுக்கு எதிராக விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை எதிர்த்தும், அவர்களை வியாபாரப்பொருள்களாக நடாத்தும் ஆண்சமூகத்தை எதிர்த்தும் குரல் எழுப்புகின்றன.

31 வயதான நஸ்ரீன் தனது 15 ஆவது வயது மாணவப்பருவத்திலிருந்தே எழுத ஆரம்பித்து விட்டார். அதிகமான இவரது படைப்புக்கள், தன் குடும்பத்தில், தன்னை விட சகோதரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட்டதனால் ஏற்பட்ட வேதனையைப் பிரதிபலிப்பனவாக உள்ளன.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இரண்டு தடவைகள் விவாகரத்து செய்து கொண்ட இவர், தன் வாழ்வில் அனுபவித்த வேதனைகளை எழுத்தாக வடிக்கின்றார். 1987 ம் ஆண்டு "திருமணம்" என்ற தலைப்பில் இவர் எழுதிய கவிதையில் "எனது வாழ்க்கை மனிதஉருவில் இருக்கும் பேயால் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது. அவனுக்குத் தேவையான போதெல்லாம் என்னுடலைச் சொந்தமாக்கிக் கொள்கிறான்" என்று எழுதியிருந்தார்.

1980ல் ஜனாதிபதி எர்சாட்டினால் (Ershad) இஸ்லாமியமதம் தேசியமதமாக அங்கீகரிக்கப்பட்டதிலிருந்தே இவர் மதத்திற்கெதிராக அதிகமாக எழுத ஆரம்பித்தார். பங்களாதேஷில் நடக்கும் பெண்சிசு வதைக்கும், சோரம்போன பெண்கள் கொல்லப்படுவதற்கும் காரணம் இஸ்லாமியமதமே என்று குற்றஞ் சாட்டுகிறார். "பூமியைச் சூரியன் சுற்றுகிறது என்று இன்றும் குர்ரானில் சொல்லப்பட்டுக்கொண்டிருக்கும்போது நாங்கள் எப்படி முன்னேறுவது என்றும் கேள்வி எழுப்புகிறார்.

தனக்கு விடுக்கப்பட்டிருக்கும் கொலைப்பயமுறுத்தல்களையும் விஞ்சி, தலை வணங்காதிருக்கும் Taslima Nasrin "எனது குழந்தைப்பபருவம்" என்ற தலைப்பில் ஓர் நாவலை எழுத முற்பட்டிருக்கிறார். எதிர்காலத்தில், இந்துவேதங்கள், பைபிள், குர்ரானிலுள்ள போன்ற நூல்களில் காணப்படும் பாலியல் வேறு பாடுகள் தொடர்பாகவும் ஓர் நூல் எழுத உத்தேசித்துள்ளார்.

- சுப்பையா. அசோகன் -
TIMES சஞ்சிகை உதவியுடன்

## பாரிஸில் நாங்கள்

"தம்பி... உந்த டொக்டரிட்ட ஒரு "றாந்தேவு" எடுத்திட்டுப் போறியே..."
"சும்மா இருங்கோம்மா எனக்கு நேரமில்லை...."
"ஏனப்பா பிள்ளையைக் கஸ்ரப்படுத்திறீர். பள்ளிக்கூடத்துக்கு நேரம் போட்டுதல்லே..."
"என்ன ரெலிபோனில ஒருக்காக் கதைக்கிறதுக்கோ... "
"சரி, விடும் விடும் பக்கத்துவீட்டு ரவியிட்டக் கேட்டுப் பாப்பம்."
"சும்மா இருங்கோ நீங்கள். எங்கட பிள்ளை பாஷை கதைக் கேக்க ஏன் நாங்கள் அடுத்தவையிட்டப் போவான் ? "
"தம்பீ... எங்கட செல்லமல்லே ! "

தம்பிக்கு எத்தினை வயதெண்டு நினைக்கிறீங்கள் ?
ஆறு.

- செளமி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# அவுஸ்திரேலியாவில் ஈழத்தமிழர் வாழ்வும் - நம்பிக்கைகளும்

## சில அவதானக் குறிப்புகள் -

- லெ. முருகபூபதி

2, 966, 200 சதுர மைல் பரப்பளவு கொண்ட இந்தப் பெரிய தீவு யாருக்குச் சொந்தமானது ?

18 ம் நூற்றாண்டில் பிரித்தானியர் இங்கு குடியேறத் தொடங்கியதனால் ஆங்கிலம் பிரதான மொழியாகவும் இன்றும் அரசகரும நிருவாக மொழியாக வும் கோலோச்சுகின்றது.
அதனால் ஆங்கிலேயர்தான் இந்த 200 வருட ஆயுளைப் பூர்த்தி செய்த இக்கண்டத்தின் பூர்வ வாரிசுரிமை பெற்றவர்களா ?
இல்லவே இல்லை.

அபோர்ஜனிஸ் எனப்படும் பழங்குடி மக்கள்தான் இத்தேசத்தின் சொந்தக் காரர்கள். இவர்கள் ஆசியாவிலிருந்து வந்தவர்கள் என்று ஆராய்ச்சியாளர்கள் தெரிவிக்கின்றனர். இந்த பூர்வ குடி மக்களை அழித்து வேட்டையாடிய பிரித்தானிய வெள்ளையினம், இப்பொழுது அவர்களின் சந்ததிகளுக்கு சலுகைகளையும், வாய்ப்பு வசதிகளையும் வழங்கிக் கொண்டிருக்கிறது.

பிரிட்டிஷார் வந்தமையாற்தான் இலங்கையும் இந்தியாவும் கல்வி, நாகரீகம், அபிவிருத்தி முதலானவற்றில் முன்னேறின என்ற கருத்துக்கு மாற்றுக்கருத்து எப்படி இல்லையோ-அதே போன்றுதான் அவுஸ்திரேலியாவையும் இனம் காணவேண்டும்.

அன்று "கேப்டன் குக்" இந்தக் கண்டத்தை கண்டுபிடிக்காமல் விட்டிருந்தால் இதன் வயது இன்னும் குறுகி இருக்கும். அந்த ஆதிவாசிகளின் தலைவன் என்று கருதப்பட்ட " மாபோ" என்பவரினால் தொடங்கப்பட்ட உரிமைப் போராட்டத்திற்கு அவுஸ்திரேலிய அரசு செவி சாய்த்துள்ளது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பல தமிழ்ப்பெயர்களுக்கும் சொந்தக்காரர்களான இந்த ஆதிவாசிகள் குறித்து பிறிதொரு சந்தர்ப்பத்தில் விரிவாக ஆராயலாம். ( உ-ம் கௌரி, உமா என்ற பெயரைக்கொண்ட அபேர்ஜனிஸ் பெண்களைச் சந்தித்திருக்கின்றேன் )

இந்த இனத்தவர்களின் கலாச்சாரத்திலிருந்து அவுஸ்திரேலியர்கள் ( ஆங்கிலேயர்கள் ) பெற்றுக் கொண்ட 'பாபர்கியூ' என்ற (BARBERQUF) விருந்து நிகழ்வை இங்கு குடியேறிய இத்தாலியர், துருக்கியர், கிரேக்கர், யூக்கோஸ்லாவியர், எகிப்தியர், சீனர், கம்பூச்சியர், வியட்நாமியர் உட்பட பல்லின மக்களும் நமது ஈழத்தமிழர்களும் பின்பற்றுகின்றனர்.

'கல்தோன்றி மண்தோன்றாக் காலத்துக்கு முந்திய மூத்த குடி தமிழினம் என்று பெருமைபேசும் நம்மவர்கள் இருநூறு வயது பூர்த்தியான இக்கண்டத்தில் சுமார் 15 வருட காலமாகத்தான் வாழ்ந்து வருகின்றனர்.

1. உயர்கல்விக்காக புலமைப்பரிசில் பெற்று புலம்பெயர்ந்த தமிழர்கள்
2. SKILL அடிப்படையில் குடிவரவு அந்தஸ்து பெற்று புறப்பட்டு வந்தவர்கள்
3. இவ்விதம் வந்தவர்களினால் SPONSOR மூலம் அழைக்கப்பட்டு இங்கு நிரந்தர பிரஜைகளாகியோர்
4. தேசிய இனப்பிரச்சினை கூர்மையுற்று இனவிடுதலைப் போராட்டம் வெடித்தமையால் பாதுகாப்புக் காரணங்களினால் தாயகத்துக்கு விடைகொடுத்துவிட்டு வந்தவர்கள்

5. பொருளாதார தேவைகளுக்காக ஏஜன்ஸிகளுக்கு பணம் கொடுத்து " விஸா " பெற்று வந்து அகதி அந்தஸ்துக் கோரியும் நிரந்தர வதிவிட அனுமதிக்கு விண்ணப்பித்தும் தங்கிவிட்டவர்கள்

இப்படியாக ஈழத்தமிழர்கள் இங்கு வந்தார்கள்.

இவர்களில் எத்தனை சதவீதத்தினர் யாழ்ப்பாணத் தமிழர்கள் -எவ்வளவு பேர் கிழக்கிலங்கையைச் சேர்ந்தவர்கள், தென்னிலங்கையிலிருந்தும், மலையகத்தில் இருந்தும் வந்தவர்களின் தொகை யாது -என்ற புள்ளி விபரங்கள் இங்கு அவசியமல்ல.

அவ்விதம் ஆராய்வதும் பண்பல்ல. (ஆராயப்புகுந்தால் கசப்பான பல உண்மைகள் அம்பலமாகும்)

ஆனால் - திருமணங்கள் (சம்பந்தம்) பேசும்போது நம்மவர்கள் 'மரபு'க்காக ஆராய்கின்றனர். (ஏனென்றால் திருமண வைபவத்தில் கலந்து கொள்ளும் விருந்தினர்களின் விசாரணைகளுக்கு (?) பதில் சொல்வதற்காக)

அவுஸ்திரேலியாவில் விக்டோரியா (மெல்போர்ன்) நியூ சவுத்வேல்ஸ் (சிட்னி) மேற்கு அவுஸ்திரேலியா ( பேர்த்)

தென் அவுஸ்திரேலியா (அடிலைற்) குவின்ஸ்லாந்து (பிறிஸ்பேர்ன்) நொதர்ண் டெரிடரி (டார்வின்) தஸ்மானியா (ஹோபார்ட்) கன்பரா (தலைப்பட்டினம்) முதலான மாநிலங்களில் தமிழர்கள் வாழ்கின்றனர். ஏனைய மாநிலங்களோடு



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஒப்பிடுகையில் நியூசவுத்லேஸ்ஸில் (சிட்னி) தான் தமிழர்களின் எண்ணிக்கை அதிகம். இரண்டாவது இடத்தில் விக்டோரியா (மெல்போர்ண்) எனினும் நம்மவர்களைப்பொறுத்தவரையில் விக்டோரியா ஏனைய மாநிலங்களுக்கு முன்மாதிரியாக பலவிடயங்களிலும் திகழ்கின்றது. இதுபற்றி பின்னால் விரிவாகப்பார்க்கலாம்.

அமரர் - எழுத்தாளர் மு. தளையசிங்கம் சொல்வார். "யாழ்ப்பாணத் தமிழர்கள் புதிதாக ஒரு பிரதேசத்தில் குடியேற நேர்ந்தால் -முதலில் ஒரு கோயிலை உருவாக்குவார்கள் -அதன்பின்பு ஒரு சங்கம் அமைப்பார்கள். வசதிப்பட்டால் அங்கு வசிக்கப்போகும் ஏனைய தமிழர்களுக்காக -தேவைகளை ஆராய்ந்தறிந்து கடை திறப்பார்கள். இவை மூன்றும் தோன்றிவிட்டால் -இலட்சியக்கனவு ஓரளவு நனவாகிய மாதிரித்தான் அவுஸ்திரேலியாவிலும் இந்தக் கனவு நனவாகியுள்ளது.

ஆங்கில மொழியே கோலோச்சுவதனால் சௌகரியமும் உண்டு. இதனால் - ஜெர்மனி, பிரான்ஸ், நோர்வே, டென்மார்க், சுவிஸ், இத்தாலி முதலான நாடுகளுக்கு சென்றவர்களும் " அவுஸ்திரேலியா நல்ல நாடு....... அங்கே போயிருக்கலாம்........ இந்த மொழிப்பிரச்சனை இருக்காது எங்கள் பிள்ளைகள் ENGLISH பேசியிருக்கும்" என்று கவலைப்படுவதாக அறிய முடிகின்றது.
இந்த ENGLISH ஐ விட்டு விட்டுப் பார்த்தால் "இக்கரைக்கு அக்கரை பச்சை' தான் சந்தேகமில்லை.

பாடசாலையில் பிள்ளைகள் ஆங்கிலம் மூலம் கல்வி கற்பதனால் வீட்டிலும் ஆங்கிலம் படிப்படியாக கோலோச்சத் தொடங்குகிறது.
தமது பிள்ளைகள் தாய்மொழியாம் தமிழை மறந்து விடுவார்களோ ( பல வீடுகளில் மறந்து தான் விட்டார்கள்) என்ற பயம் பெற்றோர்களை வருத்துகிறது. இதனால் தமிழ்ப் பாடசாலைகள் வாராந்தம் நடத்தப்படுகின்றன.
இங்குள்ள அமைப்புகளினால் வருடாந்தம் பேச்சுப் போட்டி, மனனப்போட்டிகள் ஒழுங்கு செய்யப்படுகின்றன எனினும் பலன் எதிர்பார்த்த அளவு கிட்டவில்லைத்தான். தமிழ்ப்பேச்சை -தமிழ்ப்பாடலை ஆங்கிலத்தில் எழுதி மனனம் செய்து போட்டிக்கு தயாராகும் பிள்ளைகள் அதிகம்.
உதாரணமாக - ".பாரதியாரின் "அச்சமில்லை.... அச்சமில்லை பாடலை" ACHCHAMILLAI , ACHCHAMILLAI என்று ஆங்கிலப்படுத்தித்தான் பாடி பரிசில்களும் பெற்றனர்.

இந்நிலைமை தாய்மொழிப்பற்றும் தமிழ் இலக்கியப் பிரக்ஞையுமிக்கவர்களுக்கு கவலை தருகின்றது. ஆனால் , குறிப்பிட்ட பிள்ளைகளின் பெற்றோர்களோ தமது பிள்ளைகள் அவ்வாறாயினும் தமிழைப் பேசுகிறார்களே என்று மன ஆறுதல் அடைகின்றனர். இந்தப் போக்கு இங்கு விவாதத்திற்குரிய கருப்பொருளாகியுமுள்ளது. தமிழை மறந்தால் தமிழ் கலாச்சாரமும் மறந்து போகும் தாய் நாட்டுப்பற்றும் இல்லாதொழியும் என்று ஒரு சாராரும்.
ஆங்கிலத்தைப் பயிலும் மொழியாகவும் தமிழை வீட்டின் பேச்சு மொழியா



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கவும் ( இரு மொழிக்கொள்கை அடிப்படையில் ) கொண்டால் சிக்கலில்லை என்று மற்றுமொரு சாராரும் வாதிடுகின்றனர். வீட்டில் பிள்ளைகள் "வீடியோ கசற்" மூலம் தமிழ் சினிமா பார்த்தாலும் தமிழ் சொற்களை அவற்றிலிருந்து பொறுக்கி" பேசுவார்கள் எனச் சொல்பவர்களும் இருக்கின்றனர்.

எது எப்படியிருந்த போதிலும் இந்த மொழிப்பிரச்சினை குறித்து இங்கு வாழும் தமிழர்கள் (பெற்றோர்) தீவிரமாக பேசத் தொடங்கியுள்ளனர். தாயகத்தில் இரண்டாம் மொழியாகவும் முன்னர் முதல் மொழியாகவும் ஆங்கிலத்தையே நம்மவர்கள் கற்றதனால் இங்கு "சிக்கல்" குறைவுதான்.

அமைப்புகள்

ஈழத்தமிழர்களின் வரவு பெருகப்பெருக எப்படி தமிழ்க் கடைகளின் எண்ணிக்கை பெருகுமோ அவ்வாறே அங்கம் வகிக்கும் அமைப்புகளின் எண்ணிக்கையும் அதிகரிக்கின்றன. விக்டோறியா மாநிலத்தில் மாத்திரம் பத்துக்கும் அதிகமான அமைப்புகள். இவை சங்கங்களாக, கழகங்களாக, ஒன்றியமாக, பேரவைகளாக, வட்டங்களாக, குழுக்களாக செயற்படுகின்றன.

1986 வரையில் 'ஒன்றுகூடல்' 'சந்திப்பு' 'விருந்து' எனச் செயற்பட்ட அமைப்புக்கூட " தமிழ்ப்பிரக்ஞையுடன்" சிந்திக்கத் தொடங்கியுள்ளது.
காரணம் - 1986 இன்பின்பு இங்கு வரத் தொடங்கிய சமூக, கலை, இலக்கிய உணர்வு மிக்க இளம் சமுதாயம்தான். உலகெங்கும் கிளைகள் அமைத்து புலிகள் இயக்கத்தின் தேவைகளுக்காக செயல்படும் ஒருங்கிணைப் புக்குழு உட்பட பல்வேறு அமைப்புகளும் தமிழ் விழாக்களை நடத்துகின்றன. இந்த விழாக்களின் முன்னோடியாக விக்டோறியா மாநிலம் திகழ்கின்றது. இங்கிருந்து 'மரபு' 'அக்கினிக்குஞ்சு' 'அவுஸ்திரேலிய முரசு' முதலான சிற்றிதழ் களும் வெளியிடப்படுகின்றன. அவ்வப்போது நூல் வெளியீடுகளும் இடம் பெறுகின்றன.
இலங்கையில் வன்செயல்களினால் பாதிப்புற்ற தமிழ் மக்களுக்கு உதவும் ( கல்வி, தொழில், புனர்வாழ்வு ) அமைப்புகளும் தீவிரமாக இயங்குகின்றன. இதனால் ஏனைய மாநிலங்களில் வாழும் தமிழர்கள் " விக்டோரியாவின் " " விக்டரி " ( VICTORY ) மீது ஆழ்ந்த கவனம் செலுத்தி இவ்வழியை தாமும் பின்பற்றத் தொடங்கி உள்ளனர். இம்மாநிலங்களில் தமிழ் வானொலிச் சேவைகளுக்கும் குறைவில்லை .

குவின்ஸ்லாந்து மாநிலத்தின் "பிரிஸ்பேர்ன் தமிழ் ஒலி" வானொலி நிகழ்ச்சி களில்" அனுபவம் பேசியது" ஏனையவற்றில் "ஏதோ பேசப்படுகிறது" என்பது தான் கட்டுரையாளரின் கணிப்பு.

பிரிஸ்பேர்ன் தமிழ் ஒலியில் இலங்கை வானொலியில் பணிபுரிந்து அனுப வம் பெற்ற ரட்ணம் கந்தசாமி, வாசுதேவன் (இவர் அண்மையில் இறந்து விட்டார்) ஆகியோர் நிகழ்ச்சிகளை மிகத்தரமாக தொகுத்து வழங்குகிறார்கள்.

வாழ்வும் - பொருளாதாரமும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

பருவ காலம் இங்கு எப்படி நிச்சயமற்றதோ அதே போன்று வேலையும் நிச்சயமற்றதாகியுள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக இங்கு RECESSION.
வேலை இல்லா திண்டாட்டம் தலைதூக்கியதனால் வங்கிக்கடனில் வீடு வாங்கியவர்கள், கார் வாங்கியவர்கள் கவலைப்படுகின்றனர். கணவனும் மனைவியும் உழைத்தால்தான் வீடுவாங்கமுடியும் என்ற நம்பிக்கை தமிழர்களிடம் மட்டுமல்ல ஏனைய இனத்தவர்களிடமும்தான்.

வீடு ஒரு தேவை - வாகனம் மிக அத்தியாவசியத்தேவை. வாடகை வீட்டில் அல்லது FLAT இல் குடியிருக்கலாம். "வாழ் நாள் பூராவும் வாடகை கொடுப்பதா இன்னும் கொஞ்சம் அதிகம் கொடுத்தால் சுமார் 25 வருடங்களில் சொந்தமாகிவிடும் ஒரு நல்ல வசதியான வீடு" என்ற எதிர்பார்ப்பினால் வீடு வாங்கும் கலாசாரம் வளர்கின்றது. வீட்டு விலைகளின் ஏற்ற இறக்கங்கள் விவாதிக்கப்படுகிறது.
RECESSION இனால் வங்கியின் வட்டிவிகிதம் குறைந்தமையினால் எங்கள் தமிழ் மக்களின் "வீடு வாங்கும்" ஆர்வம் அதிகரித்துள்ளது.
சீட்டுப்பிடித்தல் வட்டிக்குப் பணம் கொடுத்தல், பெறுதல் -"ரோலிங்" செய்தல் முதலான கருமங்களும் "ஊரில் நடந்ததைப்போன்று" தொடருகின்றன.

இயந்திரமயமான வாழ்வில் இக்கருமங்கள் STRUGGLE ஆகியுள்ளன. சர்வதேச ஒலிம்பிக் விளையாட்டை விக்டோரியா மாநிலம் கைநழுவவிட்டமைக்கும் மேற்குறிப்பிட்ட RECESSION தான் காரணம். ஒலிம்பிக் நடந்திருப்பின் இங்கு வேலை இல்லாத் திண்டாட்டம் குறைந்திருக்கும் என்பது நம்மவர்களின் கணிப்பு.

அடுத்த ஒலிம்பிக் 96ல் சிட்னியில் நடக்கவிருப்பதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதனால் "சிட்னி"யை நோக்கி வேலைக்காக படையெடுக்கலாமா என்ற சிந்தனையும் தோன்றியுள்ளது.

தமிழைப்பயில எப்படி தமிழ்ப்பாடசாலைகள் உருவாகிஇருக்கின்றதோ - அதேபோன்று பரதக்கலை பயலவும் பல நடன ஆசிரியைகள் நடனவகுப்புக்களை நடத்துகின்றனர்.
பெருந்தொகைப்பணம் செலவிட்டு அரங்கேற்றங்களும் நடைபெறுகின்றன. இந்த அரங்கேற்றங்களும் "மரபு" களுக்குட்பட்ட சடங்குகளாகவே காட்சியளிக்கின்றன. புதிய பரிசோதனைகளை மேற்கொள்ள இந்த நடனஆசிரியர்கள் இன்னும் தயாரில்லை. நடனம் தொடர்பான விமர்சனங்கள் மீது இவர்களுக்கு ஆர்வமும் இருந்ததில்லை. தம்மை உயர்த்தி -ஏற்றிப் போற்றி எழுதினாற் போதும் என்பதே அவர்களின் நிலைப்பாடாகிவிட்டது.
நடனம் தொடர்பான கருத்தரங்குகளுக்கும் அவர்களின் வருகை குறைவு. நடன வகுப்புக்களை வருமானம் பெறும் தொழிலாகத்தான் இவர்கள் கருதுகிறார்களோ என்று நடனத்துறை ஆர்வலர்கள் எண்ணுகின்றனர்.

இவை போக - திருமணங்கள் -பிறந்த நாள் கொண்டாட்டங்கள் -திருமண



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நினைவுநாள் (ANNIVERSARY) -புதுவீடு குடிபுகுதல் -பூப்புனித நீராட்டு "சாமத்தி"யச்சடங்குகள் முதலான யாவும் கோலாகலமாக நடைபெறுகின்றன.

தாயகத்தின் போர்க்கொடுமைகள் -அழிவுகள் -தமிழர் அரசியல் வரலாறுகள் -ஜி. ஜி. பொன்னம்பலத்தின் மேடைப்பேச்சுக்கள் -அமிர்தலிங்கத்தின் பாராளமன்ற விவாதங்கள் -அடங்காத்தமிழன் சுந்தரலிங்கத்தின் கோமாளித்தனங்கள் -இத்தியாதி இந்த வைபவங்களில் வழக்கம்போன்று உரையாடப்பட்டு, "என்ன இருந்தாலும் எங்கட ஊர்மாதிரி வருமா" -என்ற ஏக்கப்பெருமூச்சுடன் பேச்சுக்கு முத்தாய்ப்பு வைக்கும் நாகரீகம் தமிழர்க்கே சொந்தமானது. இந்த நாகரீகம் மேற்சொன்ன வைபவங்களில் குறிப்பிடத்தக்க அம்சம். வேறு என்னதான் பேசுவது ?
ஆயுதப்போராட்டம் சரியா -வெற்றி கிட்டுமா -அழிவுதான் தொடருமா -எந்த வழியில் இவர்களுக்கு உதவமுடியும் -எமக்கு இதுபற்றிப்பேசத் தகுதியுண்டா என்றெல்லாம் விவாதித்து பொழுது போக்குபவர்களும் இருக்கிறார்கள்.

கருமமே கண்ணாக இருந்து பல்வேறு வழிகளில் தாயகத்தில் துன்பப்பட்டவர்களுக்கும் -களத்தில் நிற்பவர்களுக்கும் ஆக்கபூர்வமாக (பேச்சைக்குறைத்து) உதவுபவர்களும் இருக்கிறார்கள்.

இந்நிலைமை ஈழத்தமிழர்கள் புலம் பெயர்ந்த அனைத்து நாடுகளுக்கும் பொதுவானதுதான்.
அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்பட்ட எந்த ஒரு தேசத்திலும் "மன அமைதிக்கு மருந்து" தேடப்படுகிறது.
அடிப்படைத் தேவைகள் பூர்த்திசெய்யப்படாது ஆயுதப்போராட்டம் தொடரும் எந்த ஒரு தேசத்திலும் பாதுகாப்பும் இல்லை -மன அமைதியுமில்லை.

"உனக்கும் கீழேவாழ்பவர் கோடி நினைத்துப்பார்த்து நிம்மதி நாடு.." என்ற கவிஞர் கண்ணதாசனின் பாடல் வரிகள் புலம் பெயர்ந்த ஈழத்தமிழர்களுக்கு மட்டுமல்ல -தேவைகளுக்காகவும் -சௌகரியங்களுக்காகவும் STRUGGLE பண்ணிக்கொண்டிருக்கும் அனைவருக்கும் சமர்ப்பணம். ○

ஓசை

நன்றி

கணனி
எழுத்துப்பதிவு
றஜினி துரைசிங்கம்
பிரதாயினி
மாதவன்
ஸ்ரீஸ்கந்தராஜா

ஓசையின் வளர்ச்சியிற் பங்கேற்கும்
**தமிழாலயம், ஆசியா, றஜனிபதிப்பகம்,**
மற்றும் நண்பர்களுக்கும்.

அட்டைப் படம் : 'EGYPTOMANIA'



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சந்தி

சந்தைக்குப் போக ஒரு பாதை
காலை பாடசாலைக்குப் போக ஒரு பாதை
பின்னேரம்,
குந்ததான்றில் போயிருந்து
கள்ளுக் குடிக்கின்ற
சந்தையர் வீட்டுக்குப்
போக ஒரு பாதை

இம்மூன்றும் வந்து
சந்திக்கும் இடம்தானெம்
ஊர்ச்சந்தி என்று
சொல்லிடுவார் அப்பா.

பள்ளிக்குப் போக ஒரு பாதை
தாளங்கள் தப்பாது பாட்டுகளைச்
சொல்லிக் கொடுக்கின்ற
பாடகியின் வீட்டுக்கு ஒரு பாதை.
பின்னல் நடை உடைகள்
பிந்திவந்த நாகரிகம்
இன்ன பிற பற்றிப் பேசுகிற சிநேகிதியர்
வந்துசெல்ல மறு பாதை.

இத்திசைகள் சந்திப்பில்
முச்சந்தி அறிவாள்
தங்கச்சி.

கடலுக்குப் போக ஒரு பாதை
ஊரின்
குளக்கரைக்குப் போக மறு பாதை
பட்டத்துக்குப் போயிரவு திரும்புகையில்
களவெடுத்துப்
பலாப்பழத்தை ருசிப்பதற்குத் தோதாக
இன்னுமொரு பாதை

என
இவைகள் சந்தித்தல்
ஊர்ச்சந்தி எனக்கு.

அதிசயம்தான்
ஆனாலும் உண்மையிது
எனதம்மா அந்தச்
சந்தியினைக் கண்டதில்லை.

- இளவாலை விஜயேந்திரன் -

# அகதி வாழ்வு

சோமுகக் காற்றில்

பஞ்சாக
தூக்கி வீசப்பட்ட
ஒரு அந்நிய தேசத்தில்
என் வாழ்வை
எங்கே தேடுவேன்

அகதி வாழ்வின்
அவலமும்
நிற முகூர்த்தத்தில்
வெள்ளையாக இல்லாமையும்
நையாண்டிப் பேச்சுக்கள்
துளைத்தெடுக்க
வாழ்வு கூனிக் குறுகும்

வயல் எலிகளாய்
இவர்களும்
வதங்கி நானுமாக
எத்தனை காலம் தான்
சமரசம் செய்ய

என் வீட்டுத்
தோட்டத்தில்
சுதந்திரமாக உலாவிய
நாட்களை
எப்படி மறக்க ?

நாளைய விடியலை எண்ணி
கடிகாரத்தைப் பார்க்கிறேன்
அது என்னை
முறாய்க்கிறது

வாழ்வு !

அதுவோ தன்பாட்டிலும்
நானோ என்பாட்டிலுமாக
ஒரு சமாந்தர
நிலையில்.

- குப்பிளான் ஜெகன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரிஸில் நாங்கள்

- சௌமி.

**பா**ஷை தெரியாமல் ஒரு நாட்டில இருக்கிறது எவ்வளவு கஷ்டமென்றது அனுபவத்தில தான் உணரமுடியுது.
சீ... ஒவ்வரு விஷயத்துக்கும் ஒவ்வொருத்தனுக்கு தொந்தரவைக் குடுத்துக் கொண்டு... "மொழிப் புறோக்கர்" மாரைக் கூட்டிக் கொண்டு போகலாமெண்டால் 500 பிராங்குக்கு யார் வீட்ட போவன் ?
தலையிடி தாங்க முடியேல்ல. கபாலக்குத்து எண்டுறது இதுதானோ?

நாளையிண்டைக்கு மறுநாள் தான் நண்பனுக்கு லீவு.
இண்டைய குத்துக்கு நாளையிண்டைக்கு மறுநாளுக்கு "றாந்தேவு" எடுத்துக் கொண்டு நண்பனும் நானும் அந்த தர்மாஸ்பத்திரியில் போய் நின்றோம்.

பாரிஸிலும் தர்மாஸ்பத்திரியா ?
இருக்கு. ஆனால் அங்க போனால் வருத்தம் கூடும் என்றதும் அனுபவத்தில தான் உணரமுடிந்தது.
நோயாளிகள், நோயாளிகளாகக் கணக்கெடுக்கப்படுவதில்லை. விடிய ஏழு மணிக்குப் போய் நிண்டால் தான் "நம்பர்" உண்டு. அதுவும் இடிபட்டுக் கொண்டு.

நாங்கள் நம்பர் எடுத்துக் கொண்டு டாக்டருக்காகக் காத்திருந்தோம்.
நண்பகல் தாண்டிவிட்டது.

பசி வேறு வயிற்றைக் கிழித்தது.
ஒரு பிரெஞ்சுப் பெண்மணி - வைத்தியசாலை சிற்றூழியர் போல இருக்கவேண்டும் -வந்து ஏதேதோ சொன்னாள். எல்லோருக்குமாக.
ஒன்றும் புரியவில்லை.
நண்பனைத் தேடினேன். சற்றுத் தள்ளி ஏதோ அலுவலாக நின்றான்.
என்னுடைய பேந்தல் முழியைப் பார்த்த இன்னொரு தமிழன்பன் தானாகவே வந்து மொழி பெயர்த்தான்.
மகிழ்ச்சியாக இருந்தது. யாருக்கோ மொழி பெயர்க்க வந்தவனாம்.

"மத்தியானம் சாப்பிடாதவர்கள் வந்து கன்ரீனில சாப்பிட்டிட்டுப் போய் இருக்கட்டாம்"

தள்ளி நின்ற நண்பனை நெருங்கிச் சுரண்டினேன். 'வா வா கெதியாப் போய் வெட்டிட்டுவருவம்" என்றேன் உதட்டுக்குள்.

"எங்க" என்றான்.

அறிந்த விஷயத்தைச் சொன்னேன்.
நண்பன் விழுந்து விழுந்து சிரித்தான். "அட அவள் சொன்னது அதில்ல. உணவு ஆரோக்கியம் தொடர்பான கருத்தரங்கு நடக்குதாம். கலந்துகொள்ளவிரும்பிறவையள வந்து கலந்து கொள்ளட்டாம்"

எனக்கு மொழிபெயர்த்தவனைத் தேடினேன்.
இன்னொரு மூலையில் என்னைப் போல புதிதாக வந்த ஒரு சிறுவனுக்கு ஏதேதோ ஸீரியஸாக அளந்து கொண்டிருந்தான்.

சிறிது நேரத்திற்கெல்லாம் ஒரு தமிழ்ப் பெயர் அழைக்கப்பட இருவரும் உள்ளே போனார்கள்.

அதே மொழிபெயர்ப்பாளன் !

சிவ சிவா என்ன நடக்கப் போகுதோ?
"வேள்விக்கிடாய்" ஒன்று நினைவில் மின்னி மறைந்தது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆவீன மழை பொழிய இல்லம் வீழ ..?




○ சிறுகதை ○

- ப.வி. சிறிரங்கன் -

ஆவீன மழை பொழிய இல்லம் வீழ....
இங்கு எதுவும் ஈனவில்லை, கடும் மழையும் பொழியவில்லை. எனினும், என்வீடு வீழ்ந்தது, சிதறுதேங்காய் போன்று சிதறியபடியே கற்கள் உருண்டன.

கூடவே கோதாரிபுடிச்ச உடம்பும் சிதறிப் பிய்ந்தது.
ஆவீன மழைபொழிய இல்லம் வீழ....
நாசீயேவ குண்டு பொழிய இல்லம் வீழ மெய் சிதற
அகத்தடியாள் விம்மியழ வாரீசு வதங்கித்துவள....

இருப்பைக்காக்கத்தாம் யாவும்.

ஈழத்தைவிட்டு ஜேர்மனியில் வாழ்வதும், சாவதும் இருப்பைப்பற்றிய கனவின் உந்துதல்தாம்.

நீண்டு வளையும் உணர்வுகளுக்கு குறியீடு எதுவுமில்லை.
சிதறிய கற்களுக்குள் சின்னதாய் முனகல்.
மனைவி.
ஒலி.
எதிரொலி!

என் செவிப்பறை இரைச்சலில் வலுவிழந்தது.
பிரபஞ்ச இரைச்சல்.
ஒலியைத்தவிர வேறெதுவுமில்லை. அத்வைதம் மனதில் விரிந்தது.
ஒலியே அநாதி!
சற்றுமுன் வெடித்த குண்டின் ஒலி எனக்கு அநாதியாகவே பட்டது.
ஈழத்துப்பிரஜை என்ற உந்துதலோ என்னவோ!
அகத்தடியாள் மெய்நோக அடிமை சாக...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் அகத்தடியாள் அழுதாள்.
மேய்நோக நோக விம்மி விம்மியழுதாள்
அடிமை ?
இவ்லோகத்தின் அடிமை??
தான் அடிமையென்று உணர்வதற்குள்ளேயே அடிமை செத்தது.

என் வீரியத்தின் மகுடம் துவண்டு கிடந்தது. மூச்சில்லை. முகங்கற்குவியலுக்குள்.
நாடி நரம்புகள் வலுவிழக்க, என்னால் அவனைப்பார்க்க முடியவில்லை. உச்சியிலிருந்து குருதி கசிந்தது.
அவன்மீது கட்டப்பட்ட கனவுகள்கோடி. தவிடுபொடி யாவும்.
என் மீது நான் கொள்ளும் பச்சோதாபம் அவனுருவில் வலிமை சேரும்.
எனக்காக எதிர்காலம் முற்றுப்புள்ளியாகிப் போனபோது, அவன் எனக்கு ஆரம்பத்தொடரானான். இதற்குக் குண்டு முற்றுப்புள்ளி வடிவில் வந்து சேர்ந்தது.

இயலாமை மீண்டும் உச்சியில் ஏறியமர்ந்து ஊனப்படுத்தியது என்னை.
அவன் மனிதத்தை இறுகப்பற்றியிருந்தான்.
குருதியினால் அதை தூய்மைப்படுத்தவா?. . .
போன கிழமைதாம் அது தபாலில் வந்தது. சுவிசிலிருக்கும் சில தமிழ் நண்பர்களின் முயற்சி அது.
மனிதம் மீது கவிந்த வெறுப்புத்தானே குண்டுகள் வடிவில் குடிகளுக்குள் வருகின்றன?
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
வழியியலே கடன்காரன் மறித்துக்கொள்ள. . . .
இருப்பதேவாடகைக் குடியில் இதற்குள் விளைவிப்பதற்கேது நிலம்?

ஒருநாளைக்கு உடம்புக்கு முடியாதுபோனால், வாடகை வீட்டு ஞாபகம், 'கிருஷ்ணனின் பிரமாண்ட காட்சியில் வாயில் விரியும் கோறையாக. . . . . , அதற்குள் 'மானுடம் புழுவாக, நெழியும் காட்சியாக விரியும்.

நேற்றும் வேலைக்குப் போனபோது என்னுடன் வேலைபார்க்கும் என் நண்பன் ஞானத்தின் பெயரை நேர அட்டவணையிலிருந்து நீக்கியிருந்தார்கள். போனமாதம் வேறொரு தொழிலாளியை வீட்டுக்கு அனுப்பியபோது தட்டந்தனியனாக நின்று எதிர்த்தவன். டொச்சில் ' AUSBEUTUNG SYSTEME, (சுரண்டல் பொறிமுறை) என்று கோசம் போட்டவன்.

நேற்று. . .
இன்று நான், என் குடும்பம் வெடிகுண்டுப்புகைக்குள் குருதி சிந்தி. . . உயிர் கொடுத்து. . .
இடிபாடுகளுக்குள் இருந்து, என்னால் எதுவும் செய்ய முடியவில்லை.
வேலைக்குப் போகமுடியாமல் நேர்ந்ததை எயண்ண அது பயமாகி என் வீட்டு இழப்பைக்கூட மறக்கடிக்கிறது சில விநாடிகள்.
டொச் லாண்ட (Deutchland) புகைகளின் பின்னே. . .
எனக்கு, ஈழம் இப்போது சிறப்பானதாகப் பட்டது. யுத்தத்தை மறுத்து.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தூக்கம் வரும்போது தூங்கி, பசிவரும்போது கொட்டாவிவிட்டு, மிஞ்சினால் மூக்கறச்சிக் கீரையுடன் காலந்தள்ளி... அமைதியாய் உடல் அசைந்து உயிர் தாங்கும்.
டொச்லாண்ட் எனக்கு எல்லாம் வழங்கியிருந்தது.
ஆனால், குண்டை எப்போது வழங்குமென்று தெரியாமற் போய்விட்டது!
தெரிந்திருந்தால்....
என் வீரியம்... என் கனவு.... என் மனைவி....
நான், அகோர இடிபாடுகளுக்கிடையில் இருந்து என்னை விடுவித்து, என் மனைவியை.... என் மழலையை அண்மிக்க முயற்சித்து தோற்றேன்.
சில நிமிடங்கள் கழிய
கீக், கீக் ஒலி செவிகளில் பட்டுத்தெறித்தன.
இது எனக்கு அதே குண்டு வெடிப்பின் ஒலியை ஞாபகமூட்டின.
நான் பிரபஞ்ச இரைச்சலுக்குள்....
இப்போது அத்வைதம் அம்மணமாய் எனக்குள் சதுராடியது.
சிவப்பு வான்களில் வந்தவர்கள் ஓடியடித்து எமை அண்மித்தனர்.
அவர்கள் Vof fuf காரர்கள் (அவசர அழைப்புக்காரர்கள்) கற்குவியல்களுக்குள் ளிருந்து என் மழமையை இழுத்தெடுத்தார்கள். அது, துவண்டு விட்டது!
நான் அப்பன் என்று கூறிக்கொள்ள இயவில்லை. அப்பனுக்குரிய முறையில் அவனைப்பார்க்கவில்லை. அவன், வாழ்நாளில் பலமணிநேரங் களை நான் அவனக்காக செலுத்தாமல் புத்தகங்களுடன் செலுத்தினேன். மழலையொலி கேட்டு ஆனந்தமடையாமல் நூல்களுக்குள் புழுவாகிப்போன தாலேயோ என்னவோ அவன் என்னை விட்டு இப்போது வெகுதூரம் சென்றுவிட்டான். நான், எனக்குள் நொந்து வெதும்பினேன்.
இனி, இங்கு எந்த சவக்காலையில் நிம்மதியைத் தேடுமோ?
நான் இதையறியேன்.
ஏதோவொரு மூலையில் உணர்வு மரத்தவளாய் மனைவி.
அவள் விழிகள் வீங்கி நீர் சுரந்து... அகோரமான வாழ்வுப்படலத்தை சொல்லாமற் சொன்னது.
'இரு விழி சிந்தும் நீரை பாராதே என்
இதயம் மகிழ்வதைப்பார்!, என்று அவைகள் கூறவில்லை
இயற்கை வலிமையுடையது.
சூட்சுமமாக சிலவற்றைச் சொல்லும்.
மனைவியின் விழிகள் எனக்கு இப்படியே பட்டது.
தன் தொப்புள் கொடியுடன் இணைத்து வைத்த இயற்கை தற்போது தன்னிடமிருந்து பறித்துக்கொண்டதாகப்பிதற்றினாள். துவண்டதை அணைத்து மூர்ச்சையானாள்.
அவள் உடலெங்கும் இரத்தக்காயங்கள். தலையிலிருந்து குருதி வடிந்து அவள் கூந்தலை சிவப்பாக்கியது.
என் குழந்தையின் பால்போச்சி ஒரு மூலையில் சிதறாமல் கிடந்தது.

---

ஈழம் இப்போது எனக்குச் சிறப்பானதாகப் பட்டது.
தூக்கம் வரும்போது தூங்கி பசிவரும் போது
கொட்டாவி விட்டு, மிஞ்சினால் மூக்கறச்சிக்கீரையுடன்
காலந்தள்ளி.. அமைதியாய் உடல் அசைந்து
உயிர் தாங்கும்.

---



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என் குழந்தையும் இப்படி...
என் விழிகள் பனித்து மீசை வழியாக உதட்டை அடைந்தது. உப்புநீர். சீதை சிந்திய கண்ணீர் மலைபோன்ற எதனூடே சென்று எங்கோ அடைந்த தாம். எனக்குள் ஒரு கம்பன் இருந்தால் எப்படி வர்ணிப்பானோ தெரியாது.

ராமாயணத்தை சுவைபட விளக்கிய ஆசிரியர் சபாரெட்ணம் என் விழிமுன் வந்து போனார்.
எல்லாம் கனவுபோல் விரிந்து கொண்டன.
என் மனைவியையும் என் மழலையையும் கிடத்தியும் எடுத்தும் சென்றார் கள்.
என்னைக் கைத்தாங்கலாய் கூட்டிச்சென்றார்கள்.
நேரம், அதிகாலை நான்கை நகரவைத்தியசாலைக்குள் காட்டியது.
எனக்கு மருத்துவ விடுப்புத்துண்டு பத்துநாளைக்கு எழுதப்பட்டது.
கூடவே உடற்சிராய்ப்புக்கு பத்துக்கள் போடப்பட்டது. மனைவியை விபத்து வாட்டில் போட்டு குருதியேற்றினார்கள். அவள் கடுமையாக குண்டடி பட்டுவிட்டாள்.
நான் 'என் பிள்ளையை எங்கு எடுத்துச் சென்றார்களோ' என்று ஏங்கித் தவித்தேன்.
மனைவியின் உடல்நிலை இன்னும் பெரிய பேரிடியை எனக்கு வழங் கிற்று. இவற்றையெல்லாம் உணர்ந்துகொள்ள எனக்கு உணர்வும், உடல் இயக்கமும் இருந்தது.
என்ன பாவம் செய்தேனோ தெரியாது!
புண்ணியம் செய்திருந்தால் கூடவே, நானும் போயிருப்பேன். இப்போது நான்...

இருள் விடிந்து காலை மணி ஏழாகியது .
என் உடலில் வலுவிருந்தது.
வேலை ஞாபகத்திற்கு வர மருத்துவ விடுப்புத்துண்டு வழி வகுத்தது.
அத்துடன் வேலைத்தலம் நோக்கிப்போவதாக டாக்டரிடம் கூறி, மனைவி யைப்பார்த்து மனம் நொந்து வேலைத்தளத்திற்குச் செல்லக்கிளம்பினேன்.
வழியில் ஞானம் எதிர்ப்பட்டான்.
"என்ன மச்சான் உடம்பெல்லாம் கட்டுக்கள்."
நான் மௌனமாகியிருந்தேன்.
"மச்சான் போன மாதம் வேண்டின ஆயிரத்தையும் தாவன்ராப்பா, வீட்டுக்காரர் கொழும்பில வந்து நிற்கினம். இப்ப அவையளோட ரெலிபோன் கதைச்சிட்டு வரேக்கேதான் நீயும் கடவுளேயெண்டு நேரில வாறாய். காசைத் தாவன்ரா"
ஆவின மழை பொழிய இல்லம் வீழ
அகத்தடியாள் மெய்நோக அடிமை சாக
மாவீரம்போகுதென்று விதை கொண்டோட
வழியிலே கடன் காரன் மறித்துக் கொள்ளச்...

வேலை போகுதென்று மருத்துவ விடுப்புக்கொண்டோட
வழியிலே கடன் காரன் மறித்துக்கொள்ளச்
சாவீடு என் வீட்டில் நிகழ...
நான் விழி பிதுங்கி நிற்க...



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஞானம் என் நிலைமைகளை அறியும் நிலையிலில்லை. பத்தாண்டுகளுக் குப்பின் பெற்றோர்களுடன் உறவாடிய நினைவில் அவன் தன்னை மறந்திருந் தான்.
பின்னேரம் உம்மைச் சந்திக்கிறேன், என்றேன்.
'சரி மச்சான், ஏதோ சிந்தனைவயப்பட்டவனாய் விடை பெற்றான்.
அவனைப் பிரிந்து கிளம்பினேன்.
வானம் அழத் தொடங்கியது.
எனக்காக?...

குண்டுச் சிராய்ப்பினால் ஏற்பட்ட காயங்கள் வலியை அதிகமாக்கின எனக்கு.
நிம்மதி இல்லை.
என் மழலை பற்றிய கனவுகள்
வாழ்வின்மீது வெறுமை கவ்வியது.
வேலை ஏன்?,
மருந்து விடுப்பேன்?
எல்லாம் போனபின் இவையிருந்து இலாபமென்ன!
பொன் எழில்கொள் மேனியைக்
கண்ணநீரினால் கழுவி ஆடுவேனோ?
மீண்டும் வைத்தியசாலை நோக்கி ஓடினேன்
இடையில், விம்மி விம்மி அழுது வீங்கினேன்.
என் செல்வத்தின் எழில் முகத்தைப் பார்க்க மனம் அவாப்பட்டது.
அவன் பொங்கி எழும் முழுநிலவுக்கு ஒப்பானவன்; ஆனால் அகதி.
கண்கள் மீண்டும் பனித்தன.
விழி நீரினூடே அவன் மலர்ந்தான்!
விழிநீரிலாடே அவன் மலர்ந்தான்!
குயிலும் கரும்பும் செழுந்தேனும்
குயிலும் யாழும் கொழும்பாகும்
அயிலும் அமுதம் சுவைதீர்த்த
மொழியைப்பிரிந்தான் அழியானோ!..

சீதைக்கும் இராமனுக்குமா இது பொருந்தும்.?
எனக்கும்தாம்!
என் மழலையை எந்தச் சவக்காலைக்கு எடுத்துச் சென்றிருப்பார்கள்.?
மனைவியின் நிலை எப்படியோ? கேள்விகள் நீண்டன .
இரத்தம் ஏற்றினார்கள்.

எய்ட்ஸ் இரத்தம் வேண்டாம். பிளஸ்மா மூலம் வைத்தியம் பார்க்கச் சொன்னேன்.
டாக்டர்கள் கேட்கவில்லை.
அவள் நிலைமையை நானறியேன்.
ஓடினேன், ஓடினேன், என் குழந்தை நினைவால், அவள் நினைவால்!
வைத்தியசாலை அண்மித்தது.
என்னவளின் கட்டிலைச் சுற்றி பத்துக்கு மேற்பட்ட கருப்புத்தலைகள் தென்பட்டன.
'என்ன தம்பி உமக்கு இப்படி?... பெரியவர் ஒருவர் நா தளதளக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

கேள்விக்குறியால் ஆறுதல் படுத்தினார்.
ஞானமும் மௌனமாகித் தலைகுனிந்து அவர்களுள் நின்றான்.
மனைவி கோமாவில் இருந்தாள்.
நான் தலைமை வைத்தியரிடம்என் மழலை பற்றிய விபரம் அறியச் செல்வதாய் அவர்களனைவருக்கும் கூறிச்சென்றேன்.
என் மழலையைப்பார்க்க யாவரும் வருவதாய் சொன்னார்கள்.
பதில் கிடைத்தது.

தென் சவக்காலையில் மழலையின் உடலிருப்பதாய் பதில் வந்தது.
ஓடினேன், மீண்டும்.
அவர்களும் பின் தொடர்ந்தார்கள்.
பஸ், டிராம், கார் யாவுமே மெதுவாகச் செல்வதாகவுணர்ந்தேன்.
இதனாற் கால்களினால் ஓடினேன், ஓடினேன்.
பின் தொடர்ந்தவர்கள் எவரையும் திரும்பியபோது காணவில்லை.
இடைவழியில் களைப்புற்று வீதியோரம் வீழ்ந்தேன்.
இதயம் பலமாக அடித்தது, நெஞ்சு வலியெடுத்தது.
மணி சுழன்றது. மால்வரை
சுழன்றது, மதியோர் எண் சுழன்றது. சுழன்றது.
அவ் வெறி கடல் ஏழும்
விண் சுழன்றது, சுழன்றது.
கதிரொடு மதியும்.... என்று கம்பன்சொன்னதுபோல்நான் சுழன்றேன்.
வாய் மட்டும் அசைந்தது.

ஆவீன மழைபொழிய இல்லம் வீழ
    அகத்தடியாள் மெய்நோக அடிமைசாக
மாவீரம் போகுதென்று விதை கொண்டோட
    வழியிலே கடன்காரன் மறித்துக்கொள்ளச்
சாவோலை கொண்டொருவன் எதிரே தோன்றத்
    தள்ளவொண விருந்து வர சர்ப்பந்தீண்டக்
கோவேந்தர் உழுதுண்ட கடமை கேட்கச்
    குருக்கள் வந்து தட்சனை கொடு என்றாரே. எனப்புலம்பினேன்.

எனக்கு நீர்த்தாகம் எடுத்தது, நா வரண்டு கண்கள் இருண்டன.
சாவோலை கொண்டு யாரும் எதிரே தோன்றவில்லை. அது என் வீட்டினிலேயே நிகழ்ந்தது.
அகதி வாழ்வில் விருந்துக்கு வர யாருமில்லை.
கோவேந்தர்கள் கடமை கேட்க வந்தார்கள். குருக்கள் வடிவில் போன கிழமை...
அவர்கள், அவசரகால யுத்தநிதி என் விருப்பை அறியாமலே ஐந்நூறு மார்க் என எழுதி ரசீது தந்து பணம் அபகரித்தார்கள்.
இவையாவும் காட்சியுருவாகின.
கண்களை இருள் முழுமையாக கவ்வியது.
நான் மூர்ச்சையானேன்.
நினைவு திரும்பியபோது ஒரு வைத்தியசாலைக் கட்டிலில் கிடப்பது புரிந்தது.
கண்ணெதிரே என் மழலை ஓடியாடுவது புலப்பட்டது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

விழிகளை கசக்கி மீண்டும் பார்வையைக் குவித்தேன்
கண்ணீர் மட்டும் நிஷமாகின.
விழிகளை இறுக மூடினேன்.
மனைவியின் ஞாபகம் பின் தொடர்ந்தது.
அகத்தடியாள் மெய்நோக.....
அவள் இறக்கமாட்டாள் தன் மழலையின் உடலை பார்க்கும் வரை.
வைத்தியசாலைக் கட்டிலைவிட்டு எழ முயன்றேன். முடியவில்லை. உடல் பல வீனப்பட்டுப் போய்விட்டது.
மீண்டும் என் மழலையின் பேச்சொலி செவிகளிற் பட்டுத்தெறித்தன.
இப்போது கண்களில் இருந்து நீர் வரவில்லை.
வரண்ட பார்வையை சாளரத்துக்கூடாக வெளியில் செலுத்தினேன்
வானத்தில் முழுநிலவு வட்டமிட்டது. அது என் மழலையின் நிர்மலமான தோற்றத்தை உரித்துவைத்தாற்போல காட்டி நிற்க

என் வாய் மட்டும் ஆவின மழைபொழிய இல்லம் வீழ?..... என முணுமுணுக்க விழிகள் பனித்தன.

●

# தமிழ்ச் சிறுகதைக்களஞ்சியம்

ஈழத்து இலக்கிய வளர்ச்சியின் போக்குகளைப் பதிவு செய்து, நாளைய தலைமுறையினரிடம் அடையாளம் காண்பிக்கும்முகமாக சிறுகதைக் களஞ்சியம் ஒன்றை உருவாக்கும் பணியில் ஈழத்து எழுத்தாளர்களினதும் வெளிநாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்களினதும் ஆதரவு கோரப்படுகிறது.

தலைமுறை அடிப்படையில் நான்கு பாகங்களாக இச்சிறுகதைக்களஞ்சியம் உருவாகும். ஈழத்து இலக்கிய முன்னோடிகளினதும் தற்போதைய புதிய தலைமுறை எழுத்தாளர்களினதும் சிறுகதைகள் இக்களஞ்சியத்தில் இடம்பெறும்.

வாசகர்களும் இந்தப்பாரிய பணிக்கு ஒத்துழைப்பு வழங்க முடியும்.

தாம் பெரிதும் விரும்பிய தரமான சிறுகதையொன்றை தேர்வுசெய்து – அதனை எழுதியவரின் வாழ்க்கை, இலக்கியப்பணி முதலான குறிப்புகளுடன் அனுப்பிவைக்கலாம். எழுதியவரின் புகைப்படம் இருப்பின் விரும்பத்தக்கது.

மறைந்த படைப்பாளிகள் முதல் இன்றும் தமது ஆற்றலை வெளிப்படுத்துபவர்கள் வரையில் இக்களஞ்சிய தொகுப்புகளில் இடம்பெறுவர்.

தமிழக எழுத்தாளர் இந்திரா பார்த்தசாரதி, மற்றும் அவுஸ்திரேலியாவில் வதியும் எழுத்தாளர்கள் எஸ். பொன்னுத்துரை (எஸ். பொ.), மாத்தளை சோமு, லெ. முருகபூபதி ஆகியோர் இச்சிறுகதைக் களஞ்சியத்தின் தொகுப்பாளர்களாக செயற்படுகின்றனர்.

இக்களஞ்சியம் தொடர்பாக வாசகர்களினதும் எழுத்தாளர்களினதும் கருத்துக்களும் கவனத்தில் கொள்ளப்படும்.

சிறுகதைகளை அனுப்பவேண்டிய முகவரி: –

L. Muruga poopathy
170. Hothlyn Drive.
Craigieburn
Victoria - 3064.
Australia



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஆசியா பதிப்பகம்

பழந்தமிழ் இலக்கிய நூல்களான பண்டிதமணி. சி. கணபதிப்பிள்ளை அவர்களின் "இலக்கிய வழி", மாதகல். மயில்வாகனப்புலவர் எழுதிய "யாழ்ப்பாண வைபவ மாலை" ஆகிய நூல்களை ஆய்வாளர்களுக்காகவும், வளரும் இலக்கிய ஆர்வலர்களுக்காகவும் எமது கைக்கெட்டிய மூலப்பிரதியினை போட்டோ பிரதி செய்து நூலாக்கித்தருகிறோம். பிரதிகள் தேவைப்படுவோர் தபாற்செலவு, போட்டோ பிரதிச் செலவுகளை அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

**Asseay**
*3, Allee Paul Leautaud,*
*95200 Sarcelles,*
*France.*

## இலக்கிய வழி

இந்நூல், பொன்னம்பலபிள்ளையை மத்தியாக வைத்து , அவர் காலத்துச் சிவசம்புப்புலவரையும், அதற்கு முன் சின்னத்தம்பிப் புலவர் பாரியந்தமானவர்களையும் , சிவசம்புப் புலவருக்குப் பின் நமது காலத்திலிருந்த சோமசுந்தரப் புலவர் மஹாலிங்கசிவம் என்பவர்களையும் ஊடுருவி நடப்பதை ஒருவாறு சுட்டிக் காட்டுவது. மேலும், இரட்டையர், காளமேகம், புகழேந்தி என்று தொடங்கிச் சிவகாமி சரிதைக்கு வந்து, பின் மேலே எழுந்து கம்பரிலே சற்று நேரந் தரித்துத் திருவள்ளுவரை வணங்கி நல்வாழ்வு பெற்றுக் கற்றறிந்தாரேத்துங் கலியைத் தீண்டி முற்றுறுகின்றது.



வெளிவந்து விட்டது !

சோலைக்கிளியின்

ஆணிவேர் அறுந்த நான்

*Tél : 39 90 89 70*
*Fax : 34 19 13 54*



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அந்தக் காட்டுப் பூமரம்

இன்றிரவு,
ஒரு காட்டுப் பூமரத்தை நான் பிரசவித்தேன்.
பூக்கள் நிறைந்திருந்தன நான் பிரசவித்த பூமரத்தில்.
பறவைகளும் கத்தின.

கோடான கோடி வண்ணத்துப் பூச்சிகள்
நான் பிரசவித்த பூமரத்தைச்
சுற்றிச் சுற்றிப் பறந்தன.
நிலவு
வானத்தின்
முக்கால் தூரம் வந்துவிட்ட நேரம்,
நான் பிரசவித்துக் களைத்திருந்தேன்.

நான் ஆண்.
எங்கிருந்து, எப்படிக், கருக்கட்டியது
இந்தப் பூமரம்!
ஓ..... அன்று நான் , அந்தப் பயணத்தில் கண்ட
காட்டுப் பூமரத்தின் முகம்
இந்த மரத்திற்கும்!

அந்த ஆற்றின் ஓரத்தில் அந்த மரம் நிற்கிறது.
தலையில் பல வர்ணத்தில்
மை பூசியது மாதிரி
பூக்கள்.
அந்த மரத்தில் அன்று என் மனதைக்
கொளுவி வைத்துவிட்டு வந்தேன்.

ஆம், அந்த மரத்தின் முகமே
இந்த மரத்தின் முகம்
தூக்கிக் கொஞ்சி பெயர்சூட்டித் தாலாட்ட
விடியட்டும்.

சோலைக்கிளி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# காசி ஆனந்தன் கதை எழுதுகிறார்

- சி. சிவசேகரம் -

(காசிஆனந்தன் கதைகள், காசிஆனந்தன், 1992 மார்கழி, காந்தளகம், சென்னை 600 002, 93ப. இந்திய ரூபா 30. 00)

நிழலின் அருமை வெய்யிலிற் தெரியும் என்பது பழமொழி. ஈசாப் கதைகளின் அருமை காசி ஆனந்தனுடைய கதைகளை வாசிக்கும் போது நிச்சயமாகத் தெரியும். ஈசாப்பின் நீதிக் கதைகளின் அமைப்பில் மிகுந்த கவனமுண்டு. கதைகளில் வரும் விலங்குகளுடன் மனிதர் உறவுபடுத்தும் பொதுவான பண்புகளை ஈசாப் தனது கதைகள் கூறும் நீதியை வலியுறுத்தப் பயன்படுத்தியுள்ளார். கதைகளில் ஒரு எதிர்பார்ப்பை உருவாக்கிச் சுவாரசிய மான முறையில் திருப்பங்களையும் கதைகளிற் புகுத்தியிருக்கிறார். உதாரண மாக, முயலும் ஆமையும் பந்தயத்துக்கு ஓடிய கதையை நாம் அறிவோம். ஆமை வெல்லக்கூடுமா என்ற பிரச்சனையை அவர் முயலின் தூக்கத்தின் மூலம் தீர்த்து விட்டார். அவரது திறமையை அவரது கதைகள் அனைத்திலும் நம்மால் உணரமுடியும். அவரது கதைகள் ஆயிரம் இரண்டாயிரம் வருடம் நிலைத்து இன்னமும் விருப்புடன் கேட்கப்படுகின்றன என்றால், அதற்குரிய நியாயம் அவரது கதைகட்கு உள்ளேயே இருக்கிறது.

காசி ஆனந்தன் எதுகை, மோனை, உணர்ச்சி ஆகியவற்றை வைத்துக் கவிதை பண்ணினவர். அரசியற் காரணங்களால் தமிழரசுக் கட்சியின் இலக்கியப் பாசறையில் முக்கியமான ஒருவரானவர். (இது தமிழரசுக் கட்சியின் தேசியவாத அரசியலின் தத்துவ, கலை -இலக்கிய வறுமையின் விளைவாகவும் இருக்கலாம்). மற்றப்படி அவர் வெகு சராசரியான ஒரு கவிஞர் தான். அவருக்கு மரபுத் தமிழ்க் கவிதையுடன் உள்ள பரிச்சயம் கவித்துவத்துடனான பரிச்சயமாக இல்லாமற் போய்விட்டது. உணர்ச்சிக் கவிதைகளை எழுதிக் குவிப்பது போல குட்டிக் கதைகளை எப்போதோ எழுதிக் குவிக்க முற்பட்டி ருக்கிறார். விளைவு : இந்தத் தொகுதி.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காசி ஆனந்தன் பாணியில் குட்டிக் கதை எழுத வேண்டுமானால் அதற்கான எளிய விதிமுறை ஒன்று உண்டு. மூன்று கட்டங்களில் இதைத் தருகிறேன்.

முதலாவது : இதுவே, இம்மூன்றிலும் சிறிது சிரமமானது. ஆயினும் எவருக்கும் இயலுமானது. ஒரு "புதுமொழியை" உதிருங்கள். எதுகை மோனையுடன் இருப்பது சிறப்பு. ஆயினும் அவசியமில்லை. உதாரணமாக: " மேலே பார்ப்பான்; கீழே விழுவான். "

இரண்டாவது:

முதலாவது விஷயத்தில் வரும் காரியங்களைச் செய்யக்கூடிய ஒரு பிராணியை அல்லது பொருளை அல்லது ஒரு மனிதனைத் தெரிந்தெடுங்கள். அதைச் செய்யாத அல்லது செய்ய முனையாத ஏதோ ஒன்று இரண்டையும் தெரிந் தெடுங்கள்.

மூன்றாவது:

தெரிந்தெடுத்த முதலாவது பிராணியோ, பொருளோ, மனிதனோ புதுமொ ழிக்கேற்ப எதையோ செய்யப் போய் எப்படியோ முடிவதாக ஒரு சில சொற்களில் எழுதுங்கள். அதைப் பார்த்துக் கொண் டிருந்த ஒரு பிராணியோ பொருளோ மனிதனோ அதைப் பற்றி ஒரு கருத்துத் தெரிவிக்கலாம் அல்லது கேள்வி கேட்கலாம். அதற்கு மற்றப் பிராணியோ பொருளோ மனிதனோ உங்கள் "புதுமொழியைப்" பதிலாகத் தரலாம் . அல்லது கேள்வியின் உதவி யில்லாமலே யாராவது அந்தப் புதுமொழியை உதிர்க்கலாம்.

இனிக் கதையை அமைத்துப் பார்ப்போம்:

ஒரு ஒட்டகம் (அல்லது கழுதை, அல்லது யானை, அல்லது உயரமான மனிதன், அல்லது குள்ளமான மனிதன் , அல்லது குடை. . . ) மேலே பார்த்தபடி தெருவழியே . போனது (போனான்). தன் அகம்பாவத்தால் (அல்லது அசட்டையால் அல்லது கழுத்துச் சுளுக்கியதால் அல்லது சும்மா வேறு பராக்காக. . . ) அக்கம் பக்கம் பாராமலும் (நடந்தோ மிதந்தோ பறந்தோ எப்படியோ) போனது (போனான்). கீழே இருந்த குழி (அல்லது முன்னால் வந்த வண்டி அல்லது கிடந்த மலை அல்லது பறந்த ஆகாயவிமானம்) அதற்குத் தெரியவில்லை. தடுக்கியோ இடறியோ மோதியோ எப்படியோ விழுந்து தொலைத்தது (தொலைத்தான்). அதைப் பார்த்துக் கொண்டிருந்த காகம் (அல்லது மேகம் அல்லது மரம் அல்லது அம்மிக்கல் அல்லது கிழவி. . . ) அதைப் பார்த்துச் சொன்னது (சொன்னாள்).

"மேலே பார்ப்பான்
கீழே விழுவான். "

அம்மிக் கல் சொன்னதாகவும் எழுதலாம். அம்மிக் கதையை மாற்றி மரத்திடம் அம்மிக் கல் எப்படித் தெருவுக்கு வந்தது என்று யோசிக்காதீர்கள். தொண்ணூற்றெட்டு வயதுப் பாட்டி அதை வெய்யிலில் காய வைக்கத் தெருவுக்குக் கொண்டுவந்த போது சம்பவம் நடந்ததாக எழுதலாம். இல்லாவிட்டாலும்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

என்ன. தமிழர்கள் இந்த மாதிரிக் கேள்வி கேட்டுப் பழகியிருந்தால் யாரும் தமிழனுக்கு இந்த மாதிரிக் கதை விடுவார்களா!

இந்த மாதிரிக் கதை எழுதுவதற்கு அவசியமான திறமையை விடப் பச்சடிக்குத் தேங்காய் அரைப்பது எப்படி என்று தெளிவாக எழுத அதிகம் மொழி ஆற்றலும் இலக்கிய ஆளுமையும் அவசியம். அதுவும் இயலாதவர்கள் சிலபேர் கவிதை எழுதுகிறார்கள். இப்போது காசி ஆனந்தன் புதியபாதையைக் காட்டியுள்ளார். இனியாவது கவிதைக்கு வந்தது குட்டிக் கதையோடு போயிற்று என்றவாறு தமிழ்க் கவிதை பிழைக்குமா?

காசிஆனந்தன் தான், தனது கதை சொல்லும் ஆற்றலுக்கும் கற்பனை வளத்துக்கும் ஏற்றபடி எதையோ எழுதினாரென்றால், அதற்கு ஆசீர்வாதம் வழங்குகின்ற சிலரது பொன்மொழிகளைப் பார்ப்போமே. (யாரை நினைத்து அழுவது என்று தெரியாததால் நான் அழவில்லை):

"நாளைய நம் தலைமுறைக்கு வரலாற்றோடு ஒப்புமை செய்து பேச இன்றைக்கே எம் கவிஞர் எழுதி வைத்த இந்த அழகுகள் என்றும் வாழும்... திலீபத் தளிர்களாய்!"

- அறிவு மதி

"ஷேக்ஸ்பியரின் ஹாம்லெட் நாடகத்தின் உரையாடல்களில் பல, ஆங்கிலத்தில் பழமொழிகளாகி விட்டன என்பர். இத் தொகுப்பிலுள்ள ஒவ்வொரு கதையின் இறுதியிலும் பழமொழிப் பாணியிலான புதுமொழிகள் இடம் பெற்றுள்ளன. இப்புது மொழிகள் பழமொழிகளாகி நின்று நிலவும்."

- கவிஞர் இன்குலாப்

"கவிஞர் காசி ஆனந்தன் ஈசாப் ஆகியிருக்கிறார்."

- கவிஞர் அப்துல் ரகுமான்

"காலத்துக்கு வாழ்வு கொடுக்கும் இலக்கியப் படைப்புக்கள் இவை."

- மறவன்புலவு க. சச்சிதானந்தன்

இதோ மாதிரிக்கு காசி ஆனந்தனின் கதை ஒன்று:

அளவை :

அன்றாடம் ஓடிக்கொண்டிருந்த பேருந்தின் சக்கரத்தைப் பார்த்துத் தெரு கேட்டது:-

"மண் முழுவதும் சுற்றி வருகிறாயே - நீ பெற்ற அனுபவம் தான் என்ன ?"

சக்கரம் அமைதியானது.

பின்பு அது தெருவைப் பார்த்துச் சொன்னது:-

"நான் என்னையே பலமுறை சுற்றி அளந்து கொள்கிறேன் - அதனால் தான் உலகத்தையே அளந்து வருகிறேன்."

திரும்பவும் தெருவைப் பார்த்துப் "புரிகிறதா?" என்று கேட்டது சக்கரம்.

அது சொன்னது:-

"தன்னை அளந்தவன்
மண்ணை அளந்தவன்"

(முகட்டில் மாட்டியிருந்த மின்விசிறியும் தரையிற் சுற்றிக்கொண்டிருந்த பம்பரமும் ஆளையாள் பார்த்துத் தலையில் அடித்துக் கொண்டன. -சி. சி.)



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

காசி ஆனந்தனுடைய அண்மைய குட்டிக் கதைகள் சில "ஹைக்கூ கதைகள்" என்ற பேரில் "சுபமங்களா"வில் விதந்துரைக்கப்பட்டு மறுபிரசுரமாகியுள்ளன. ஒரு சில "எரிமலையி" ல் வந்துள்ளன. காசி ஆனந்தனின் குட்டிக் கதைகள் இன்னமும் தரத்தில் அவரது கவிதைகள் போலவே உள்ளன. (ரசனை என்பது அகச் சார்பான விஷயமும் தானே!)

நிற்க. நூலின் அச்சுப் பதிவு நேர்த்தியானது. இடையிடை கதைக்குப் பொருத்தமற்று அமைந்தாலும் கதைகளுடன் வரும் சித்திரங்களைக் கதைகளை விட மேலாக ரசிக்க முடிந்தது. ○

# குட்டிக்கதை இலக்கியம் பற்றிச் சில வரிகள்...

- சி. ஜகேந்திரன்

குட்டிக்கதைகட்கு நீண்ட வரலாறு உண்டு. ஈஸப் கதைகள் பல மொழிகளிலும் புழங்குகின்றன. குட்டிக் கதைகளைச் சங்கிலித் தொடராக அமைத்த பஞ்சதந்திரக் கதைகள் இந்திய மண்ணுக்குரியன. புத்த சமய மரபில் வந்த ஜாதகக் கதைகளும் குட்டிக்கதைகளாகக் கருதத் தக்கனவே. சீன மரபில் நீதிகளைப் புகட்டும் குட்டிக் கதைகள் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளன. மேற்கூறியவாறான குட்டிக்கதைகள் அற.நீதி போதனைகளை நோக்கமாகக் கொண்டவை. இவற்றினின்றும் வேறுபட்ட குட்டிக் கதைகள் பிற்காலத்தில் தோன்றின. தெனாலிராமன் கதைகள் என்று தமிழிலும் அந்தரே கதைகள் என்று சிங்களத்திலும் முல்லா(நஸ்ருதின்) கதைகள் என்று மேற்காசியாவிலும் அவாந்தி கதைகளெனச் சில நாடுகளிலும் பரவிய குட்டிக்கதைகள் நீதி போதனையை விடப் புத்திக் கூர்மையையும் நகைச் சுவையையும் வலியுறுத்தின. பழைய நீதிக் கதைகளில் நகைச்சுவையை நாம் காண முடியுமேயாயினும் தெனாலிராமன் கதைகளிலும் அவற்றின் மூலமான முல்லா கதைகளிலும் நகைச்சு வைக்கே முதலிடம் தரப்படுகிறது. விக்கிரமாதித்தன் கதைகளின் நீளம் முற்குறிப்பிட்ட கதைகளினதை விடச் சற்றே அதிகமானது. அவற்றின் அமைப்பும் தன்மையும் அவற்றை முற்குறிப்பிட்ட குட்டிக்கதைகளினின்று வேறுபடுத்துகின்றன. கிராமியக் கதை வழக்கில் உள்ள கதைகளும் பொதுவாகக் குட்டிக்கதைகளாக நாம் அடையாளங் காண்பவற்றுள் அடங்கமாட்டா. பிற்காலத்தைய நீதிக்கதைகளும் பெரும்பாலும் குட்டிக் கதைகளின் விளிம்பில் நிற்கின்றன.

மேற்கிற் குட்டிக்கதைகள் பிற்காலத்திற் சிறார்கட்கான கதைகளாகவும் நகைச்சுவைக்காகவும் போதனைக்காகவும் உருவாகியுள்ளன. நவீன சிறுகதை



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாவல் இலக்கியவடிவங்கள் போன்று குட்டிக்கதை ஆசிரியரை இங்கு குறிப்பிடாமல் இருக்கமுடியாது. ஜேம்ஸ் தேபர்(JAMES THURBER) எனும் அமெரிக்க இலக்கியவாதி, சிறுகதைகளிலும் உரைச்சித்திரங்களிலும் தேர்ந்தவர் அவர் எழுதிய 'நமது காலத்திற்கான குட்டிக்கதைகள்" (FABLES FOR OUR TIME) எனும் தொகுப்பும் மரபு சார்ந்த குட்டிக்கதைகளை அழகாகத் திரித்து நீதிக்கதைகள் கூறும் நீதிகளைக் கேள்விக்குள்ளாக்கிச் சிரிக்க வைப்பன.

இந்திய மரபிற் கடந்த நூற்றாண்டுக்குள் வாழ்ந்த ஒரு சிறந்த குட்டிக்கதை ஆசிரியரைக் குறிப்பிடுவதாயின் ராமகிருஷ்ணரைக் கூறலாம். மிக எளிமையான வாழ்க்கையை மேற்கொண்ட ஒரு சிறந்த வேதாந்தியும் ஞானியுமான இவர் தனது சிந்தனைகளை விளக்குவதற்குக் குட்டிக்கதைகளை மிகவும் சாதுர்யமாகக்கையாண்டார். அவரது கதைகளில் அன்றாட வாழ்க்கை அனுபவங்கள் முக்கியத்துவம் பெற்றன. மிகவுஞ் சிக்கலான தத்துவங்களை எளிமையான முறையில விளக்க இவை மிகவும் பயன்பட்டன. அவரது கதைகளிலிருந்து எனக்குப் பிடித்த ஒரு உதாரணத்தைக் கீழே தருகிறேன். கதையின் விவரங்களிற் பிசகிருக்கலாம். சாராம்சம் சரியாகவே உள்ளது.

> ஒருபடித்த மனிதர் படியாத ஒரு படகோட்டியுடன் ஆற்றைக் கடந்து மறுகரைக்குப் போய்க் கொண்டிருந்தார். ஆறு மிகவும் அகலமானது நீரோட்டமும் அதிகம் எனவே பயணம் மெல்லவே நடந்தது. படித்தவர் படகோட்டியிடம் பேச்சுக் கொடுத்தார்.
>
> "உனக்குத் தத்துவம் தெரியுமா?"
>
> "தெரியாது."
>
> "உன் வாழ்க்கையில் கால்வாசி வீணாகிவிட்டது. சரி உனக்குக் கணிதமாவது தெரியுமா?"
>
> "தெரியாது."
>
> "உன் வாழ்க்கையில் அரைவாசி வீணாகி விட்டது. உனக்குஇலக்கணம் தெரியுமா?"
>
> "தெரியாது."
>
> "உன் வாழ்க்கையில் முக்கால்வாசி வீணாகி விட்டது."
>
> படித்தவர் மேலுந் தொடரு முன், படகோட்டி அவரிடங் கேட்டார் :
>
> "ஐயா உங்களுக்கு நீந்தத் தெரியுமா?"
>
> "தெரியாது."
>
> "அப்படியானால் உங்கள் முழு வாழ்வுமே வீணாகப் போகப் போகிறது. ஏனென்றாற் படகில் உடைப்பேற்பட்டு விட்டது. அது விரைவிற் அமிழ்ந்து விடும்."

இந்தக் கதையை எத்தனையோ விஷயங்களை விளக்கப் பயன்படுத்தலாம். ராமகிருஷ்ணர் எவ்வளவு தூரம் மனித அனுபவத்தைச் சார்ந்து நின்றார் என்பதை இது போன்ற பல உதாரணங்கள் மூலம் நாம் அறியலாம். டாஓ, ஸென், கொன்பூஸிய, பௌத்த மரபுகளில் வரும் குட்டிக்கதைகளிலும் சாதாரண வாழ்க்கையின் அனுபவங்கட்கு முக்கிய இடமுண்டு.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தமிழிற் கதாப்பிரசங்கம் செய்வோரும் சமயப் பிரசாரகர்களும் குட்டிக்கதைக
ளைப் பயன்படுத்துவது வழமை. இவை சிலசமயம் விகடத் துணுக்குகளை
ஒத்திருப்பன. சிலசமயம் நீதிபோதனைக்கு அதிகம் அழுத்தம் தருவன.
எவ்வாறாயினும் பேச்சைக் கேட்போரைக் கவர்ந்திழுக்கப் பயன்படும் இக்
கதைகளில் நகைச்சுவை இழையோடுவது பெரும்பாலும் தவிர்க்கவியலாதது.

தமிழில் ஒரு முக்கியமான குட்டிக்கதை எழுத்தாளர் ராஜாஜி என அறியப்
பட்ட ராஜகோபாலாசாரியர் ஆவார். மரபு சார்ந்த நெறிகளையும் சமுதாய
விழுமியங்களையும் வலியுறுத்தவே அவர் தனது கதைகளைப் பாவித்தார்.
அவர் போன்று வேறு பலரும் தமிழ் நாட்டில் நீதிக் கதைகளை எழுதியுள்ள
னர். இடதுசாரி அரசியல் முனைப்பிற் குட்டிக்கதைகளை எழுதிய ஒருவர்
இலங்கையின் முற்போக்கு எழுத்தாளருள் ஒருவரான பெனடிக்ற் பாலன்.
இவரது குட்டிக்கதைகள் குமரன் சஞ்சிகையில் வந்தன. இவை 1970 களி
நடுவில் நூல் வடிவம் பெற்றன.

குட்டிக்கதை என்ற வடிவம் இன்று மேலுஞ் சிறிது முக்கியத்துவம் பெற்றுள்
ளது. காசி ஆனந்தனுடைய குட்டிக்கதைகள் அண்மையில் நூல் வடிவம்
பெற்றுள்ளன. குட்டிக்கதை என்ற வடிவம் வெறும் அரட்டையாகவும் விஷமத்
தனமான வம்பளப்பாகவும் கூடக் கையாளப்படுகிறது. எனினும் செய்நேர்த்தி
யில் மரபில் வந்த கதைகளைத் தமிழின் சமகாலக் குட்டிக்கதைகளால் மீற
முடியவில்லை. குட்டிக்கதைகட்கு ஒரு புதிய இலக்கிய, அழகியற் பரிமா
ணத்தை இனிவரும் எழுத்தாளர் பரம்பரையிடமாவது எதிர்பார்க்கலாமா?

ரஜனி பதிப்பகம்
தமிழாலயம் புத்தகசாலை
இணைந்து வழங்கும்

ஈழத்துப் படைப்பாளிகளின்

நூல் கண்காட்சி

பாரிஸ் கலையரசர் மண்டபத்தில்
நடைபெறவிருக்கும் இந்த கண்காட்சியில் உங்கள் நூல்களும் இடம்பெற உதவுங்கள்.

79, AV. DES M. DE CHATEAUBRIANT
93700 DRANCY
FRANCE



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ஈழத்துப் போரில் இறந்து போன இராணுவ வீரர்களுக்காகவும் இனி இறக்கப் போகும் இராணுவ வீரர்களுக்காகவும் -நொண்டி, குருடு, செவிடான இராணுவ வீரர்களுக்காகவுமாக... நாடு முழுவதும் கார்த்திகை மாதம்(1993) உண்டியல் ரீதியாக நிதி சேகரித்தார்கள். இந் நிதி சேகரிப்பில் அழகான இளங்குமரிகள் ஈடுபடுத்தப்பட் டிருந்ததைக் காணக் கூடியதாக இருந்தது. உண்டியலில் பணம் போடுபவர்களுக்கு அவர்கள் அழகான செஞ்சிவப்பு நிறமான "பொப்பி" மலர்களை அன்பளிப்புச் செய்தார்கள். இந்த விடயதானத்தை வைத்து எழுந்த கவிதை இது.

## "பொப்பி மலரும் அழகான அவளும் நானும் ...."

அந்த அதிகாலைப் பொழுதும்
"பொப்பி" மலருமாய்
ஒருத்தி----
அவள் முகம்
"பொப்பி" மலரை விடவும்-----
அதன் சிவப்பை விடவும்....
அவள் :
விசேஷமானவள்.
சிரித்து ...
"பொப்பி" மலர்
விரிந்திருப்பதைப் போல்..
பின்னர்
பணப் பேழையையும்
"பொப்பி" மலரையும்
என்னையும்
மாறி மாறி
அவள் கண்கள்....
அவை
"பொப்பி" மலரை விடவும்
ஒளிர்வானவையாகவும்
இன்னும்
துலங்குவனவாயும்...
அந்த அதிகாலையில்
மலர் கொண்டு
வரவேற்கும்
அவளை
எனக்கும் மனதுக்கும்
பிடித்தனவாய்...
"ஹலோ" என்பதாய்
ஓர் சில
வார்த்தைப் பருக்கைகளை
அந்தப் புறா
விழுங்கிக் கொண்டது.

செத்த இராணுவ வீரனை
ஒருமுறை எண்ண
மறுத்த மனம்
எழும்பி வரவா போகிறான்.
தொலைப்புகள் கடந்த
ஒற்றுமை பற்றியதாய்
பிரவாகம்.
உண்மையாய் வேண்டுவதெல்லாம்
அவையே...
அவளைப் பார்த்து
மீண்டும்
குசலமான சொற்கள்.
பின்னர் பரிமாற்றம்
பின்னர்
கலப்புத் திருமணம் பற்றியும்
"பொப்பி" மலர் பற்றியும்...
இன்னும் இன்னும்....
அவளது அசைவில்
இசைவும் உண்டானதாய்....
அவளும் நானும்
"பொப்பி" மலரானோம்.
கண் மடல்கள்
படபடக்க
அவள் "பொப்பி" மலரை
இசை விற்காயும்
இணை விற்காயும்
தந்தாள்.
கைகளைப் பரிமாறிப்
பெற்றுக் கொண்டோம்.
இனத்தை ஒற்றுமையாக்கிய
"பொப்பி" மலருக்கும்
இறந்த இராணுவ வீரனுக்கும்
சிறந்த காணிக்கையாக...
அவளும் நானும் ஆனோம்.
"பொப்பி" மலரைப் போலவும்
அதன் மென்மை போலவும்.

- இளைய அப்துல்லாஹ் -



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# பாரீஸில் எகிப்தோமானியா
# EGYPTOMANIA IN LOUVRE

எகிப்திய வரலாறு, நாகரீகம், குறிப்புக்கள், தொல்பொருட்கள் பற்றி விஞ்ஞானி JEAN MARCEL HUMBERT என்பவரின் 25 வருட ஆய்வுரீதியான தேடலின் முயற்சியில் உருவாக்கப்பட்டதே இந்த எகிப்தோமானியா கண்காட்சியாகும்.
பாரிஸ் LOUVRE MUSEE இலுள்ள (அரும்பொருட் காட்சியகம் ) முதலாம் நெப்போலியன் மண்டபத்தில் ஜனவரி 22 முதல் ஏப்ரல் 18 வரை இக்கண்காட்சி நடைபெறுகிறது. யூன் 9 ஆம் திகதி தொடக்கம் செப்ரெம்பர் 15 ஆம் திகதி வரை (1994) CANADA வில் OTTAWA நகரில் BEAUX ARTS மண்டபத்திலும், ஒக்ரோபர் (1994) தொடக்கம் ஜனவரி(1995) வரை AUTRICHE யில் VIENNE நகர் MUSEUM இல் நடைபெற உள்ளது.

- ந. அன்பழகன்.



அந்த LOUVRE - RIVOLI மெத்ரோ தரிப்புநிலையமே சிறிய MUSEUM தான். அதிற் காணப்படும் ஓவியம், சிற்பம் எகிப்தைப் பற்றிய பண்டைய வரலாற்றை நினைவுறுத்தும்.

அதிலிருந்து அந்த அரும்பொருட் காட்சியகம் பிரான்ஸை ஆண்ட மன்னர்களின் (PALAIS ROYEL) மாளிகையின் பின்பகுதியிலேயே அமைந்துள்ளது. அந்த மாளிகையின் மத்தியில் கண்ணாடிகளால் அமைக்கப்பட்ட பிரமிடினூடாகவே உள்ளே செல்லவேண்டும். இந்த அமைப்புகள் முன்பே அமைக்கப்பட்டிருந்தாலும், அவை இப்போது நடக்கும் எகிப்தோமானியா கண்காட்சிக்கு சார்புடையதாகவே எண்ணமுடிகிறது.

முதலாம் நெப்போலியன் மண்டபத்தில் நுழைவாயிலில் எகிப்திய சிற்பக்கலையின் சிகரமாகத் திகழும் இசுபிங்சு (SPHINX) மனித முகமும் சிங்கத்தின் உடலமைப்புக் கொண்ட செயற்கையாகச் செய்யப்பட்ட சிலை எம்மை வரவேற்கிறது. இது தஞ்சைப் பெரியகோயிலின் நந்தி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யின் தோற்றத்தை ஒத்ததாகக் காட்டியது. இக்கண்காட்சியில் 1730 ஆம் ஆண்டு முதல் 1930 ஆம் ஆண்டுவரை 200 வருடகாலத்தில் எகிப்திய நாகரீகப் பாரம்பரியத்தோடு சம்பந்தப்பட்ட, பாதிப்புக்குள்ளான அன்றாட மனித பாவனைப் பொருட்களான உணவுப் பாத்திரங்கள், மேசை, அலுமாரி, நாற்காலி, ஆயுதங்கள். கடிகாரம், மலர்ச்சாடி, கிண்ணங்கள், வாசனைத்திரவிங்கள் கொண்ட சாடி, தளபாடங்கள், உடைகள், ஆபரணங்கள் ஆகியனவும், அத்துடன் உலகப் புகழ் பெற்ற ஓவியர்களால் வரையப்பட்ட 300 ஓவியங்களும் அடங்கியுள்ளன. இந்த ஓவியங்கள் கிரேக்கம், இத்தாலி, இங்கிலாந்து, பிரான்ஸ் போன்ற நாடுகளைச் சேர்ந்த ஓவியர்களான BERNINI, CABANEL, TURNER, GAUGUIN, MUCHA, KUPKA, MATISSE, PICASSO, MAX FRNST, ULAMINCK, DENON, ஆகியவர்களினது சிறப்பான சிந்தனை கருவூலமாகவும், அறிவுக்களஞ்சியமாகவும் அமைகின்றன. மேலும் ஓவியர்களான PIRANESI வரைந்த PYRAMID OF CAIUS CESTIUS, OBELISKS, KARNAK வும், FREDERICK GOODALL வரைந்த நைல் நதியில் மிதந்துவரும் மோசே(MOISE) மீட்கப்படும் ஓவியமும், SIR EDWARD JOHN POYNTER வரைந்த ISRAEIL EN EGYPTE ஓவியமும், HANS MAKART வரைந்த கிளியோபாட்ரா நஞ்சருந்தி மரணம் பற்றிய ஓவியமும், DEVID ROBERTS வரைந்த TEMPLE D ABOU SIMBEL ஓவியமும், எகிப்திய வரலாற்றை மேலும் உயிரூட்டும் கலைகள். இந்த ஓவியங்களை ஓவியசேகரிப்பாளர்களான மகாராணி இரண்டாம் எலிசபெத், BALEN CIAGA, ELTON JOHN ஆகியோரிடமிருந்து பெறப்பட்டுள்ளது.

மேலும் ஐரோப்பிய அரும்பொருட்காட்சியகங்களிலிருந்து கி.மு. 3 ஆம் நூற்றாண்டுக்கு முன் அகழ்வாராய்ச்சியில் பெறப்பட்ட தொல் பொருட்கள் பார்வைக்கு வைக்கப் பட்டிருந்தன. அதில் குறிப்பாக கி.மு. 15 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சிறிய பிரமிட் ஒன்று. கி.மு. 380 -362 ஆண்டைச் சேர்ந்த கல்லிலான சிங்கம் நெக்டன்பு ( "LION DE NECTAMEBO ") இது 1851 ஆம் ஆண்டு சக்காராவில் புதைபொருளாய்வில் பெறப்பட்டது. கி.மு. 4 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த இரண்டு கருப்புச் சலவைக் கல்லினாலான SPHINX D AKORIS, கி.மு. 1343 ஆம் ஆண்டைச் சேர்ந்த TOUTAN KHAMMON, கருப்பு, வெள்ளை சலவைக்கல்லினாலும், மரத்தினாலும் வெட்டப்பட்ட ISIS ET OSIRIS ஆண், பெண் சிலைகளும் இதில் அடங்கும்.

கண்காட்சி மண்டபத்தில் சகல இடங்களிலும் சிறிய தொலைக்காட்சியில் எகிப்திய இசையோடு எகிப்திய வரலாற்று இடங்கள், நூதனசாலைகளைப் பற்றிய விவரணம் என்பன காட்டப்படுகின்றன. அத்துடன் அங்குள்ள சின்ன திரையில் எகிப்திய வரலாறு தொடர்பாக வெளிவந்த திரைப்படங்களான "AIDA", "CLEOPATRA", "LAND OF THE PHARAOHS", "THE MUMMY", "DES WEIBDES PHARAO", "JULIES CESAR EN EGYPT", "MOISE ET PHAROAN" ஆகியவை காண்பிக்கப்படுகின்றன. எகிப்தின் பண்டைய வரலாற்றைப் பற்றி நூற்றுக்கு மேற்பட்ட ஆராச்சியாளர்கள் பல நூல்கள் எழுதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

யுள்ளனர்.
பைபிளின் பழைய ஏற்பாட்டி லும், ஜூலியர் சீசர் வரலாற்றிலும் எகிப்தைப் பற்றிய செய்திகள் நிறையவேயுள்ளது.

உலக வரலாற்றின் பழம்பெரும் மனித நாகரீகத்தின் உறைவிடங்க ளான பண்டைய வரலாற்றுத் தன் மையை வெளிக்காட்டியவை எகிப்து, பபிலோனியா, சிரியா, ரோமேனியா, கிரேக்கம், சீனா, இந்தியா போன்ற நாடுகளாகும். கிறிஸ்து பிறப்பதற்கு முன்பே 4000 வருட நாகரிகத்தின் பொக்கிஷங் களை எகிப்து கொண்டதாகத் திகழ்கிறது. எகிப்து ஆபிரிக்காவின் வடகிழக்குப் பகுதியிலேயே உள் ளது. இங்கு பெருக்கெடுத்து ஓடும் நைல்நதியே பண்டைய மனிதனின் உறைவிடம். எகிப்து நாகரிகமே ஆபிரிக்கா, ஐரோப்பா, நாகரிகத் திற்கு வித்திட்டது என்பர் சிலர். வரலாற்று ஆசிரியரான ஏரடோட் டசு (HERODOTUS) என்பவர் கி. மு. 5 ஆம் நூற்றாண்டில் எகிப்தில் பய ணம் செய்த வேளை " நான் இங்கு கண்டதைப் போல் வேறெந்த நாட் டிலும் இத்தனை அதிசயங்களைக் கண்டதில்லை. இதை வருணிக்க வார்த்தைகள் போதாது " என்கி றார் தனது நூலில். இதேபோன்று இந்தியாவும் (சிந்துவெளி ) பழம் பெரும் நாகரீகம் பெற்ற பூமிதான்.

எகிப்திய வரலாற்றில் , மக்கள் நைல்நதிக்கரையில் வேளாண்மை யிலும், வாணிபத்திலும் சிறந்து விளங்கியபோது, நாகரிகத்தின் இன்றியமையாத பண்புகள் அவர்க ளிடையே உருவாகின. நைல்நதி கழிமுகப்பகுதியில் வடக்கேயும், தெற்கேயும் இரு அரசுகள் தோன் றின. வடக்கை ஆண்ட மீனசு (MENES) என்ற மன்னன் தெற்கே உள்ள நாட்டை வென்று இரு அரசுகளையும் கி. மு. 3400 ஆம் ஆண்டில் ஒன்றுபடுத்தினான். இவன் காலத்திலேயே பிரமிட்கள் காலம் தொடங்குகின்றது. இந்த மன்னர்கள் " பாரோக்கள் " என்று அழைக்கப்பட்டனர். இம் மன்னர் கள் பாரோவே (PAROAH) என்ற பட்டத்தோடு பெரும் தலைவர்க ளாகத் திகழ்ந்தனர். எகிப்திய மக் கள் இவர்களை இறைவனது வழித் தோன்றல்களாகக் கருதி வழிபட் டனர். இவர்கள் காலத்திலேயே இறந்தவர்களின் உடல்களைக் (MUMMY) கெடாமல் பதப்படுத்தும் கலை அறிமுகமாகிறது. இவர்க ளின் சடலங்களைக் கொண்ட கல் லறைகளே பிரமிட்களுக்குள் இருந் தன. பிரமிட்டுகளே எகிப்திய கட் டிடக்கலைக்கு சிறந்த எடுத்துக்காட் டாகும். கெய்ரோவில் உள்ள கோவு, கௌரா, கரா, சக்காரா ஆகிய நான்கும் மிக முக்கியமான பிரமிட்டுகளாகும். மெம்பிசு என்ற இடத்திலுள்ள கியாசு பாரோவால் கட்டப்பட்ட " விசே" என்ற பிரமிட் மிகப் பெரியதாகும். இது 20 இலட் சம் கற்களால் கட்டப்பட்டதாகும். இவர்கள் காலத்திலேயே யூதர் களை அடிமைகளாகத் தமது வேலைக்குப் பயன்படுத்தினர். இந்த யூதர்களுக்குப் பிறக்கும் ஆண்குழந்தைகள் யாவும் கொலை செய்யப்பட்டனர். இப்படி ஒரு யூதப் பெண் தனக்குப் பிறந்த பிள் ளையை ( பைபிள் பழைய ஏற்பாட் டில் கூறப்படும் தீர்க்கதரிசி மோசே ) கொல்ல மனமில்லாமல் ஒரு பேழையில் வைத்து நைல்நதியில் விட்டுவிட்டாள். இந்த நைல்நதி



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

தீரத்தில் நீராடிக் கொண்டிருந்த PAROAH அரசி அந்த அழகான குழந்தையை மீட்டெடுத்துத் தன்னிடம் பணிவிடை செய்யும் பெண்ணிடம் கொடுத்து வளர்த்ததாகக் கூறப்படுகிறது. இந்தத் தீர்க்கதரிசி மோசேயின் 80 வருடகால சம்பவங்கள், மோசேயைத் துன்புறுத்திய PAROAH மன்னர்கள் குலம் இறைவனால் அழிக்கப்பட்டதாகவும் பைபிளின் பழைய ஏற்பாட்டிலுள்ள கதைகள் கூறுகின்றன.

சிரியா, பலஸ்தீன நாடுகளிலிருந்து வந்த ஐக்கோசு (Hykoys) என்ற முரட்டு வகுப்பினர் எகிப்தைத் தாக்கி பல இடங்களைக்கைப்பற்றினர். இதன் பின்னர் இரும்பின் பயன் எகிப்தியருக்குத்தெரிய வந்ததாகக் கூறப்படுகிறது. எகிப்திய நாட்டின் செல்வங்களை அபகரிக்க பல நாடுகள் அதன் மீது படையெடுத்தன. கி.மு. 525 ல் பாரசீகர்களுக்கும், கி.மு. 332 ல் கிரேக்கர்களுக்கும் எகிப்து அடிமையாயிற்று. எகிப்திய அழகி கிளியோபாட்ரா தனது அழகினால் பலரை மயக்கி கி.மு. 51 ல் ஆட்சிக்கு வந்தாள். இவள் ஆட்சியில் ஆண்கள் அடிமைகளாக்கப்பட்டனர். பலர் படையெடுத்தும் தோல்வியே தழுவினர். சீசர் அந்தோனி எகிப்தின் மீது படையெடுத்து வந்தபோது கிளியோபட்ராவின் அழகில் மயங்கி அவளிற்கு அடிமையானான். கி.மு. 31 ம் ஆண்டு ரோமானியாவிலிருந்து படையெடுத்து வந்த அகஸ்டாஸ் சீசரிடம் அவளது சாகஸம் பலிக்காமையினால் நஞ்சுண்டு மடிந்தாள்.
மாறிமாறி நடைபெற்ற படையெடுப்புகளினால் எகிப்தின் பெறுமதிமிக்க பொக்கிஷங்கள் பல கவர்ந்து செல்லப்பட்டன. இதனால் எகிப்திய பண்டைய தொல்பொருட்கள் உலகில் பிரபல MUSEUM களில் இருப்பதைக் காணலாம்.



கடற்கொள்ளையன் என வருணிக்கப்படும் பிரான்ஸ் சக்கரவர்த்தி நெப்போலியன் போனபார்ட் கி.பி. 1778 ஆம் ஆண்டு எகிப்தின் மீது படையெடுப்புச் செய்து தனது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தான். அவனது நண்பனும், தொல்பொருள் ஆய்வாளருமான DOMINIQUE -VIVANT DENON ஐக் கொண்டு பெரும்புதை பொருள் ஆய்வு செய்தான். றொசட்டா (ROSATTA) கல்வெட்டு இவன் காலத்திலேயே கண்டு பிடிக்கப்பட்டது. பின்னர் இந்த கல்வெட்டை சம்போலியன் (CHAMPO-LLION) என்னும் பிரெஞ்சு மொழி நூல் வல்லாளர் தனது ஆய்வுக்க



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

ருத்துக்கள் அடங்கிய நூலாக வெளியிட்டார். நெப்போலியன் இக்காலத்தில் சுயஸ் கால்வாயை வெட்டுவதற்கான முயற்சி செய்த தாகவும், பின்னர் கைவிட்டதாவும் கூறப்படுகிறது. பின்னர் சுயஸ் கால்வாய் 1869 ல் பிரெஞ்சுக்கம்பனி ஒன்றால் வெட்டப்பட்டு திறக்கப் பட்டது.

நெப்போலியன் 1833 ம் ஆண்டு எகிப்தைவிட்டு வெளியேறியபோது (TEMPLE DE LOUQSOR)லோக்ஸோர் என்ற ஆலயத்திலிருந்த கி.மு. 13 ம் நூற்றாண்டைச்சேர்ந்த கூர்மை யான சதுரவடிவான கல்வெட் டையும், பல பெறுமதிமிக்கபொருட் களையும் பிரான்ஸ் கொண்டு வந்து சேர்த்தான். அந்த கூர்மையான சதுர வடிவான கல்வெட்டை(OBEL-ISQUE) பாரிஸில் வைப்பதற்கு இடம் தேடி 3 வருடங்களுக்குப் பின்பு 25 ஒக்ரோபர் 1836 ல் CONCORDE என்ற இடத்தில் நாற்சந்தியில் கட் டிடக்கலைஞர் HITTORF என்பவரால் இரண்டுலட்சம் மக்கள் பார்வை யாளர்களாக கூடிநிற்க கட்டப்பட் டதாகக் கூறப்பபடுகிறது.

எகிப்திய தொல்பொருள் ஆய்வில் ஓவர்டு கார்டர்(HOWARD CARTER) என்பவரால் 26 நவெம்பர் 1922ம் ஆண்டு கண்டுபிடிக்கப்பட்ட துாதன் காமன் (TOUTAN KHAMON) கல்லறை முக்கியத்துவம் வாய்ந்த தாகக் கருதப்படுகிறது. இதில் பெறுமதிமிக்க ஆச்சரியப்படத்தக்க வகையிலான பொருட்கள் கிடைத் தன. பண்டைய எகிப்தியரின் மொழி ஓவிய எழுத்து வடிவானது. ஒவ்வோரு ஓவியமும் ஒவ்வோரு கருத்தை விபரிக்கும். சிங்கத்தின் உருவம் தலைமையைக் குறிக்கும். புல்லாங்குழல் நன்மையைக் குறிக் கும். இவையே கல்வெட்டுக்களில் பதிக்கப்பட்ட மொழியாகும். பாரி ஸிலுள்ள அந்தக்கற்றுாணைப் பார்த் தாற் புரியும். எகிப்திய மொழி(HERO-GLYPHIC) எமிடோ -செமிடிசு (HAM-ITO -SEMITIC) என்ற மொழிக்குடும் பத்திலிருந்து பிறந்ததாகும். கி.மு. 3000 ஆண்டுகளுக்கு முன் வழக்கத் திலிருந்து. கி.பி. 16 ம் நூற்றாண் டுக்குப்பின் பேச்சு வழக்கற்று இறந்து விட்ட மொழியாகும். இன்று அரபு மொழியே பேசப்படு கின்றது. மதத்தால் 90 வீதம் இஸ் லாமியர்களே இருக்கிறார்கள். கெய்ரோ நகரில் மட்டும் 4000 மசூ திகள் உண்டு.

பேப்பரைஸ் என்ற புல்லிலிருந்து காகிதம் செய்து தாவரக்கோர்ந்து கரியினால் எழுதப்பட்ட பொம் பைடு நாடகம், அக்குநாடான் (AK-HNATON ) புனைந்த காவியம் உல கப் பிரசித்தி பெற்றது. எகிப்தியர்





தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

வைத்தியக்கலை, வான்நிலைத்துறையில் வல்லமை பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். அவர் வளர்த்த கலையில் கட்டிடக்கலையே உலகம் போற்றும் அளவிற்கு உயர்ந்தது. இதனாலேயே எகிப்திய கட்டிடக்கலையின் பாதிப்பு ஏனைய நாடுகளிலும் காணமுடிகிறது. பாரிஸ் நகரில் நாற்சந்தி தூபிகளிலும் (Place Dauphine Facade), நீதிமன்ற மாளிகை (Plais de Justics), Chatelet யிலுள்ள சில கட்டங்களிலும், எகிப்திய SPHINX, ISIS ET OSIRIS உருவச் சிலை வடிவமைக்கப்பட்டுள்ளதையும், மெத்ரோ. மற்றும் தெருக்களுக்கு PYRAMID, CHAMPOILLION என பெயரிட்டிருப்பதையும் காணலாம்.

பண்டைய எகிப்தின் கட்டிடக்கலை இவ்வளவு பிரமிக்கத்தக்கதாக இருப்பினும், அதனடியில் எவ்வளவு அடிமைகளின் உழைப்பும், உயிரும் கசங்கிக்கிடக்கின்றன என்ற உண்மை நெருடத்தான் செய்கின்றது.

"தமிழாலயம்"

THAMILLALAYAM

பதிப்பகம்
புத்தகசாலை
பல்பொருள் நிலையம்
70, Rue Louis Blanc
75010 PARIS

"ஈழத்துப் படைப்புக்களை ஆதரிப்போம்"

அன்பார்ந்த தமிழ் மக்களே !

எமது நாகரீக வளர்ச்சிக்கு இலக்கியங்களும் நல்ல சிந்தனைகளுமே ஆதாரமாக விளங்குகின்றன.

பலவித நெருக்கடிகளுக்கு மத்தியில் வாழும் எமது ஈழத்து சிந்தனையாளர்கள், எழுத்தாளர்கள் பலரது ஆக்கங்கள் நூல் வடிவம் பெறமுடியாத நிலையில் உறக்கமடைந்து வருகின்றன.

மாபெரும் பொக்கிஷமாக பாதுகாக்கப்பட வேண்டிய ஈழத்து இலக்கியங்கள் அச்சேற முடியாத நிலையை மாற்றி அமைக்க எம்மோடு இணைந்து செயற்பட அழைக்கின்றோம்.

எழுத்தையே உயிர்மூச்சாகக் கொண்ட ஈழத்து எழுத்தாளர்கள் பலர் தமது ஆக்கங்களை நூல் வடிவமாக்க முடியாத வறுமை நிலையில் இருந்து வருவது மிகவும் வேதனைக்குரியது.

இவர்களது ஆக்கங்களை நூலுருவாக்கி, பயனுள்ள படைப்புகளுக்கு மதிப்பளித்து ஊக்குவிக்க நாம் மேற்கொள்ள இருக்கும் எமது பணியுடன் உங்களையும் இணைந்து கொள்ள வேண்டுகிறோம்.

Tél : 42 05 88 67
Fax : 42 05 83 04

- தமிழாலயம்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



**கலை என்பது புறநிலை யதார்த்தங்களுக்கு அப்பாற்பட்டு அதற்கென உருவாக்கப்பட்டுள்ள இலக்கணங்கள், விதிகளின்படி இயங்குகிறது என்று ஒரு வாதம். குறிப்பாக, மரபுசார்ந்த கலைஞர்களால் முன்வைக்கப்படுகிறதே ?**

வாழ்க்கை என்பது குரூரமாக இருக்கிறது. கலையும், கலாச்சாரமும் செழுமையாக இருக்கிறது. இரண்டும் உண்மை. ஆனால் முரண்பாடுகள் நிறைந்த ஓர் இடைவெளியில் இருக்கின்றன. இந்த முரண்பாடுகளினூடாக, சிதறுண்டுபோகாமல் கலைஞனாக எப்படி வாழ்வது என்ற போராட்டம்தான், கலையையும், வாழ்க்கையையும் எப்படி இணைப்பது என்பதே எனது தேடலாக இருந்தது. கலையிலிருந்தும் ஒரு கலைஞராக வாழ்வதன் மூலமும், வாழ்க்கையின் குரூரங்களின் வழி என்னில் குரூரம் புகுந்து விடாமலும்,

வாழ்க்கையின் அழகியலை மேம்பாட்டுடன் பயிலவும் இயலும் என்ற நம்பிக்கைதான் எனது தேடலின் ஆதாரம். என்னைப் பொறுத்தவரை வாழ்க்கையும், கலையும் வெவ்வேறு இலக்கணங்களுக்கும், விதிகளுக்கும் உட்பட்டது என்று நினைக்கவில்லை. இரண்டிற்கும் ஒருங்கிணைப்பு எப்படி சாத்தியமாகும் என்பதைத்தான் நான் தேடிக்கொண்டிருக்கிறேன்.

**கலை சார்ந்த கலாசாரம் அரசியல் கலாசாரத்திலிருந்து விலகி இருக்கிறது. ஒன்று இன்னொன்றுக்கு அளிக்கவும் அதனின்று பெறவுமான சாத்தியம் இருக்கிறதா?**

70 - களில் ஐரோப்பிய அமெரிக்க அரசியல் தளங்களில் பெரும் கொந்தளிப்பு ஏற்பட்டது. இனவேற்றுமை, வியட்நாம் போர் போன்ற பிரச்சினைகள் பெரிதாக எழுந்தன. பெருவாரியான கலைஞர்களின் பங்களிப்பும் முன்னெடுத்துச் செல்லுதலும் இணைந்து, கலாசார இயக்கம் ஒரு புதிய வலிய பாதையாகப் பிறந்தது. Agit-Prop நாடகவகை பிரபலமாகப் பரவிய நேரமும் அதுதான். இன்றைய இந்திய சூழ்நிலையில் அரசியல் தளத்தில் கலைசார்ந்த கலாச்சாரத்திற்கு பெரிய பங்கு இருக்கிறது. இன்று அரசியல் குழுக்கள், கொடுமையாக வன்முறை மிகுந்தவையாக மாறிவிட்டன. ஒரு சமூகம் இதுபோன்ற மிருகத்தனங்களால் சூழப்பட்டு இருக்கும் போதே நாமும் கொஞ்சம் கொஞ்சமாக மனிதத்தன்மையை இழக்கிறோம். இதற்குப் பதில் என்ன ? இங்குதான் கலையின் பங்கு இருக்கிறது. கலை என்று நான் சொல்வது நிகழ்த்து வடிவத்தை மட்டுமல்ல. எல்லாமே . எப்படி மனிதம் அழியாமல் வாழ்வது என்பதே இன்றைய பிரச்சினையாக இருக்கிறது. கலை சார்ந்த கலாசாரம்தான் இழந்த மனிதத்தன்மையை நமக்கு மீட்டளிக்கும்.

'சுபமங்களா' நேர்காணலின்போது..
நடனக் கலைஞர் சந்திரலேகா அவர்கள்.

**விமர்சனத்தால்
காப்பாற்றப்படுவதை விட,
புகழ்ச்சியினால்
அழிந்து போவதையே
பெரும்பாலோர் விரும்புகின்றனர்.
- நோர்மன் வின்சென்ற் பில் -**

www.tamilarangam.net

# பனித்துளி வாழ்வு

காடடாற்று வெள்ளத்தில்
கரையொதுங்கும் படகுகளாய்
குளிர்காலத்து இருண்ட பகலொன்றில்
என் படகும் மிதந்தது.

முக்காடு அணிந்து
முகம் மறைத்த பெண்ணாய்
வெண்பனியில் இலைமறைத்து
எனை வரவேற்ற மரங்களும்

பஞ்சுப் பொதிகளாய்
மெல்லக் கீழிறங்கி
குளிர்நீர் சிந்திய பனித்துகள்களும்

மெல்லக கரைய கோடைவரும்

பகல்நேரத்துச் சிறு கனவாய்
கோடை கழிய
முகம் விறைக்க
குளிர்காற்று வீசத் தொடங்கும்

கோடையும் குளிருமாய்
வாழ்வு கிழிபட
நாளை பொரித்துக் குஞ்சாகுமென
நெஞ்சினில் அடைகாத்த
கனவுமுட்டைகள் கூழாகி உடையும்
கொஞ்சம் கொஞ்சமாக...........

"உனக்கென்ன வெளிநாட்டில்
ராசா வாழ்க்கை......"
செலவுக்குப் பணம் கேட்டு வருகின்ற
தபால்களின் கேலிகள்.

போன குளிர் காலத்தில்
பார்வைக்கு அழகாய். மெல்லத்தரையிறங்கி
உடைந்து நீராகி மறைந்த
வெண்பனித் துகள்களாய் வாழ்வு ஆனதை
யாரிடம் சொல்வேன்..........

இன்னும் எத்தனை
குளிர்காற்று மோதும் சாமங்களில்
தூக்கம் கலைந்து
தனிமைச்சிறையில் அடைபட்ட கைதியாய்
நெஞ்சில் மூச்சு அடைபட
ஓவென ஜன்னலைத் திறந்து
வயற்பரப்பில் நின்று
வானத்தை அண்ணாந்து பார்க்கும்
ஒரு ஏழை விவசாயியைப் போல
கண்களைக் கூராக்கி
பார்வையைச் செலுத்தித் தேடுவேன்
எங்கே இருக்கிறது
எனது தாயகம்.......

– அர்ச்சுனா

சுதந்திரதாகம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்